https://www.facebook.com/uthayan.print https://twitter.com/uthayanprint

# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 098 வள்ளுவர் ஆண்டு: 2046

மாசி 20, புதன்கிழமை 04.03.2015

**வானிலை**
தெளிவான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளை குளிரான காலநிலை நிலவும்

## இருநாட்டு மீனவர் பேச்சு 11 ஆம் திகதி சென்னையில்

கொழும்பு,மார்ச்.4
இலங்கை– இந்திய மீனவர்களுக்கிடையிலானபேச்சு எதிர்வரும் 11 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது. அதற்கான ஆயத்தங்களை கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

பக்.24

# மக்களின் காணிகள் மக்களுக்கே

### இராணுவம் வைத்திருப்பின் மீளப் பெற்றுக் கொடுக்கப்படும்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 4
"பொதுமக்களின் நிலங்கள் பொதுமக்களுக்கே. தேர்தலுக்கு முன்னர் கூறியதையே நான் இப்போதும் கூறுகின்றேன். இராணுவத்தினர் கைப்பற்றி வைத்திருந்தாலும், அவை பொதுமக்களுக்குரிய காணிகள்ாக இருந்தால் மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் முதல் கட்டமாகவே ஆயிரத்து நூறு ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது." – இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பக்.24

## சந்திரசிறியை மாற்றாததால் ஜனாதிபதியாக மாறினேன்!

### கூட்டத்தில் கூறிச் சிரித்தார் ஜனாதிபதி மைத்திரி

யாழ்ப்பாணம், மார்ச் 4
"வடக்கின் முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை, முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றவில்லை. அதனால் தான் நான் இப்போது ஜனாதிபதியாக முடிந்துள்ளது"– இவ்வாறு நகைச்சுவையாகக் கூறிச் சிரித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன். நேற்று நடைபெற்ற வட மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

பக்.24

## அறிக்கையை மீண்டும் தள்ளிப்போட கூடாது

கொழும்பு, மார்ச் 4
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான அறிக்கை பிற்போடப்பட்டதை ஆதரிப்பதாகப் பிரிட்டன் கூறியுள்ளது. செப்ரெம்பர் மாதத்தின் பின்னரும் அறிக்கை வெளியிடப்படுவது தாமதிக்கப்படக் கூடாது என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

பக்.22

## கீரிமலை மாளிகையால் வெறுப்படைந்த ஜனாதிபதி



யாழ்ப்பாணம், மார்ச் 4
200 கோடி ரூபா செலவில் கீரிமலையில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையைப் பார்ப்பதற்காக விரும்பிச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இறுதியில் மாளிகை யிலிருந்து வெறுப்புடன் வெளியேறினார்.

பக்.24

## ஹுசைனை சந்தித்து மங்கள பேச்சு

கொழும்பு, மார்ச் 4
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஜெனிவாவில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.
அதில் இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த ஐ.நா. நிபுணர் குழு நடத்திய விசாரணைஅறிக்கையுடன்தொடர்புடைய விவகாரங்கள் குறித்தும், இலங்கையின் மனிதஉரிமைகள்நிலைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது

பக்.22

## இனப்பிரச்சினை தீர்வுக்கு கால எல்லை வேண்டும்

### யாழ். வந்த ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் மாவை எம்.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 4
நூறு நாள் வேலைத் திட்டம் போன்று, இனப்பிரச்சினைக்கானதீர்வு காண்பதற்கும் கால எல்லை நிர்ணயிக்கப்படவேண்டும் – என்று ஜனாதிபதி மைத்திரி பாலவிடம் கோரிக்கை முன்வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.
ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

பக்.24

## தமிழரின் வாகனங்களை ஏலமிடுவது நிறுத்தப்படும்

### பாதுகாப்புச் செயலர் உறுதியளித்ததாக சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4
போர் இடம்பெற்றபோது தமிழ் மக்கள் கைவிட்டுச் சென்ற வாகனங்களை, இராணுவத்தினர் ஏலத்தில் விற்பனை செய்வதை நிறுத்துவதாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ்நாயக்கா உறுதியளித்துள்ளார் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பக்.24

## கூட்டு வன்புணர்ச்சியே சிறுமி சாவுக்கு காரணம்

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்களிடம் ஊரவர்கள் கதறல்

கிளிநொச்சி, மார்ச் 4
வவுனியா, கனகராயன் குளத்தைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி திடீரென உயிரிழந்தமைக்கு அவர் 10 பேரால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டமையே காரணம் என்று ஊரவர்கள் சந்தேகம் தெரிவித்தனர். சிறுமியின் வீட்டுக்கு நேற்றுச் சென்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களிடம் சிறுமியின் உறவினர்களும் ஊரவர்களும் இதனைத் தெரிவித்தனர்.
சம்பவத்தை மூடிமறைத்துவிட குற்றவாளிகள் முயன்று வருகின்றனர் என்றும் ஊரவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
கனகராயன் குளத்தை சேர்ந்த 16 வயது சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்தார். வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையே சிறுமியின் சாவுக்குக் காரணம் என்று கிராம மாதர் அபிவிருத்திச்

பக்.24

13 லட்சம் வெல்லுங்கள்! விவரம் உள்ளே

## காணிக் கையளிப்பை உடனே நிறுத்துங்கள்

### வடக்கு முதலமைச்சர் தடாலடி உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 4
முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுமக்களின் காணிகளைச் சுவீகரித்து இராணுவத்தினரிடம் கையளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சரும், காணி அமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார். அதையடுத்து காணி சுவீகரித்து கையளிக்கும் நடவடிக்கையில்

பக்.24

## பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 4
நெல்லியடி மத்திய கல்லூரியை அண்மித்துள்ள பகுதியில் அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டுக்குள் பட்டப்பகலில் நுழைந்த திருடன் சுமார் 8 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளான். இது குறித்து தம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுஎன்றுபொலிஸார் தெரிவித்தனர்.

பக்.24

## காணாமல்போனோர் நிலையை கூறுங்கள்

### வலியுறுத்தி இன்று யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
1996ஆம்ஆண்டுதொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணத்திலும், வன்னிப் பெருநிலப் பரப்பிலும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டும் கடத்தப்பட்டு

பக்.24

## மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபராக வாகிஸ்ட

மட்டக்களப்பு, மார்ச், 4
மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நிமால் வாகிஸ்ட நியமிக்கப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய இந்து கருணாரட்ண அண்மையில் ஓய்வு பெற்றார்.
இதனையடுத்து பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் பணிப்பாளராகக் கடமையாற்றிய நிமால் வாகிஸ்ட குறித்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
இதேவேளை, குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக பி.ஆர்.எஸ்.ஆர். நாகஹாமுல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் டி.எல்.ஆர்.ரணவீர பொலிஸ் திட்டமிடல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (த-10)

## பிள்ளையானும் பின்வாங்கினார்

**கிழக்கு முதலமைச்சருக்கு வழங்கிய ஆதரவை மீளப் பெற்றுக்கொண்டார்**

கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கிய ஆதரவை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் மீளப் பெற்றுக்கொண்டுள்ளது.
முதலமைச்சர் ஹபீஸ் நஸீருக்கு வழங்கிய ஆதரவை சுதந்திரக் கட்சி யைச் சேர்ந்தவர்கள் மீளப் பெற்றி ருந்த நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த சந்திரகாந்தன் (பிள்ளையான்), இனியபாரதி ஆகியோரும் மீளப்பெற்றுள்ளனர்.
இதுதொடர்பான கடிதத்தை அவர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோவிடம் கையளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
2012ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்புடன் இணைந்தே போட்டியிட்டிருந்தது. (ற-10)

# நேற்றுப் பதவியேற்றது கிழக்கு அமைச்சரவை

மட்டக்களப்பு, மார்ச் 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடங்கலாக கிழக்கு மாகாண அமைச்சரவை நேற்று நியமிக்கப்பட்டது.
கடந்த வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்ட இரு கிழக்கு மாகாண அமைச்சுப் பதவிகளிலும் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.
ஹாபீஸ் நஸீர் அஹமட் கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் சுற்றுலா மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகவும், சீ.தண்டாயுதபாணி கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சராகவும், கே.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண விவசாய, கிராமிய அபிவிருத்தி அமைச்சராகவும், எம்.ஐ.எம்.மன்சூர் கிழக்கு மாகாண சுகாதார, சுதேச, கூட்டு றவு மற்றும் சமூகசேவைகள் அமைச்சராகவும், ஆரியவதி கலபதிகாணி, வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர்.
இவர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோ முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டனர். கிழக்கு மாகாண அமைச்சரவையில் முதன்முதலாக இம்முறையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்கின்றது. (ற-10)

## கிழக்கு மாகாண ஆட்சி குறித்து தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு

### பிள்ளையான் தலைமையில் இரா.சம்பந்தனை சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சந்தித்தனர்

திருகோணமலை, மார்ச் 4
கிழக்கு மாகாண ஆட்சி தொடர்பில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. அதில் மாகண சபை உறுப்பினர்களான விமலதீர திஸாநாயக்க, சி.சந்திரகாந்தன், எம்.எஸ். உதுமான்லெப்பை, எம்.எல்.ஏ. அமீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.
அந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இறுதி முடிவை எடுக்க முடியும் - என்று தெரிவித்துள்ளார். (ற-10)

## வைத்தியசாலை உணவக நிலை அமைச்சு அறிக்கையிடவில்லை

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிற்றுண்டிச் சாலையைச் சிறந்த சுகாதார வசதிகளுடன் இயக்குவதற்கு உரிய கட்டட வசதி இல்லை, அதற்கான ஏற்பாடுகள் என்ன? என்பவை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மத்திய சுகாதார அமைச்சுக்கு யாழ்.நீதிமன்று உத்தர விட்டிருந்தபோதும் அந்த அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.
யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலைக்கு கடந்த காலங்களில் சரி, தற்பொழுதுசரி உரிய கட்டட வசதிகள் இருக்கவில்லை. அதனால் சுகாதார சீர்கேடு அடிக்கடி ஏற்பட்டு நோயாளர்களும், அவர்களைப் பார்க்க வருபவர்களும் மாத்திரமன்றி வைத்தியசாலைப் பணியாளர்களும் அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன், அது குறித்து முறையிட்டும் உள்ளனர். பல தடவைகள் அவற்றின் நடத்துநர்களுக்கு எதிராக வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
தற்பொழுதுள்ள சிற்றுண்டி நிலையத்திலும் சீர்கேடு இடம்பெற்றிருந்ததால் அது நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது. தற்போது வேறொரு இடத்திலிருந்து உணவு சமைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இந்நிலையில் சுகாதார அமைச்சுக்கு கட்டளை அனுப்பியிருந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் வந்தது. சுகாதார அமைச்சால் அதற்கான பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. அதையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-4)

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

### ஜனாதிபதியிடம் முதலமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4
வெசாக் தினத்தில், தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யுமாறு, வடக்கு மாகாண முதல்மைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஜனாதிபதி தலைமையில் நேற்று நடந்த வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்ற வடக்கு மாகாண முதலமைச்சர், ஆரம்பத்தில் அரச மரத்தின் புனிதத் தன்மையைப் பற்றி விளங்கப்படுத்தினார். ஜனாதிபதி பொலநறுவையைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால், அந்த மாவட்டம் பௌத்தத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்ற அடிப்படையில், அரச மரம் தொடர்பில் பாளி மொழியில் குறிப்பிடப்பட்டவற்றைச் சொன்னார். வெறுப்பிலிருந்து பரிநிர்வாணம் அடைதல் என்ற தத்துவத்தை அவர் அதில் தெரிவித்தார்.
அரசியல் பிரச்சினைகளை எங்களுடைய தலைகளால் தீர்க்க முடியாது. மனங்களால்தான் தீர்க்க முடியும். உள்ளத்தில் - மனதில் ஏற்படும் மாற்றம், நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வரும். எங்களுடைய அரசியல் - சுயலாப நிலைப்பாட்டிலிருந்து, எங்களை ஆளுவதற்கு எங்களுடைய தலைகளை அனுமதித்தால், அமைதியைக் கொண்டு வர முடியாது.
சுதந்திரமடைந்த காலத்தில் இருந்த சந்தோசம் மீண்டும் வர வேண்டும். சமூகங்களுக்கு இடையில் சந்தேகம் நீங்க வேண்டும்.
அதிகாரப் பகிர்வு என்பது, மத்திய அரசின் ஆதரவுடன், தங்களுக்கு என்ன தேவை என்பதை முடிவு செய்து, நடைமுறைப்படுத்த அனுமதிக்க வேண்டும். ஆனால் கடந்த காலங்களில், மஹிந்த ஆட்சியில், மத்தி சொல்வதை மாகாணம் கேட்டுச் செயற்படுத்த வேண்டும் என்ற நிலை இருந்தது. குறிப்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் எங்களுக்கு பிரச்சினைகளைத் தந்தன. மக்கள் மஹிந்த சிந்தனையை நிராகரித்திருந்த நிலையில், அதனை நடைமுறைப்படுத்த என்னை இணைத் தலைவராக அவர் நியமித்திருந்தார்.
இதனால்தான், 1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போதே எமது தலைவர்கள், இது தமிழ் மக்களுக்குரிய அதிகாரப் பரவலாக்கம் இல்லை - போதாது என்று தெரிவித்திருந்தனர்.
வடக்கு - கிழக்கு மாகாணங்கள் வித்தியாசமானவை. போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவை. எங்களின் தேவைகள் வேறானவை. தேவைகளின் அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டியவை. ஐ.நா. அதிகாரிகளைச் சந்திக்கும் போதும், எங்களுக்குரிய தேவை மதிப்பீட்டைச் செய்து தாருங்கள் என்று கேட்டிருக்கின்றேன்.
பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை இராணுவம் - பொலிஸ் பலவந்தமாக சுவீகரிக்கும் நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். எங்களுடைய அனுமதியில்லாமல் பெறப்பட்ட காணிகள், திருப்பி உரிமையாளரிடம் கொடுக்கப்படுவதற்கான உறுதிமொழி வழங்கப்படவில்லை. கொக்கிளாய் - மணலாறு பிரதேசங்களில், அங்கு வாழ்ந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டு, வேறு மாகாணத்தவர்கள் அங்கு குடியமர்ந்துள்ளனர்.
காணாமற்போனோர் விடயம் குறித்தும், வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்தும், நாங்கள் கவலை அடைகின்றோம். காணாமற்போனோர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள், பலர் உத்தியோகபூர்வமற்ற இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். எதிர்வரும் மே 3 ஆம் திகதி - வெசாக் தினத்தன்று - அரசியல் கைதிகள், உத்தியோகபூர்வமற்று தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யுமாறு நான் பரிந்துரைக்கலாமா ?
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த மனிதாபிமான நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் எங்களிடம் நிவாரணம் கேட்டு வருகின்றார்கள். அதற்கான நிதி எங்களிடம் இல்லை.
நெடுந்தீவுக்கான வடதாரகை படகு பொதுமக்கள் பாவனைக்காக அவர்களிடமே கையளிக்கப்பட வேண்டும். அரச திணைக்களங்களின் ஊழல்கள் விசாரிக்கப்படவில்லை. குறிப்பாக முறையற்ற அரச நியமனங்கள் தொடர்பிலும் எந்த விசாரணையும் நடக்கவில்லை. இது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (த-5)

# டக்ளஸ் எம்.பியை நேற்று கணக்கெடுக்காத மைத்திரி

### எளிமையாக நடந்தது ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் உரையை புறக்கணிக்கும் வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுச் செயற்பட்டார்.
வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் மைத்திரிபால முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தார். பலாலிக்கு விசேட விமானத்தில் வந்திறங்கிய அவர், அங்கிருந்து உலங்குவானூர்தி மூலம் யாழ். நகரிலுள்ள மாநகர சபை வளாகத்தில் வந்திறங்கினார். அங்கிருந்து, நாகவிகாரை மற்றும் நல்லூருக்குச் சென்று வழிபாடு நடத்தினார்.
அதன் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற, வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பங்கேற்றார்.

**ஒழுங்கைக் குழப்பிய எதிர்க்கட்சி**

ஜனாதிபதி மைத்திரிபால பங்கேற்ற நேற்றைய கூட்டத்துக்கு ஆசன ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனை வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழப்பியடித்தனர். கொழும்பு அரசின் அமைச்சர்கள் அமர்வதற்காக ஒதுக்கப்பட்ட முன்வரிசை ஆசனங்களில், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமர்ந்து கொண்டனர். கொழும்பு அமைச்சர்களில், டி.எம்.சுவாமிநாதன் தவிர்ந்த ஏனையோர் வருகை தரவில்லை. இதனால் அந்த வெற்றிடமான இடங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களான அங்கஜன், ரிப்கான் பதியுதீன், ஜெயதிலக, தர்மபால செனவிரத்ன ஆகியோர் அமர்ந்து கொண்டனர்.

**அமைச்சர்கள் வரவில்லை**

கொழும்பு அரசில் அங்கம் வகிக்கும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பங்கேற்கவில்லை.

**எளிமையான நிகழ்வு**

ஒருங்கிணைப்பு கூட்டம் மிக எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தது. மிகச் சிறிய ஒரே ஒரு பனர் மாத்திரமே மேடையில் கட்டப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் ஜனாதிபதி வருகை தரும்போது மிகப் பிரமாண்டமான கட்டவுட்கள், பனர்கள் வைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்த முறை மிகவும் எளிமையாகவும் - பாதுகாப்புக் கெடுபிடிகள் குறைவாகவும் இருந்தது.

**டக்ளஸை கண்டுகொள்ளாத ஜனாதிபதி**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தமிழில் உரையாற்றினார். இதனைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தனர். இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார். அவர் உரையாற்ற ஆரம்பித்ததும், மேடையிலிருந்த ஜனாதிபதி மைத்திரி, மொழி பெயர்ப்பாளருக்குச் சைகை மூலம் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டாம் என்று தெரிவித்தார். ஆனாலும் டக்ளஸ் தேவானந்தா ஒவ்வொரு வரியையும் தமிழில் வாசித்த பின்னர் நிறுத்த, மொழி பெயர்ப்பாளர் வேறு வழியின்றி மொழி பெயர்ப்புச் செய்தார். ஆனால் மேடையிலிருந்த் ஜனாதிபதி தனது வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்.

**மொழி பெயர்ப்பில் குளறுபடி**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்களத்தில் உரையாற்றினார். இதன்போது தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது. இதன்போது தவறாக மொழி பெயர்ப்புச் செய்யப்படுவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எழுந்து சென்று ஜனாதிபதி மைத்திரியிடம் சுட்டிக்காட்டினார். இதனையடுத்து மொழி பெயர்ப்பாளர் மாற்றப்பட்டார். (த-5)

BIOMEDICAL SCIENCE | 0777 692318

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

ICC CRICKET WORLD CUP 2015

இன்றைய ஆட்டம்

பாகிஸ்தான் - ஐ.அ.இராச்சியம்
காலை 6.30 மணி




ஆஸ்திரேலியா - ஆப்கான்
மதியம் 12.00 மணி




13 லட்சங்கள் WOW !
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

# கிரிக்கெட் கொண்டாட்டம்



# அடக்கியது தென்னாபிரிக்கா அடிபணிந்தது அயர்லாந்து



குழுவில் முதலிடம் பெறவேண்டுமானால் இந்த ஆட்டத்தில் கத்துக் குட்டியுடனான வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் களமிறங்கியது வில்லியர்ஸின் படை. காலிறுதிக்கு தகுதியாக வேண்டுமென்றால் மே.இ.தீவுகளின் வரிசையில் தென்னாபிரிக்காவுக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டும் என்ற வியூகத்தில் களமிறங்கியது அயர்லாந்து. நாணயச்சுழற்சியில் வெற்றியும் கூடுதல் பலமளிக்க துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்கா. உலகக்கிண்ண தொடர் ஆரம்பமானது தொடக்கம் சொதப்பி வரும் கொக். அயர்லாந்துடனும் சொதப்பவே செய்தார். கொக்கின் ஓட்டம் 1 மட்டுமே. முன்வரிசை வீரர்கள் அனைவரையும் வீழ்த்திவிட்டது போல் துள்ளிக்குதித்தனர் அயர்லாந்து. பாவம் இளங்கன்று பயமறியாது என்பது அயர்லாந்து வீரர்களின் கொண்டாட்டத்தில் தெளிவாக தெரிந்தது. பிளாசிஸ் அம்லா கூட்டணி நன்றாகவே வேலை செய்தது. இலக்குகள் விழுவதை தவிர மற்றைய சகல விடயங்களும் மைதானத்தில் அரங்கேறின. இருவரும் நல்ல போர்மில் அயர்லாந்துக்கோ பெரும் தலையிடி. இணைப்பாட்டங்கள் எகிறிக் கொண்டு சென்றன.

இடையிடையே பந்துகள் வானில் வட்டமிடவும் செய்தன. பிளாசிஸ் ஒருமுனையில் சதம் கடக்க சற்றே நேரத்தில் மறுமுனையில் அம்லாவும் சதம் கடந்தார். அணியின் ஓட்டம் 259. ஒருவாறு முடிவுக்கு வந்தது பிளாசிஸ்ஸின் ஆட்டம். களமிறங்கினார் வில்லியர்ஸ் மைதானமே அல்லோல கல்லோலப்பட்டது. இரண்டு சிக்ஸர்களுடன் ஆட்டத்தை போதும் என்று நினைத்துவிட்டார். ஆனால் அம்லாவோ விடுவதாய் இல்லை 150 ஓட்டங்களை இலகுவாக எட்டிப்பிடித்தார். இறுதிக்கட்ட தாண்டவ பணியை சிறப்பாக செய்து முடித்தது மில்லர், றொஸ் சொவ் கூட்டணி. தென்னாபிரிக்கா 411–4.

தென்னாபிரிக்காவின் புயல் வேகங்களுக்கு அயர்லாந்தால் ஈடுகொடுப்பதே மிகக் கடினம். இதில் 412 ஓட்டங்களை எப்படி பெறுவது. தோல்விதான் ஆனாலும் கௌரவ என்ற வார்த்தைக்காகக் களமிறங்கியது அயர்லாந்து. ஆரம்பத்தை ஸ்ரெயின் பிரித்து தொடக்கி விட வீறுகொண்டது அப்பொட்டின் பந்து.

பக்கம் 04

## ஹோக்லியின் மைல் கல் தற்பொழுது அம்லாவிடம்

நேற்றையதினம் அயர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சதம் கடந்து அசத்தியதன் மூலம் ஒருநாள் ஆட்டங்களில் மிகவிரைவாக 20 சதங்களை பெற்ற வீரர்களின் வரிசையில் ஹோக்லியை பின்தள்ளி தென்னாபிரிக்கா வீரர் அம்லா முதலிடம் பிடித்தார்.

இதுவரை 137ஆவது ஆட்டத்தில் 20 சதங்களை கடந்து குறைந்த இன்னிங்ஸில் இந்த மைல் கல்லை எட்டியவர் என்று ஹோக்லியின் இருந்த சாதனை அம்லா தனது 108 ஆவது ஆட்டத்திலேயே தன்பெயருக்கு மாற்றியெழுதினார். அம்லா, ஹோக்லிக்கு அடுத்த இடங்களில் முறையே வில்லியர்ஸ் (175 ஆட்டங்கள்) ரெண்டுல்கர் (197 ஆட்டங்கள்) கங்குலி (214 ஆட்டங்கள்) உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)




## ஆஸியையும் அசைப்போம்



உலகக் கிண்ணத்தில் முதல் வெற்றி பெற்று ஆப்கானிஸ்தான் வரலாறு படைக்கக் காரணமாயிருந்த ஷென்வாரி அடுத்ததாக ஆஸி. அணியை வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்துஅணியை வீழ்த்திய ஆப்கன் அணியில் ஜஷன்வாரி 96 ஓட்டங்களை விளாசினார். அடுத்தடுத்து வெற்றி பெறவே அணியினரிடத்தில் ஆவல் மிகுந்துள்ளது என்று கூறுகிறார்.

அகதிகள் முகாமில் இருந்த போது கிரிக்கெட் கற்றுக் கொண்ட ஜஷன்வாரி கூறியதாவது: முன்பு ஒன்றுமேயில்லாமல் இருந்தது. ஆப்கானிஸ்தானில் 8 அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தோமானால் ஒன்றுமேயில்லை. ஆனால் தற்போது தெருக்களில், பாடசாலைகளில் எங்கு சென்றாலும் ஆப்கனில் கிரிக்கெட். கிரிக்கெட் என்று கொடிகட்டிப் பறக்கிறது. எதிர்வரும் ஆட்டங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற

பக்கம் 04




## இந்தியாவை வீழ்த்துவோம்

'இந்திய வீரர்கள் ஹோலி பண்டிகையை கொண்டாடட்டும். நாங்கள் வெற்றியை கொண்டாடுகிறோம்' என, மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் டேரன் சமி தெரி வித்துள்ளார்.

'ஹட்ரிக்' வெற்றியுடன் இந்திய அணிபலமான அணியாக உள்ள நிலையில் நாளை மறுதினம் இந்தியா மே.இ.தீவுகள் அணிகள் பலப்பரிட்சை செய்கின்றன. இந்த ஆட்டம் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பில் சமி கூறியது– 'இந்திய அணி பலமானது. அதே நேரம், எங்கள் அணியில் ஒவ்வொரு வீரர்களும் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் கனவுடன் உள்ளோம். எனவே, இந்தியாவுடனான ஆட்டத்தில் எங்களை வீழ்த்துவது கடினம். இந்திய வீரர்கள் ஹோலி பண்டிகையை கொண்டாடட்டும். ஆனால், நாங்கள் தான் வெற்றியை கொண்டாடவுள்ளோம்.' இவ்வாறு சமி கூறினார்.

பக்கம் 04

## கத்துக்குட்டி இங்கிலாந்து கழுவி ஊற்றுகின்றனர் சொந்த நாட்டு ரசிகர்கள்

உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு பெரிய ஓட்டங்களை இலக்காக வைத்தும் இலங்கையிடம் தோல்வியடைந்த இங்கிலாந்தை அந்நாட்டு ரசிகர்களும், ஊடகங்களும் திட்டித் தீர்க்கின்றனர்.

உலகக்கிண்ண தொடரில் இதுவரை நான்கு ஆட்டங்களில் மோதியுள்ள இங்கிலாந்து அதில் 3 ஆட்டங்களில் தோல்வியைத் தழுவியுள்ளது. அதிலும் நியூஸிலாந்து மற்றும் இலங்கையிடம் படுதோல்விய[illegible]. சமீபத்தில் முடிந்த இல[illegible]கு எதிராக நடந்த ஆட்டத்தில் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள், இலங்கை அணியின் திரிமன்னே மற்றும் சங்ககாரவை முடக்க முடியாமல் தடுமாறியது ரசிகர்களை அதிகமாகவே கடுப்பாக்கி விட்டது. இதனையடுத்து அந்நாட்டு ஊடகங்களும் இங்கிலாந்து அணியை சரமாரிய திட்டி வருகிறது. மிகப் பெரிய ஓட்டங்களை எடுத்தும் கூட இங்கிலாந்து வீரர்களால் வெல்ல முடியாமல் போனது அவர்களின் இயலாமையை வெளிப்படுத்துவதாக உள்

பக்கம் 04

## வெற்றியின் பின்னர் தலையின் அசத்தல் ட்ரீட்டு.



உலகக்கிண்ணத் தொடரில் ஒவ்வொரு ஆட்டம் முடிந்ததும் சக வீரர்களுக்கு 'ட்ரீட்டு' கொடுத்து அசத்துகிறார் டோனி.

நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் தொடர் வெற்றிக்கு வீரர்களின் அசத்தல் கூட்டணியும் காரணம். ஆரம்பத்தில் பாகிஸ்தானை பதம்பார்த்த இந்த வெற்றி கூட்டணி, தென் ஆபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என சந்தித்த அத்தனை நாடுகளை யும் புரட்டியெடுத்தது.

ஒவ்வொரு வெற்றிக்குப்பின்னரும் அணித்தலைவர் டோனி, சக வீரர்களுடன் நட்பை அதிகரிக்க, புது உத்தியைக் கையாள்கிறார். இவர் பாகிஸ்தானுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் வென்றதும், ரெய்னா, அக்சர் படேலை அழைத்துக் கொண்டு அடிலெய்டில் உள்ள ஹொட்டலுக்கு மதிய உணவுக்கு சென்றார். அங்கு

பக்கம் 04

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 3 | 0 | 0 | 6 |
| இலங்கை | 2 | 1 | 0 | 4 |
| ஆஸ்திரேலியா | 1 | 0 | 1 | 3 |
| பங்களாதேஷ் | 1 | 1 | 1 | 3 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 2 | 0 | 2 |
| இங்கிலாந்து | 1 | 2 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 3 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 0 | 0 | 4 |
| தென்னாபிரிக்கா | 2 | 1 | 0 | 4 |
| அயர்லாந்து | 2 | 0 | 0 | 4 |
| மே.இ.தீவுகள் | 2 | 2 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 1 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 2 | 0 | 0 |
| பாகிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |

# அடக்கியது தென்னாபிரிக்கா அடிபணிந்தது அயர்லாந்து

2015 உலகக் கிண்ணம்

தென்னாபிரிக்கா எதிர் அயர்லாந்து
201 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி

நாணயச் சுழற்சி தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அம்லா | C ஜொய்ஸ் B மக்பிரைன் | 159 | 128 | 16 | 04 |
| ஹொக் | C வில்சன் B மோனி | 01 | 04 | 0 | 0 |
| பிளாசிஸ் | B கே.பிரைன் | 109 | 109 | 10 | 01 |
| வில்லியர்ஸ் | C என்.பிரைன் B முக்பிரைன் | 24 | 09 | 01 | 02 |
| மில்லர் | ஆட்டமிழப்பில்லை | 46 | 23 | 04 | 02 |
| ரொஸ்ஷோவ் | ஆட்டமிழப்பில்லை | 61 | 30 | 06 | 03 |
| உதிரிகள் | | | | | 11 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மோனி | 07 | 52 | 01 | 02 |
| சொரின்சன் | 06 | 76 | 0 | 0 |
| கே.பிரைன் | 07 | 95 | 01 | 0 |
| டொக்ரெல் | 10 | 56 | 0 | 0 |
| ஸ்ரார்லிங் | 10 | 68 | 0 | 0 |
| மக்பிரைன் | 10 | 63 | 02 | 0 |

TOTAL 411/4 (50)

1-12 (ஹொக்)
2- 259 (பிளாசிஸ்)
3-299 (அம்லா)
4 -301 (வில்லியர்ஸ்)

அயர்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| போட்டர்பீல்ட் | C பிளாசிஸ் B அப்பொட் | 12 | 17 | 02 | 0 |
| ஸ்ரார்லிங் | C ஹொக் B ஸ்ரெயின் | 09 | 06 | 02 | 0 |
| ஜொயிஸ் | C அம்லா B ஸ்ரெயின் | 0 | 04 | 0 | 0 |
| எம்பிரைன் | C அம்லா B அப்பொட் | 14 | 09 | 02 | 0 |
| பல்பிர்னி | C ரொஷோவ் B மோர்கல் | 58 | 71 | 07 | 0 |
| வில்சன் | LBW B அப்பொட் | 0 | 03 | 0 | 0 |
| கே.பிரைன் | C ரொஷோவ் B அப்பொட் | 48 | 65 | 03 | 01 |
| மோனி | B வில்லியர்ஸ் | 08 | 15 | 0 | 0 |
| டொக்ரெல் | B மோர்கல் | 25 | 57 | 01 | 01 |
| சொரின்சன் | C ஹொக் B மோர்கல் | 22 | 19 | 03 | 01 |
| மக்பிரைன் | ஆட்டமிழப்பில்லை | 02 | 04 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 12 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெயின் | 08 | 39 | 02 | 0 |
| அப்பொட் | 08 | 21 | 04 | 0 |
| மோர்கல் | 09 | 34 | 03 | 0 |
| ரஹீர் | 10 | 50 | 0 | 01 |
| பெக்கார்டின் | 02 | 13 | 0 | 0 |
| ரொஷோவ் | 02 | 13 | 0 | 0 |
| பிளாசிஸ் | 04 | 30 | 0 | 0 |
| வில்லியர்ஸ் | 02 | 07 | 01 | 0 |

TOTAL 210 (45)

1-17 (ஸ்ரார்லிங்)
2 - 21 (போட்டர்பீல்ட்)
3 - 21 (ஜொய்ஸ்)
4 - 42 (என்.பிரைன்)
5 - 48 (வில்சன்)
6 - 129 (பல்பிர்னி)
7 - 150 (மோனி)
8 - 167 (கே.பிரைன்)
9 - 200 (சொரின்சன்)
10 - 210 (டொக்ரெல்)

ஆட்ட நாயகன் அம்லா




ஸ்ரெயினே ஆச்சரியப்படும் அளவுக்கு நேர்த்தியான பந்துவீச்சு. கை மேல் பலன். போட்டர்பீல்ட், பிரைன், வில்சன் என வரிசையாக சிக்கினர். 48 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள். 100 ஓட்டங்களுக்குள் சுருட்டிவிட திட்டம். ஆனால் கெவின் ஓ பிரைன் தொடர்ந்தும் களத்தில் நின்றார். பிரைனுக்கு நிகராக பல்பிர்னியும் சற்று ஈடுகொடுத்து அரைச்சதம் கடந்தார். அணியின் ஓட்டம் 129. பல்பிர்னி விடைபெற்றார். எட்டாவது இலக்காக பிரைனும் அணியை கைவிட்டார். பின்வரிசை வீரர்கள் ஏதோ தம்மால் முடிந்த உதவியை செய்ய அயர்லாந்து அணி 210 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 201 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. (5,ரி)

## அதிகூடிய இலக்குகள்



| | |
|---|---|
| 13. | சவுத்தி (நியூஸிலாந்து) 4 ஆட்டங்கள் |
| 10 | போலட் (நியூஸிலாந்து) 4 ஆட்டங்கள் |
| 9 | டேவி (ஸ்கொட்லாந்து) 3 ஆட்டங்கள் |
| 9 | மோர்கல் (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |
| 9 | ரஹீர் (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |

## அதிகூடிய ஓட்டங்கள்




| | |
|---|---|
| 268 | சங்ககார (இலங்கை) 4 ஆட்டங்கள் |
| 258 | கெயில் (மே.இ.தீவுகள்) 4 ஆட்டங்கள் |
| 257 | அம்லா (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |
| 256 | திரிமன்னே (இலங்கை) 4 ஆட்டங்கள் |
| 250 | பிளாசிஸ் (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |

# கத்துக்குட்டி இங்கிலாந்து கழுவி ஊற்றுகின்றனர் சொந்த நாட்டு ரசிகர்கள்

ளது. என உள்ளூர் ஊடகங்கள் கழுவி ஊற்றுகின்றன.
மேலும் இன்றைய நவீன ஒருநாள்ஆட்டங்களில்கத்துக்குட்டிகள் போல காணப்படுகிறார்கள் கிரிக்கட்டின் தாயகமான இங்கிலாந்து வீரர்கள் என்றும், இங்கிலாந்துக்கும், உலகக்கிண்ணத்திற்கும் வெகு தூரம் உள்ளது என்பதையே இது காட்டுகிறது எனவும் இவர்களை வைத்து கிரிக்கட்டின் தாயகம் இங்கிலாந்து என சொல்வதற்கே வெட்கமாக உள்ளது என பிரபல ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது. கத்துக்குட்டிகள்கூடதற்பொழுது சிறப்பாக செயற்பட்டு தரம் வாய்ந்த அணிகளுக்கு அச்சுறுத்தலாக விளங்குகின்ற நிலையில் இங்கிலாந்து கத்துக்குட்டியையும் விட கேவலமாக செயற்படுகின்றது என ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் கழுவி ஊற்றுகின்றனர். (5,ரி)

## ஆஸியையும் அசைப்போம்

ஆசையும், வெறியும் எங்கள் அணியிடத்தில் இந்த வெற்றி ஏற்படுத்தியிருக்கிறது. அடுத்த வாரம் ஆஸ்திரேலியாவை பேர்த்தில் சந்திக்கிறோம். ஆஸ்திரேலியாவை அவ்வளவு எளிதாக விட்டுவிட மாட்டோம் என்று நம்புகிறேன். அந்த ஆட்டத்தை ஆவலுடன் அனைவரும் எதிர்பார்க்கிறோம், வெற்றி பெறுவோம் என்று நம்புகிறோம், என்றார் ஐஷன் வாரி. (5-ரி)

## இந்தியாவை வீழ்த்துவோம்

எதிரணியின் தலைவர்கள் இந்தியாவுடனான ஆட்டங்களுக்கு முன்னர் சவால் விடும் போது மௌனம் காக்கும் டோனி சமியின் கருத்துக்கும் மௌனமாகவே இருந்துள்ளார். இந்தியாவில் 'ஹோலி' பண்டிகை கொண்டாடப்படும் (மார்ச் 6) அன்று, நடக்கவுள்ள ஆட்டத்தில் சமியின் பேச்சுக்கு, இந்திய வீரர்களின் பதிலடி என்னவென்று தெரிந்துவிடும். (ரி)

## வெற்றியின் பின்னர் தலையின் அசத்தல் ட்ரீட்டு

சூடான 'கிரில் சிக்கனை' அனைவரும் ஒரு பிடி பிடித்தனர். தென்னாபிரிக்க அணிக்கெதிரான வெற்றிக்குப்பின்னர் துணைஅணித்தலைவர்விராட் ஹோக்லி, முகமது சமி ஆகியோரை அழைத்துக் கொண்டு விருந்துக்குப் புறப்பட்டார் டோனி.
யு.எ.இ. அணிக்கு எதிரான வெற்றியின் பின்னர் அஸ்வின், ரோஹித் சர்மாவை அழைத்துக்கொண்டு விருந்துக்கு புறப்பட்டார் டோனி.
இந்த புதிய அணுகு முறையால் இந்திய வீரர்களிடையே ஒற்றுமை அதிகரித்து, இந்த வெற்றி கூட்டணி மேலும் வலுவாகும் என்பதே டோனியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. (ரி,5)

# அஸ்வின் எதிர் கெய்ல், தடுமாற்றமா தாண்டவமா?





இந்தியா மே.இ.தீவுகள் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்திய சுழற் பந்துவீச்சாளர் அஸ்வின், மே.இ.தீவுகளின் கெய்ல் இருவரிலும் தற்பொழுதே பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அஸ்வின் பந்தில் கெய்ல் தடுமாறுவாரா அல்லது தாண்டவம் ஆடுவாரா என்பதே அந்த பரபரப்பான எதிர்பார்ப்பு.
கடந்த நான்கு ஐ.பி.எல்., தொடர்களில் கெய்லுக்கு எதிராக டோனி அஸ்வினை பயன்படுத்தினார். இது தொடக்கத்தில் அதிக பலனைத் தரவில்லை என்றாலும், கெய்லுக்கு எதிரான வியூகங்களை அஸ்வின் முழுமையாக அறிந்துவிட்டார். 2014 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் சீசனில் கெய்லுக்கு வீசிய 32 பந்துகளில் 20 பந்துகளை மீதப்படுத்தி இரண்டு தடவை ஆட்டமிழக்கச் செய்தார். இதைவிட வழக்கமாகவே சுழல் பந்து வீச்சில் கெய்ல் பலவீனம் உடையவர். குறிப்பாக மிக விரைவாக திரும்பும் பந்து வீச்சு, கரம் பந்துவீச்சு என்று அழைக்கப்படும் பந்துவீச்சுமுறை இவற்றுக்கு கெய்ல் தாக்குப்பிடிப்பது மிகக்கடினம். இதனால் கெய்லுக்கு எதிராக டோனி அஸ்வினை பயன்படுத்தி வியூகம் அமைப்பார். (ரி,5)

# இந்தியாவுக்கே கிண்ணம்



உலகக் கிண்ணம் போன்ற பெரிய தொடர்களுக்கான அணி இந்தியா, அதனால் உலகக் கிண்ணத்தை இந்தியா தான் வெல்லும், இந்தியாவின் திடீர் எழுச்சியின் பின்னர் தனக்கு இவ்வாறே தோன்றுவதாக ஆஸ்திரேலியாவின் நட்சத்திரம் பிராட் ஹாக் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் கூறும்போது, 'இந்திய அணியிடம் என்னை மிகவும் கவர்ந்திழுத்த அம்சம் களத்தடுப்பு. நாங்கள் விளையாடிய காலங்களில் எப்போதும் இந்திய பீல்டிங்குக்கு எதிராக கூடுதல் ரன்களை எடுக்கலாம் என்றே நாங்கள் நினைப்போம். குறிப்பாக எல்லைக்கோட்டுக்கு அருகே களத்தடுப்பு இறுக்கமாக இருக்காது. ஆனால், அன்று தென்னாப் பிரிக்காவுக்கு எதிராக டிவில்லியர்ஸ், டேவிட் மில்லர் ஆகிய இருவரையும் ரன் அவுட் செய்தனர். இதனால் ஆட்டம் திருப்புமுனை கண்டது. தென்னாபிரிக்காவிடமிருந்து ஆட்டம் பறிக்கப்பட்டது. களத்தடுப்பை திறம்படச் செய்வது இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் மீதான சுமையைக் குறைக்கிறது. இதனால்தான் கூறுகிறேன், உலகக்கிண்ணத்தை இந்திய அணியே வெல்லும் என்று கூறுகின்றேன்' என்றார். (ரி,5)

# கத்துக்குட்டியையும் கவனித்து அனுப்புவோம்




நியூஸிலாந்து அணிக்கு எதிரான தோல்வியை அடுத்து தோல்விக்கான காரணம் 'சரியான திட்டமிடுதல் இல்லை' என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் கூறினார், இதனால் அவருக்கும் பயிற்சியாளர் டேரன் லீ மேனுக்கும் மோதல் என்ற செய்திகள் உலா வரத்தொடங்கின. அந்தச் செய்திகளை ஒரு அலட்சிய தோள்குலுக்கல் மூலம் நிராகரித்த மைக்கல் கிளார்க், செய்தியாளர்களை நோக்கி, 'உங்களுக்கு என்னிடமிருந்து தலைப்புச் செய்தி கிடைக்காது' என்று கடுப்பாக தெரிவித்துள்ளார்.
இன்று ஆப்கானிஸ்தான் அணியை எதிர்த்து ஆஸ்திரேலியா விளையாடுகிறது. இந்த ஆட்டம் குறித்து செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மைக்கல் கிளார்க் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் 'இந்த ஆட்டத்துக்காக நாங்கள் நல்ல பயிற்சி எடுத்துக் கொண்டு சிறந்த தயார்நிலையில் உள்ளோம். சிறிய அணிகள், பெரிய அணிகள் என்ற கதைக்கே இடமில்லை. வாய்ப்பு எமக்கு சாதகமாக அமைந்தால் அணியை எந்தளவுக்கு பலப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு பலப்படுத்துவோம். இதைவிட வேறு தலைப்புச் செய்திகள் என்னிடமிருந்து உங்களுக்கு கிடைக்காது.
டேரன் லீ மேன் எங்களிடம் தெளிவாக என்ன எதிர்பார்க்கிறார் என்பதை கூறிவிட்டார். இலங்கைக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் நடைபெறும் ஆட்டம் குறித்து நாளைய ஆப்கன் ஆட்டம் முடிந்த பிறகு தீவிர அக்கறை செலுத்தப்படும்.
வலைப்பயிற்சியில் ஸ்டீவ் சிமித்துக்கு லேசான காயம் ஏற்பட்டது. ஆனால், அவர் மீண்டும் துடுப்பெடுத்தாடினார். அதனால் அவருக்கு ஒன்றும் இல்லை.' என்றார். (ரி)



# இலங்கை முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு நாள் ஆட்டங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கை வீரர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். இந்திய வீரர்கள் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

**அணிகளுக்கான தரவரிவை**


ஆஸ்திரேலியா (120 புள்ளி), இந்தியா (116 புள்ளி), தென்னாபிரிக்கா (113 புள்ளி), இலங்கை (108 புள்ளி), நியூஸிலாந்து (107 புள்ளி), இங்கிலாந்து (102 புள்ளி), பாகிஸ்தான் (94 புள்ளி), மேற்கிந்தியத்தீவுகள் (93 புள்ளி), பங்களாதேஷ் (75 புள்ளி), சிம்பாப்வே (52 புள்ளி), அயர்லாந்து (42 புள்ளி), ஆப்கானிஸ்தான் (40 புள்ளி),

**துடுப்பாட்ட தரவரிசை**

டீ வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), அம்லா (தென்னாபிரிக்கா), சங்ககாரா (இலங்கை), ஹோக்லி (இந்தியா), டில்ஷான் (இலங்கை), வில்லியம்ஸன் (நியூஸிலாந்து), தவான் (இந்தியா), பிஞ்ச் (ஆஸி.), பெய்லி (ஆஸி), டோனி (இந்தியா)

**பந்து வீச்சுத் தரவரிசை**

சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்), சுனில் நரைன் (மே.தீவுகள்), ஸ்ரெயின் (தென்னாபிரிக்கா), தாஹிர் (தென்னாபிரிக்கா), ஸ்ராக் (ஆஸ்திரேலியா), ஜோன்சன் (ஆஸ்திரேலியா), அண்டர்சன் (இங்கிலாந்து), சகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்), விற்றோரி (நியூஸிலாந்து), மொஹமட் இப்ரான் (பாகிஸ்தான்). (5–ரி)



# துளித் துளியாய் உலகக் கிண்ணம்

▶ உலகக் கிண்ணத் தொடரில் இடம் பெற்றுள்ள அணிகளில் டோனி தலை மையிலான இந்திய அணியே எல்லா வகையிலும் முழுமையான அணியாகத் திகழ்கிறது, என்று மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் அணித் தலைவர் கிளைவ் லொயிட் புகழ்ந்துள்ளார்.

▶ காயம் அடைந்துள்ள ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் கும்மின்ஸ், ஆப்கானிஸ்தான் அணியுடனான இன்று நடைபெற உள்ள லீக் ஆட்டத்தில் களமிறங்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

▶ மழையால் பாதிக்கப்படும் ஆட்டங்களில் கடைப்பிடிக்கப்படும் சர்ச்சைக்குரிய டக்வோர்த் லூயிஸ் விதியில், உலகக் கிண்ணத்துக்காக சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த புதிய முறையை ஆஸ்திரேலிய கணக்கியல் நிபுணர் ஸ்டீவ் ஸ்டெர்ன் வடிவமைத்துள்ளதால், டி.எல் விதி என்று அழைக்கப்பட்டு வந்தது இனி டி.எல்.எஸ் ஆக பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இனி ரி – 20 மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் டி.எல்.எஸ். விதியே கடைப்பிடிக்கப்படும் எனதெரிகிறது. (5–ரி)

**தினம் ஒரு பரிசுப் போட்டி 19**

இந்தியா - மே.இ.தீவுகள் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (06.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..........................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..................................................

..................................................

தொலைபேசி இல.: ..............................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (05.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

**பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

..............................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி. ....................

தொலைபேசி ....................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

**போட்டி விதிகள்**

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

**BCAS CAMPUS — 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்**

**மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..........................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி. ....................

....................

தொலைபேசி

....................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு



**அரையிறுதிப் பரிசுப் போட்டி**

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1).................... 2)....................

3).................... 4)....................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி. ....................

தொலைபேசி ....................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு

NJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாத் தலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி, நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி, பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 16[illegible]ரதான வீதி. பருத்தித்துறை.
**சூர்யா பாமசி** புதிய சந்தை, அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி, வீதி, கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நன்மையைத் தரும்.

**இடபம்:** புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின் போது கவனம் தேவை. பேச்சுத் திறமை அதிகரிக்கச் செய்யும். எதிர்பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும்.

**மிதுனம்:** வியாபாரம் தொடர்பாகச் செய்து முடிக்க நினைக்கும் காரியங்கள் தள்ளிப்போகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்கும்.

**கடகம்:** உறவினர்கள் வருகை இருக்கும். பேச்சுத்திறமையால் காரியங்களை சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். தேவையற்ற எண்ணங்களை விட்டு விட்டு மனதை ஒருமுகப்படுத்துவது வெற்றிக்கு உதவும்.

**சிங்கம்:** காரிய அனுகூலம் உண்டாகும். எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப்போனதும் தானாகவே வந்து சேரும். அறிவுத்திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாக பேசி பொழுதைக் கழிப்பீர்கள்.

**கன்னி:** வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டுப் பெறுவார்கள். சிலருக்கு உத்தியோகம் கிடைக்கலாம்.

**துலாம்:** நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் வரும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி[illegible] முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

**தனுசு:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையைச் செய்து முடித்து நன்மை பெறுவீர்கள். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** உறவினர் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை காதில் வாங்காதவர்போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும். அறிவுதிறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும்.

**மீனம்:** உங்கள் செயல்கள் தாமதமின்றி நிறைவேற கூடுதல் சுறுசுறுப்பு அவசியம். பிறருக்காக தகுதி[illegible] மீறிய வாக்குறுதி எதுவும் தர வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

டேய் மச்சான் நம்ம
அரசாங்கம் ச்ரியில்லைடா ?
ஏன்டா மச்சி
இல்லை மச்சான் நேற்று
ஊருக்கு போயிட்டு வரும்
போது வழியில பார்த்தேன்.
ஒரு இடத்தில விபத்து பகுதி
மெதுவாக செல்லவும் என்று
அறிவித்தல் வைச்சிருக்கானுங்க
சரிடா நல்ல விஷயம் தானே
கொய்யால....
அதான் விபத்து பகுதின்னு
தெரியுதுல...
அப்புறம் எதுக்கு அங்கபோய்
ரோட் போடணும், அங்க
கொண்டு அறிவித்தல்
வைக்கனும்



## குட்டித் தல


நடிகர் அஜித்குமார் – ஷாலினி தம்பதியினருக்கு இரண்டாவது வாரிசாக ஆண் குழந்தை பிறந்துள்ளது.

2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அஜித் – ஷாலினி ஜோடி, திருமண பந்தத்தில் இணைந்தது. 2008 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி, இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. இந்நிலை யில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 4.30 மணியளவில் அஜித் – ஷாலினி தம்பதியருக்கு அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. அமர்க்களம் திரைப்படத்தில் சேர்ந்து நடித்த இவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பில்கேட்ஸ் மீண்டும் முதலிடம்

மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ் உலக பணக்காரர்கள் பட்டியலில் மீண்டும் முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள நடப்பு ஆண்டிற்கான செல்வந்தர்கள் பட்டியலில் முந்தைய ஆண்டை விட 3.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான அதிக சொத்துகளுடன் மொத்தம் 79.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள சொத்துகளுக்கு சொந்தக்காரராக பில் கேட்ஸ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் தொலைத்



தொடர்பு உலகின் முடிசூடா சக்கரவர்த்தியாக திகழும் கார்லோஸ் ஸ்லிம் ஹேலு 77.1 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்துகளுக்கு உரிமையாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.


மூன்றாவது இடத்தில் 72.7 பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள சொத்துகளின் உரிமையாளராக உள்ள நிதி நிறுவன அதிபர் வாரன் பப்பெட் அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த 21 ஆண்டுகளில் வெளியான போர்ப்ஸ் செல்வந்தர்கள் பட்டியலில் பில் கேட்ஸ் 16 ஆவது முறையாக முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏழ்மையான ஜனாதிபதி

உலகின் மிகவும் ஏழை ஜனாதிபதியான ஜோஸ் முஜிகா (வயது – 77). உருகுவே நாட்டு ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

அனைவருடனும் இயல்பாக பழகக்கூடிய அவர், ஐந்தாண்டு பதவிக் காலத்தில், நாட்டை பொருளாதார வளர்ச்சியடைய செய்து, சொந்த வாழ்வில் மிகவும் ஏழையானார். ஜனாதிபதி பதவிக்கான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டபோதும், அவற்றை ஏற்க மறுத்து, ஜனாதிபதி மாளிகையில் வசிக்காமல், இரண்டு அறைகள் கொண்ட, தன் வீட்டில் மனைவி மற்றும் வளர்ப்பு நாயுடன் வசித்து வந்தார். பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸார் மட்டும் இருந்தனர். மாத சம்பளமாக வழங்கப்பட்ட, 13 ஆயிரத்து 300 டொலரில், 12 ஆயிரம் டொலரை ஏழை மக்களுக்கும், மீதமுள்ள ஆயிரத்து 300 டொலரில், 775 டொலரை சிறுதொழில் செய்வோருக்கும் வழங்கி வந்தார். தன்னுடைய வேலைகளை தானே செய்து கொள்ளும் முஜிகா, குடும்ப செலவிற்காக, மனைவியுடன் இணைந்து தோட்டம் செய்தார். அலுவலகத்திற்கு செல்லும்போது மட்டும் ஜனாதிபதிக்கான உடையை அணிந்து, தன்னுடைய காரை தானே ஓட்டிச் செல்வார். மற்ற நேரங்களில் சாதாரண உடையில் காணப்படுவார். இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.





## கருத்தரங்குகள்

தென்மராட்சி, மார்ச் 4

மீசாலை உயர்கலைக்கல்லூரியில் கற்கும் ஜி.சீ.ஈ உயாதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழு நிலாக் கருத்தரங்குகள் மீசாலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இடம் பெறும். மீசாலை உயர்கலைக்கல்லூரியில் தமிழ் (நீண்டபயணம்) பாடமும், கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகில் உள்ள லிபாரு கல்வி நிலையத்தில் அரசியல் விஞ்ஞான பாடமும், தொழில்நுட்ப பாடத்துறையில் பொறியியல் தொழில்நுட்பம் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடப் பரப்புகளுக்கான செயன்முறையுடன் கூடிய கருத்தரங்கும் இடம்பெறும். கிளிநொச்சியில் நடைபெறும் கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஜி.சீ.ஈ உயாதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இலவசமாகப் பங்குபற்றலாம் என்று நிர்வாகி எஸ்.வீரசுதாகரன் அறிவித்துள்ளார். (வ-9)

# மாற்றுவலுவுடையோருக்கான அணுகுமுறை: ஏற்படுத்துமாறு வலியுறுத்தி விழிப்புணர்வு



மட்டக்களப்பு, மார்ச் 4

விசேட தேவையுடையவர்கள் தமது கடமைகளையும், தேவைகளையும் தடங்கலின்றி அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் சென்று மேற்கொள்ளும் வகையில் உட்பிரவேசிப்பு அணுகுமுறை வசதிகளை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்வு, நேற்று செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

விசேட தேவையுடையவர்களுக்கான அம்பாறை மாவட்ட வலையமைப்பின் அனுசரணையுடன் அக்கரைப்பற்று வலுவிழந்தோருக்கான செயலணிக்குழுவால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவின் கணிப் பீட்டின் பிரகாரம் குறித்த எல்லைக்குட்பட்ட 67 நிறுவனங்களில் 7 நிறுவனங்களிலும், 26 பாடசாலைகளில் 3 பாடசாலைகளிலும் விசேட தேவையுடையோர் சென்று வருவதற்கான உட்பிரவேசிப்பு அணுகுமுறை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவை பதில் அதிகாரி எம்.எச். சியாத் இதன்போது தெரிவித்தார்.

2006.10.17ஆம் திகதியன்று வெளிவந்த 1467/15 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இவ்விடயம் மக்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் அரச, தனியார் அனைத்துக் கட்டடங்களும் விசேட தேவையுடையவர்கள் பிரவேசிக்கக் கூடியவாறு நிர்மாணிக்கப்படுதல் அவசியமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வில் தனியார் மற்றும் அரச வங்கிகள், தேசிய நீர் வழங்கல் சபையின் அக்கரைப்பற்று பிரதான காரியாலயம் ஆகியவற்றின் விசேட தேவையுடையோர் சகிதம் சென்று அணுகுமுறை வசதியின் அவசியம் பற்றி விளக்கமளிக்கப்பட்டதுடன் அது தொடர்பான மகஜர் மற்றும் துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி விசேட தேவையுடையவர்களுக்கான வசதியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக நிறுவனங்களின் உயரதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். இந்நிகழ்வில் உளமருத்துவ பணிப்பாளர் எம்.ஐ.ஹைதர், அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் மற்றும் சமூக சேவை பதில் கடமை அதிகாரி எம்.எச்.சியாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ)

# குருக்கள்மடம் புதைகுழி குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி வலியுறுத்து

மட்டக்களப்பு, மார்ச் 4

கடந்த 30 வருடகால போரின்போது, நேரடியாகப் போரில் பங்கேற்காத முஸ்லிம் சமூகம் அநியாயமாக இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்டதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அந்த வகையில் குருக்கள்மடம் புதைகுழி தோண்டப்பட்டு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நீதி அமைச்சருக்கு திங்கட்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இந்த ஆட்சியில் முஸ்லிம்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்று நம்பித்தான் புதிய ஆட்சி மாற்றத்துக்கு முஸ்லிம்களும் தமது பூரண பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.

பயங்கரவாதம் நிலவிய கால கட்டத்தில் காத்தான்குடியில் உள்ள பள்ளிவாசல்களில் 100 இற்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டதும் ஏறாவூர் கிராமம் அழிக்கப்பட்டது. அளிஞ்சிப் பொத்தானை போன்ற இடங்களில் இனச்சுத்திகரிப்பு செய்தது மட்டுமல்லாமல், கிழக்கிலே 35க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்டனர். அதேபோல் வடக்கில் இருந்தும் முஸ்லிம்கள் பூண்டோடு வெளியேற்றப்பட்டனர்.

1990ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12ஆம் திகதி கல்முனையில் இருந்து காத்தான்குடி நோக்கி வந்து கொண்டிருந்த 100 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் குருக்கள்மடம் என்ற இடத்தில் கடத்திக் கொலை செய்யப்பட்டனர்.

குருக்கள் மட கடல் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் அவர்களது சடலங்கள் புதைக்கப்பட்டமை தொடர்பில் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து உடல்கள் புதைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்துக்கு அந்த ஆணைக்குழு நேரடியாகப் பயணம் செய்தது.

பின்னர் அதன் தொடர்ச்சியாக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டும் இது வரையில் அந்த புதைகுழிகளைத் தோண்டுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்தப் புதைகுழிகளை தோண்டுவதற்கான செலவு கிட்டத்தட்ட 94 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது. இந்த நிதி அரசினால் ஒதுக்கீடு செய்யப்படாமையால் இவ்விடயம் கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றது. இருந்தாலும் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கு என்று உருவாக்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியிலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால், இந்த ஆட்சி மாற்றத்துக்கு அர்ப்பணிப்புடன் பங்காற்றிய ஒரு சமூகம் நீதி தேவதையின் முன் புறந்தள்ளப்பட்டு விட்டதாக ஆகிவிடும்.

இதற்கான நடவடிக்கைகள் மிக விரைவாக எடுக்கப்பட வேண்டும். அநியாயத்துக்கான நீதியையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தையும் வழங்க வேண்டிய கடமைப்பாடு மட்டுமல்லாது இதனோடு சம்மந்தப்பட்டவர்களையும் விசாரணை செய்து அரசு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்களுடைய உறவுகள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம்கள் மீதான இந்த இனப்படு கொலைகள் சரியான முறையில் விசாரிக்கப்படுவதற்காக ஒரு சுயாதீன ஆணைக் குழுவை நியமித்து தீர்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது, முஸ்லிம்களும் ஒரு தரப்பாக இத்தீர்வுத் திட்டத்தில் அங்கம் பெற வேண்டும்.

இந்த விடயத்தில் சர்வதேசமும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்று முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாறான நல்ல முன்னெடுப்புக்களினூடாக பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்குரிய உரிமைகளும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும்"– என்றார். (வ)

# வலிப்பு மருந்தை பருகிய சிறுவன் மருத்துவமனையில்

கிளிநொச்சி, மார்ச் 4

வலிப்பு மருந்தை குடித்ததால் 4வயதுடைய சிறுவன் ஒருவன் மயக்கமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது. 4 வயதான சஞ்சீவன் என்ற சிறுவனே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். குறித்த வீட்டில் வசிக்கும் ஒருவர் வலிப்பு காரணமாக அந்த மருந்தை பருகுவது வழக்கம். அது விசேடமாக கொழும்பில் இருந்து வரவழைக்கப்படுவதாகும். அன்றையதினமும் அவ்வாறு அவர் தான் பருகிவிட்டு அந்த மாத்திரைகள் உள்ள போத்தலை மூடாமல் சென்றுள்ளார். எனவே குறித்த சிறுவன் விளையாட்டுத் தனத்தால் அந்த மாத்திரைகளை ஒருசிரட்டையில் கரைத்து குடித்துள்ளான். (வ-21)


**வீடு வாடகைக்கு**

வவுனியா நகர்ப்பகுதியில் இரு பெண்களுக்கு அனெக்ஸ் ஆக வாடகைக்கு அறைவீடு உண்டு. குறிப்பு:- வீட்டில் ஒருவராவது தங்கிருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 6139150

**சேவை**

மிருகவைத்திய தேவைகளுக்கு தாவடிக்கு அருகில்

Ph: 021 224 2502, Mob: 077 973 8802 (57464) (45.3.7)

**சணல் ஆடு விற்பனைக்கு**

சணல் ஆடு இரண்டு ஆண்குட்டிகளுடனும், யமுனாபாறி ஒரு வாரத்தில் குட்டி ஈனும் நிலையிலும், 25 நாள் நிரம்பிய ஊர்க் கோழிக் குஞ்சுகளும் விற்பனைக்குள்ளன. (57460) (4.3.7)

சிவகுமரன் ஃபாம், கல்வியங்காட்டுச் சந்தி, 077 684 5519

**TV கள் மலிவு விற்பனை**

SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25"-14000/=, SONY DVD-3000/=, ரேடியோ சிஸெற்- 3000/=, BOX, குளிர்சாதனப் பெட்டி- 20000/=

சோனி ரேற்ட் சென்ரர்

(கொமர்ஷல் வங்கி எதிரில்)

56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். T.P: 077 044 0570 (57452)(4.3.7)

**ஊழியர் தேவை**

நெல்லியடியில் இயங்கும் வர்த்தக நிலையத்துக்கு சிப்பந்திகள், சிட்டை எழுதுநர்கள் தேவை.

(வடமராட்சியில் வசிக்கும் ஆண்கள் மட்டும்)

(54222) (4.3.7) தொடர்பு: 077 742 2604

**சர்வதேச நிறுவனம் ஒன்று உங்களை அழைக்கிறது**

- 18 வயது முதல் ஓய்வுபெற்றவர்கள் வரை தொழில்நுட்பத்துடன் கூடிய தொழில் முறை.
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- திறமையும், தகைமையும் வரவேற்கப்படுகின்றன.

தொடர்பு : 077 371 4828 (54221) (4.3.7)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் நம்பகரமான ஒரேயொரு சர்வதேச நிறுவனம். உலகம் முழுவதும் 1040 கிளைகள். CERTIFICATES, INTERNATIONAL DIPLOMAS. யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்(பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு போகிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

வகுப்புகள் ஆரம்பம் 08.03.2015 உடன் அழையுங்கள்..

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பணியாளர்கள் தேவை

- உதவிக்கணக்காளர் - பெண் 18-40 வயது. (A/L வர்த்தகம் படித்திருத்தல் வேண்டும்)
- அலுவலக உதவியாளர் - பெண் 18-40 வயது.
- வெல்டர் - 2 வருட அனுபவம் 18-50 வயது.
- மேசன் - அனைத்து வேலைகளிலும் நன்கு அனுபவம் உள்ளவர்ககள்.
- Technical Officer- (TO) ஆண்/ பெண் 2 வருட அனுபவம் 18-50 வயது.
- Site Supervisor - ஆண்/ பெண் 18-50 வயது
- Bar Bender பார் பென்டர் (கம்பி வளைப்பவர்)
- தச்சு வேலையில் ஒருவருட அனுபவம் உள்ளவர்.

(தேவைப்பட்டால் உணவு இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும்)

உங்கள் சுயவிவரக் கோவையினை (BioData) அனுப்ப வேண்டிய முகவரி

E-mail - beststarcon@hot mail.com

T.P - 0777 245 399

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை
திருமதி தாட்சாயினி றொசான் அவர்களின்
பாசமிகு தாயார் திருமதி புஷ்பம் நவரட்ணம்
அவர்களின் மறைவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய சகோதரத்துவம், (சி/16864)(4.3.7)
**சாவகச்சேரி இந்துக்கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர்
தம்பையா பாலசண்முகநாதன் அவர்களின்
அன்பு மாமனார் கதிரவேலு பொன்னம்பலம்
அவர்களின் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய சகோதரத்துவம், (சி/16865)(4.3.7)
**சாவகச்சேரி இந்துக்கல்லூரி.**

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தியாகராசா
அரசரத்தினம்
(இளைப்பாறிய ஆ.மே.ச
சாரதி – காரைநகர்)

தோற்றம் 18 . 04 . 1942
மறைவு 14 . 02 . 1995
திதி: 04.03.2015

ஆலம் விழுதுகள் போல் – உறவுகள்
ஆயிரம் வந்துமென்ன
வேரென நீங்கள் இருந்தமையால்
நாங்கள் வீழ்ந்து விடாமல்
இருக்கின்றோம் அப்பா!

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(57466)(3.7.8) தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்

# கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கம் நடத்தும் மாபெரும் தமிழ் விழா

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கம் நடத்தும் மாபெரும் தமிழ் விழாவும் 12 ஆவது திருக் குறள் மாநாடும் இன்றும் நாளையும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் விமர்சையாக நடைபெற உள்ளன.

இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரையும் நடைபெறும் நிகழ்வின் முதல் நாள் நிகழ்வு களாக கண்காட்சி, கருத்து ரைகள், தமிழ் சொற்களை பிழை நீக்கி எழுதும் முறை, தமிழ் மகள் ஔவையார் போன்ற நூல் வெளியீடுகள், மேன்மைத் தமிழ் வாழுமா எனும் தலைப் பிலான பட்டிமன்றம், தமிழ் இசைப்பாடல்கள், மலையாளபுரம் கலைமன்றத்தினுடைய இலங்கேஸ்வரன் நாடகம், பண்டிதர் பரந்தாமனின் கவின் கலைக் கல்லூரி மாணவிகளின் ஆடல், நாட்டிய மயில் கருணானந்தனின் தனி ஆடல் என்பனவும் இரண்டாம் நாள் நிகழ்வுகளாக வள்ளுவர் உள்ளம் எனும் தலைப்பின் கீழ் சைவப் புலவர் க.பத்மநாதன் அறவுள்ளம் பற்றியும், இலங்கை வைப்பகத்தின் மேலாளர் கு.சிவஞான சுந்தரத்தால் ஒழுக்கவுள்ளம் பற்றியும், கிளி நொச்சி மாவட்ட குமுகாயப் பணி அலுவலகர் த.தபேந்திரனால் அன்பு உள்ளம் பற்றியும், மேனாள் தமிழ் சங்கத் தலைவர் மருத்துவர் ச.முரு கானந்தத்தால் மருத்துவ உள்ளம் பற்றியதுமான கருத்துரைகளும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட பல பாடசாலைகளின் கலை நிகழ்வுகள் என பல இடம்பெற உள்ளன.

இவ்விழாவுக்கான பிரதம விருந்தினராக வடக்குமாகாண முதல் அமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் கலந்து கெ உள்ளார். தமிழ் உள்ளம் படைத்தவர்கள், ஆர்வலர் கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். (வ–21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம்
(அரியாலை கிழக்கு)
மண்ணில் 22.08.1930
விண்ணில் 03.02.2015

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 06.03.2015 வெள்ளிக்கிழமை வவுனியா, உக்கிளாங்குளம் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.
TP: 0772742779 தகவல்: சந்திரமோகன் (மகன்)

# வயலில் மலக்கழிவு விசமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், மார்ச் 4

நெடுங்கேணிப் பகுதியில் தமிழ் – சிங்கள எல்லைப் பகுதியில் உள்ள பல ஏக்கர்கள் கொண்ட வயல்களில் விசமிகள் மலக் கழிவு வீசியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைக் கிராமமான அங்கு ஒரு புறத்தில் ராணுவக் காவலரணும், மற்றொரு புறம் கோயில் ஒன்றும் உள்ளன. அங்கு தமிழ் மக்களால் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இன்னமும் சில நாள்களில் அறுவடை செய்யப் படவிருந்த நிலையில் விசமிகள் அங்கு மலக்கழிவை வீசியுள்ளனர். பல பரப்புக்கள் பகுதியில் அவ்வாறு மலம் கொட்டப்பட்டுள்ளது. கழிவு வண்டியில் கொண்டு சென்றே கொட்டப்பட்டுள்ளதால் அந்தப் பரப்புக்களின் நெல் வீணாகி விட்டதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (வ–4–101)

## கண்ணீர் அஞ்சலி



02.03.2015 இல் இறைபதம் எய்திய
எமது அன்புக்குரிய வைத்திய
கலாநிதியும், புல்லாங்குழல்
இசைவித்வானும், சமூகசேவையாளனும்,
வண். மேற்கு வைத்தியசாலை
உரிமையாளருமான
Dr. தியாகராஜா கங்காதரன்
அவர்களின் மறைவு அறிந்து ஆழ்ந்த
கவலை அடைகின்றோம். அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆடல் வல்லானின் திருவடிகளில் என்றும் அவரின்
புல்லாங்குழல் இசை ஒலித்து அவரின் ஆத்மாசாந்தியடைய
இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
SINGHAMS PHARMACY சிங்கம்ஸ் பார்மஸி
KONDAVIL WEST கோண்டாவில் மேற்கு.
(57455)(4.3.7)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலக புள்ளிவிவரக் கிளையில் தொழில்நுட்ப உதவியாளராகக் (ICT Assistant) கடமையாற்றும் திருமதி கஜேந்தினி சகாயதேவராஜன்
அவர்களின் தந்தையாரான அமரர் அனுக்கிரேட் சிங்கராயர்
அவர்கள் 01.03.2015 இறைபதம் அடைந்ததையிட்டு, எமது கண்ணீர் அஞ்சலி யினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(57454)(4.3.7) யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக்கழகம்.

# வினைதிறன்காண் போட்டிப்பரீட்சை

தென்மராட்சி, மார்ச் 4

இலங்கை அரச நூலகர் சேவை தரம் 11 தரம் 111 ஆகியவற்றில் கடமை புரியும் உத்தியோ கத்தர்களுக்கான வினைத் திறன் காண் போட்டிப் பரீட்சை எதிர் வரும் மே மாதம் கொழும்பில் நடத் தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் வட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளன. போட்டிப் பரீட்சைக்கான தகைமையுடையவர்கள் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் எதிர் வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு வட மாகாணம், கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு ஆணைக்குழுவின் செய லாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (வ–9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 09 . 1962
மறைவு 13 . 02 . 2014



## இராசையா குணசீலன்

வீட்டிற்கு மூத்த தலைவராய்
பெயருக்கு ஏற்ற குணத்தை உடையவராய்
அன்போடும் அர்ப்பணிப்போடும் வழிநடத்திய தந்தையாய்
மனைவியின் பாசமிகு கணவராய்
பிள்ளைகளின் அன்பு அப்பாவாய்
பிள்ளைகளுக்கு நற்பண்புகளை ஊட்டி வளர்த்த நண்பனாய்
எல்லோரையும் நகைச்சுவைப் பேச்சால் கவர்ந்தவனாய் – வாழ்ந்தீரே!
இறுதியில் சாவுக்காக காத்திருந்தீரோ!
எல்லோரையும் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு சென்றீரே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்து விட்டதப்பா
உங்கள் நினைவுகளால் நாம் வெந்து மாய்கின்றோம்
தினமும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.
எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்
எமது கண்ணீர்ப் பூக்களை உங்களுக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

இல 13, தஞ்சி ஒழுங்கை,
அரசடிவீதி,
யாழ்ப்பாணம். (54417)(5.7.3)
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் அவர்களின்
அன்பு மாமனார் தம்பு நடராசா அவர்கள்
28.02.2015 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
**யா/இணுவில் மத்திய கல்லூரி.**
(57459)(4.3.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முதல்வர் இ.துரைசிங்கம் அவர்களின்
அன்பு மாமனார் தம்பு நடராசா அவர்கள்
28.02.2015 அன்று சிவபதமடைந்துள்ளார். அன்னாரின்
பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
**யா/இணுவில் மத்திய கல்லூரி.**

# யாழ். மாவட்டக் கிளை அங்குரார்ப்பணம்

தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் யாழ். மேற்தரக் கிளையில் கொழும்பு தாய்ச் சங்கத்தின், பொதுச் செயலாளர் கே.எச். ஞானதாசவால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் இ.இராஜாமகேந்திர சிங்கம், செயலாளர் மா.பரமானந்தம், உபதலைவர் எம்.பி. வேதநாயகம், உபசெயலாளர் அ. தெய்வேந்திரம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக பொன். குலவீரசிங்கம், எம்.யோக்கீம்பிள்ளை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான கருத்தரங்கு

வலி.வடக்கு, மார்ச் 4

இன்ரநாஷனல் ராண்ஸ்பரன்சி அமைப்பின் எற்பாட்டில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு சனிக்கிழமை பகல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யு.எஸ். விடுதியில் இடம்பெற்றது.


'லோ அன் சொசயிற்றி ரஸ்ட்' அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் வட மாகாணத்தைச் சேர்ந்த இந்து, கிறிஸ்தவ மத குருமார்கள் உட்பட்ட ளூராட்சி மன்றங்களின் அரசியல் வாதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என சுமார் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வுக் கருத்தரங்கில் வளவாளர்களாக கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் யசோ ராண்ஸ்பரன்சி இன்ரநஷனல் அமைப்பின் சிரேஷ்ட முகாமையாளர் சனகவிஜயதுங்கா மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உளநல மருத்துவத்துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம். ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-86)





# எழுவைதீவு மாணவருக்கு நடைபெற்ற கருத்தரங்கு



தென்மராட்சி, மார்ச் 4

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தினர் எழுவைதீவில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றை எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் அண்மையில் நடத்தினர். இந்தக் கருத்தரங்கில் எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் எழுவைதீவு றோ.க. த.க. பாடசாலையின் ஆசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். கருத்தரங்கில் சிறுவர் உரிமைகள், சிறுவர் துஸ்பிரயோகம், சமாதானக் கல்வி, வன்முறையற்ற தொடர்பாடல், குழுவேலை, மாணவர்களின் ஏற்றத்தாழ்வு மாணவர்களின் முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் பங்களிப்பு போன்ற விடயங்கள் குறித்த விளக்கம் வளவாளர்களால் முன் வைக்கப்பட்டது. (வ-9)

## வவுனியாவில் பௌர்ணமி விழா

வவுனியா, மார்ச் 4

வட மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பௌர்ணமி விழா வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய அக்கு வன்ஸ் கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன்சோமராஜா தலைமையில் இந்த விழா இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினராக திருமதி பராசக்தி கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் விசேட தேவை உடையோரின் கலை நிகழ்வுகள் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (வ-402)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வித்தகபுரம் மேலைத் தெல்லி விழிசிட்டி வீமசிட்டி சிவ குருநாத சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.10 மணி தொடக்கம் 10.20 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகப் பணிகள் தொடர்பிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ)


அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு



த.கருணாகரன்

(சிரேஷ்ட பிரதிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் - வடபிராந்திய காரியாலயம் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

இன்று (04.03.2015) புதன்கிழமை அகவை அறுபதில் வங்கிச்சேவையிலின்று விடைபெறும் உங்களை, அகமகிழ்வுடன் விடையனுப்பும் சக ஊழியர்கள் நாம் - என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம் - அன்புடனே ஆயுள், ஆரோக்கியம், ஆனந்தம், அத்தம் தந்திடவே

இலங்கை வங்கி - வடபிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்.

சேவைநலன் பாராட்டு

திருமதி மீரா அருள்நேசன்

(உதவிக்கல்விப் பணிப்பாளர் - யாழ். கல்விவலயம்)



கல்விப்புலத்தில் கடந்த 1985 முதல் 2015 வரையிலான 30ஆண்டு காலத்தில் ஆசிரியையாக, ஆசிரிய ஆலோசகராக, தொலைக்கல்வி விரிவுரையாளராக 1998 கல்வி நிர்வாக சேவைப்பரீட்சை சித்தியின் பின்னர் பிரதிக்கல்விப் பணிப்பாளராக, உதவிக்கல்விப்பணிப்பாளராக பல பதவி நிலைகளில் நின்று தமது கல்விச் சேவையை நல்கி, கடந்த 27.01.2015 அன்று ஓய்வுநிலையைப் பெற்றுக்கொண்ட யாழ். கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் **திருமதி மீரா அருள்நேசன்** அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று மனமகிழ்வுடன் நீடூழி காலம் வாழ்க என இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். கல்வி வலயம், யாழ்ப்பாணம். (6867)(3.7.8) தமிழ்ப்பாட ஆசிரியர் குழாம்.

அதியுயர் ஊடக விருதுகள் 2014

Sri Lanka Press Institute

சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் 16 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்குக் கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிரிவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

www.slpi.lk, www.pccsl.lk

மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



புதுவை மணற்பகுதி பெருமை பெறும் மதிப்புரிய முத்துக்களில் ஒன்றான உதவும் கரங்களாம் கருணாகரனின் மணிவிழா நிகழ்வுநாளில் - அவர் தடம்பதித்த சாதனைச்சுவடுகளை மனதிருத்தி வாழ்த்துகின்றோம்!

முன்னிலை வகிக்கும் இலங்கை வங்கியின் நான்கு சகாப்த சேவைதனில் பல்வேறு படி தாண்டி உயர்வு பெற்று மாகாணப்பிரதிப் பிரதமபாதுகாப்பு உத்தியோகத்தராய் சேவையாற்றி உள்ளமும், உடலும் விருத்திபெறும் விளையாட்டுத்துறை தன்னில் நன்னை அர்ப்பணித்து, கரப்பந்து உதைபந்து வீரனாய்

"ஸ்ரீரஞ்சனி" மணற்பகுதி,புத்தூர். (5748)(3.7.8) புத்தூர் வே. இழையகுட்டி, இ.நிர்மலன் சி. அசோகன், இ. சாரங்கன்

## திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 4
நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழாவின் இறுதிநாள் திருவிழாவில் இன்று புதன்கிழமை வைரவப் பெருமான் இரவு 8 மணிக்கு வீதி வலம் வருவார்.
அன்றைய தினம் காலை விசேட அபிஷேகம் பூசைகள் இடம் பெற்று, நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (வ-17)

## மரண அறிவித்தல்



### நாகேசு நவரத்தினம்
(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு நவரத்தினம் நேற்று (03.03.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், உமாதேவியின் அன்புக் கணவரும், தனரட்ணம் (முகுந்தன்), இராஜினி (நீலா), சண்முகரட்ணம் (சேந்தன் - கனடா), சுபாஜினி (சுபா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சில்வானா (சுவிஸ்), கிருஸ்ணமூர்த்தி (கட்டட ஒப்பந்த காரர்), தட்சாயினி (கனடா), கிருபாகரன் (Hutch Telecom பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர்- வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், மனுவேல், மயூரன், ஜெனனி, சுவேத்தா, சிவதர்சினி, சிவாஜினி, சிவகஜன், துஷான், தருன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகரத்தினம், புஸ்பராஜா, கலாவதி, பரமவதி, விமலவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா (ஆசிரியர்), ஸ்ரீபுஸ்பகாந்தன் மற்றும் பரமேஸ்வரன், சரவணபவா, சிவஞானம், புதுமைலோலன், இராஜேஸ்வரி, காலஞ் சென்றவர்களான இராஜேஸ்வரி (கிளிநொச்சி), கமலாதேவி மற்றும் பத்மாதேவி, தவமணிதேவி, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2015) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
078 387 8883

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (57462) (45.3.7)


## ஞானம் அறக்கட்டளை நிதிய நிறுவுநரின் பிறந்த தினத்தன்று மன்னாரில் நிகழ்வுகள்



மன்னார், மார்ச் 4
ஞானம் அறக்கட்டளை நிதியத்தின் நிறுவுநரும், லைக்கா மொபைல் நிறுவனத்தின் தலை வருமான சுபாஸ்கரன் அல்லிராஜாவின் 43 ஆவது பிறந்ததினமான நேற்று முன்தினம் திங்கட்கிழமை நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.
ஞானம் அறக்கட்டளை நிதியத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளா எஸ்.கேதீஸ்வர ராஜ் தலைமையில் மன்னாரில் நிகழ்வுகள் இடம்பெற்றன.
முதலில் சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்கு ஆசி வேண்டி காலை 7.30 மணியளவில் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் விசேட பூசை இடம் பெற்றது. இதன்போது திருக் கேதீஸ்வர சிவன் அருள் இல்ல மாணவர்கள் கலந்து கொண்டனர்.
அதனைத்தொடர்ந்து மடு பிர தேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தம்பனைக்குளம் ம.வி பாடசாலையில் தெரிவு செய் யப்பட்ட 7 மாணவர்களுக்கு வங்கிக்கணக்குகள் திறக்கப்பட்டு மாதாந்தம் ஆயிரம் ரூபா நிதி கல்வி ஊக்குவிப்புக் காக வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.
அதேபோன்று மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்களுக்குஇவ்வாறுவங்கிக்கணக்குகள் திறக்கப்பட்டு கையளிக்கப் பட்டன.
அதனைத்தொடர்ந்து தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படும் தம்புளைக்குளம் கிராம மக்கள் தற்போது மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பூமலாந்தான் கிராமத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் 275 குடும்பங்களில் முதலில் 100 குடும்பங்களுக்கு தற்காலிக வீடு அமைக்கத் தேவையான கூரைத்தகரங்கள் வழங்கப்பட்டன.
அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள வயோதிபர் இல்லம் மற்றும் சிறுவர் காப்பகம் ஆகியற்றில் உள்ள அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.
குறித்த நிகழ்வுகளில் மடு பிரதேசச் செயலாளர் சத்திய சோதி,ஞானம் அறக்கட்டளை நிதியத்தின் மாவட்ட திட்டமிடல் அலுவலகர் சி.யுலியன், மடு திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (வ-56)

## மரண அறிவித்தல்

### தம்பு நடராஜா
(ஓய்வுபெற்ற அதிபரும் சமாதான நீதிவானும்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோயிலடி, கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா 28.02.2015 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகபாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகமனோன்மணியின் அன்புக் கணவரும், திருமதி முத்தையா செல்லம்மாவின் (கனடா) அன்புச் சகோதரனும், சூரியகலா (ஜேர்மனி), சூரிய லதா (பிரான்ஸ்), சூரியலலிதா (ஜேர்மனி), சூரியமாலா (ஆசிரியை - யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), சூரியகுமார் (பொறியியலாளர் - லண்டன்), சூரியராஜா (மாவட்ட உதவிப்பணிப்பாளர் - அனர்த்த முகாமைத்துவ நிலையம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜ்குமார் (ஜேர்மனி), நித்தியகுமார் (பிரான்ஸ்), இரங்கநாதன் (ஜேர்மனி), துரைசிங்கம் (அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி), பிஜால் (லண்டன்), சுனீத்ரா (அதிபர், யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், உதயசற்குணம் (ஓய்வுபெற்ற அதிபர்), சுக்கிரவதி, சேயன்பு, சிவபதம், வைகுந்தவதி (ஜேர்மனி), நாகயோகினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், தனுசன் - சகானா, தீப்தனன் (ஜேர்மனி), சாருகா - பிரண்டன், தீப்திகா, நித்திலா (பிரான்ஸ்), பிருத்துவி - றபியா, சுகிர்தனா (ஜேர்மனி), மேதுஷா (A/L - 2014 யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை), லக்ஷன் (தரம் - 10 யா/ மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை), ஆதித்தியன், ஆரியன் (லண்டன்), சாகித்தியன், சதுர்வேதியன், சிவசாயினி (ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புப் பேரனும், அக்ஷயாவின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.077 194 0299/ 077 395 7892

அருளானந்தப் பிள்ளையார் கோயிலடி,
கந்தரோடை,
சுன்னாகம் (57418) (45.3.7)



திருகோணமலை மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்ட கே.புஸ்பகுமார திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்த உத்தியோகபூர்வ நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. கே.புஸ்பகுமார இதற்கு முன்னர் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர்ளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (வ-10)


## வரணி கடைகளில் திடீர் சோதனை

தென்மராட்சி, மார்ச் 4
சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் வரணிப் பகுதியில் அண் மையில் பிற்பகல் வேளையில் வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற் கொண்டனர்.
இந்தப் பரிசோதனையில் தனி நபர் சுகாதாரத்தைப் பேணாத கடைச் சிப்பந்திகள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய் துள்ளனர்.
பொதுமக்கள் கொடுத்த முறைப் பாடுகளை அடுத்து பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழு வரணிப் பகுதியில் உணவு கையாளும் நிலையங்கள், நடமாடும் பாண் விற்பனை வாகனங்கள் போன்றவற்றை பரிசோதனை செய் தனர்.
அவ்வேளையில் வெற்றிலை மென்று கொண்டு உணவு தயாரிப்பில் ஈடுபட்டவர்கள் மற்றும் தனி நபர் சுகாதாரம் பேணாதவர்கள் ஆகியோருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள் ளதாகத் தெரிவித்தனர். (வ-9)

## மகளிர் தின விழா

தென்மராட்சி, மார்ச் 4
சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்தும் மகளிர் தின விழா 8 ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி புவேந் தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் இடம் பெறும்.
சங்கத்தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்வார்.
நிகழ்வில் மகளிர் தினத்தை யொட்டி சங்க உறுப்பினர்களிடையே நடத்தப் பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் பிரிவில் வதியும் பெண் முதியோர்கள் கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகள் போன்றவையும் இடம்பெறும். (வ-9)

# இன்டர்நெட் இல்லாமல் வாட்ஸ் அப்?






தற்போது உள்ள காலகட்டத்தில் தகவல் தொடர்பில் வாட்ஸ்–ஆப்பின் பங்கு முக்கியத்துவம் வகிக்கிறது.

ஸ்மார்ட்போன்களின் பயன்பாடு அதிகரித்து வரும் அதே நிலையில், வாட்ஸ்–ஆப்பின் பயன்பாடும் அதிகரித்துக் கொண்டே தான் வருகிறது. வாட்ஸ்– ஆப் இல்லாத ஸ்மார்போன் இல்லை எனலாம்.

இதைப் பயன்படுத்துவதற்கு இணையம் முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஆனால் சில சமயங்களில் இணையம் இல்லாமல், இதைப் பயன்படுத்த முடிந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்ற கேள்வி அனைவருக்கும் வந்திருக்கும்.

அதன்படி உலகம் முழுவதும் பிரபலமான இந்த வாட்ஸ்– ஆப்பை இணையம் இல்லாமலேயே பயன்படுத்தும் வகையில் புதிய சிம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை இத்தாலியைச் சேர்ந்த ஒரு மொபைல் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த அபூர்வ சிம்மை 'ஜீரோ மொபைல்' நிறுவனத்தின் இயக்குனர் மானுவேல் ஜனிலியா கண்டுபிடித்திருக்கிறார்.

இந்தச் சிம்மைப் பயன்படுத்தி வை–ஃபை, டேட்டா கனெக்ஷன், ரோமிங் இல்லாமல் மெசேஜை அனுப்பலாம். இந்த சிம்மிற்கு 'வாட்ஸிம்' என பெயரிடப்பட்டுள்ளது. வாட்ஸிம்' உலகம் முழுவதிலுமுள்ள 150 நாடுகளில் 400–க்கும் மேற்பட்ட மொபைல் ஆபரேட்டர்களுடன் இணைந்து சேவையை வழங்குகிறது.

இதில் ஒருவேளை அருகில் ஏதாவது ஒரு நெட்வொர்க்கில் 'சிக்னல்' நன்றாக இருந்தால் தானாகவே அந்த நெட் வொர்க்கில் 'கனெக்ட்' ஆகிவிடும். இந்த சிம் அதிகம் பயணம் செய்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அதைவிட, அவர்கள் தங்களுக்கு அன்பானவர்களுடன் எந்தத் தடையும் இல்லாமல் 'வாட்ஸ்–ஆப்'பில் எப்போதும் இணைந்திருக்க முடியும். இதற்கு எந்த ரோமிங் கட்டணங்களும் கிடையாது என்பது கூடுதல் வசதி.

## கைப்பேசிகளுக்கான (Dropbox) றொப்லொக்ஸ் அப்பிளிக்கேஷன்

ஒன்லைனில் தரவு, தகவல்களை சேமித்து வைக்கும் வசதியை வழங்கும் Dropbox இனை விண்டோஸ் கைப்பேசிகளில் பயன்படுத்தக்கூடிய அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Windows RT மற்றும் Windows 8.1 இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இந்த அப்பிளிக்கேஷனின் ஊடாக Dropbox சேவையின் அனைத்து வசதிகளையும் பெற முடியும்.

மேலும் இதில் சேமிக்கப்பட்ட படங்களை தானாகவே பேக்கப் செய்யும் வசதி, இணைய இணைப்பு அற்ற நிலையிலும் சேமிக்கப்பட்ட கோப்புக்களை பயன்படுத்தும் வசதி என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.




## பக்கவாத நோயை இலேசாகக் கண்டு பிடிக்கலாம்!




ஸ்மார்ட் கைப்பேசிகளின் ஊடாக மனிதர்களில் ஏற்படும் பக்கவாத நோய்களை கண்டறிவதற்கான சாதனத்தை உருவாக்கும் முயற்சியில் சம்சுங் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

கடந்த இரண்டு வருட காலமாக சம்சுங் நிறுவனத்தின் பொறியியலாளர்கள் தலையில் அணியக் கூடிய இந்தச் சாதனத்தை வடிவமைத்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் தற்போது EDSAP அல்லது Early Detection Sensor & Algorithm Package என்ற மாதிரி சாதனத்தை உருவாக்கியுள்ளனர். விசேட சென்சார்களை கொண்டு உருவாக்கப்பட்ட குறித்த சாதனம் 60 செக்கன்களில் நோயைக் கண்டறியும் ஆற்றலைக் கொண்டுள்ளது.






# மோடியின் பதவியேற்பு செலவு 34 இலட்சம்

டெல்லி,மார்ச்4
பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் பதவியேற்பு நிகழ்வுக்காக ஜனாதிபதி மாளிகையின் சார்பில், 34 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த வருடம் மே மாதம் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நடைபெற்றது. வழக்கமாக, பதவியேற்பு நிகழ்வுகள் 500 பேர் அமரும் வகையில் உள்ள டெல்லி தர்பார் விடுதியில் நடைபெறும். ஆனால், பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதால், ஜனாதிபதி மாளிகை வளாகத்தில், மேடை அமைக்கப்பட்டு, விருந்தினர்கள் அமர்வதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில், சார்க் நாடுகளின் தலைவர்கள் உட்பட, 6ஆயிரத்து 535 பேர் பங்கேற்றனர். இதனால், மேடை அமைத்தல், மின்சாரம், இருக்கை வசதிகள் உள்ளிட்டவற்றிற்காக, ஜனாதிபதி மாளிகையின் சார்பில், 34 இலட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. வேறெந்த பிரதமரின் பதவி யேற்பு நிகழ்வுக்கும் செலவு செய்யப்பட்டதை விட மிக அதிக மாக மோடியின் பதவியேற்புக்கு செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# பாகிஸ்தானுடன் இந்தியா முக்கிய பேச்சு

டெல்லி,மார்ச் 4
பாகிஸ்தானுடனான பேச்சில் எல்லை கடந்த தீவிரவாதம் பிரச்சினையை இந்தியா எழுப்பும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்திய வெளியுறவு செயலர் ஜெய்சங்கர் நேற்றுப் பாகிஸ்தான் புறப்பட்டுள்ளார். இஸ்லாமாபாத்தில் அந்தநாட்டு வெளியுறவு செயலர் ஐஜாஸ் அகமது சௌத்திரியுடன் அவர் உயர்மட்ட பேச்சுக்களை ஆரம்பிக்கிறார் எனத் தெரிகிறது.
இந்தப் பேச்சின்போது எல்லை கடந்த தீவிரவாதம், பாகிஸ்தான் படைகள் அத்துமீறல் உள்ளிட்ட விடயங்களை இந்தியா எழுப்பும் என வெளியுறவு விவகாரங்களுக்கான நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
அமைதிப் பேச்சுக்களை மீண்டும் துவக்குவதற்கு உகந்த சூழ்நிலை ஜெய் சங்கரின் பயணம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இரு நாடுகளுக்கு இடையிலான பேச்சை வரவேற்பதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் கூறியுள்ளார். இதற்காகத் தமக்கு வரும் மிரட்டல்களை எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு இரு தரப்பு பேச்சு நடக்க இருந்த நிலையில் காஷ்மீர் பிரிவினைவாதிகளைப் பாகிஸ்தான்தூதர் சந்தித்ததை அடுத்து பேச்சை இந்தியா இரத்துச் செய்தது குறிப்பிடத்தக்கது. (14)



# பயங்கரவாதிகளுக்கு சவாலாக கார் ஓட்டும் பெண்

காபூல்,மார்ச்4
ஆப்கன் நாட்டை தங்கள் பிடியில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகளுக்கு சவாலாக, ஒரு பெண், 10 வருடங்களாக வாடகைக் கார் ஓட்டி வருகிறார்.
சாரா பாஹாய்(வயது–38), எனும் இந்தப் பெண் மீது பயங்கரவாதிகள் பலமுறை கொலைவெறித் தாக்குதல் நடத்தியபோதும், தொடர்ந்தும் துணிச்சலுடன்காரோட்டி வருகிறார்.
கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் இவரின் சகோதரியின் கணவரை பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றனர். சகோதரியையும், அவரது ஏழு குழந்தைகளையும் பராமரிக்கவும், குடும்பச் செலவிற்காகவும் வாடகைக் கார் ஓட்டத் துவங்கியதாக அவர் தெரிவித்துள்ளார். (14)



யேமன் நாட்டைச் சேர்ந்த தம்பதியினரின் குழந்தைகளான அப்துல்லா, அப்துல் ரகுமான் ஆகிய இரட்டைக் குழந்தைகள் வயிறு ஒட்டிப் பிறந்ததால் தலைநகர் ரியாத்தில் உள்ள கிங் அப்துல் அசீஸ் மருத்துவமனையில் 9 மணிநேர அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டனர். (14)

# பார்வையற்றவர்களும் பார்க்க முடியும்



கோவை,மார்ச்4
பார்வையற்றவர்களுக்குப் பார்வை கிடைக்க செய்யும் நவீன கருவி, இந்தாண்டு இறுதிக்குள் இந்தியாவுக்கு வரவுள்ளதாகச் சர்வதேச கண் மருத்துவ நிபுணர் ரஜத் அகர்வால் தெரிவித்துள்ளார்.
'பயோனிக்ஐ' என்பது, பார்வையற்றவர்களுக்கான ஒரு கருவி. கண் பார்வை இருந்து, பல்வேறு காரணங்களால் பார்வை இழக்க நேரிடுகிறது. இத்தகைய குறிப்பிட்ட பார்வையற்றவர்களுக்கு, இந்தக் கருவி பயன்படுகிறது. கடந்த வருடம் அமெரிக்க அரசு இந்தக்;கருவிக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.
இந்தக் கருவியில் உள்ள கண்ணாடியின் முன்பகுதியில் கமரா இருக்கும். இது மூளைக்குக் காட்சிகளை கண்ணின் ரெட்டினாவில் பொருத்தப்பட்டிருக்கும்,'சிப்' மூலம்சமிக்ஞைகளாக அனுப்பும். இதன் மூலம் பார்க்க முடியும். இந்தியாவுக்கு இந்தக் கருவியைவிரைவில் கொண்டுவர, அரசுடன் பேச்சு நடக்கிறது. இந்த வருட இறுதிக்குள் இந்தியாவில் பயன்பாட்டில் இருக்கும். பார்வையற்றவர்களும் இனிப் பார்க்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.(14)

# எகிப்தில் குண்டு வெடிப்பு; 2 பேர் சாவு

கெய்ரோ, மார்ச்4
எகிப்தின் சுற்றுலாத்தலமான அஸ்வான் நகரில் நேற்று ம்ன்தினம் நடந்த குண்டு வெடிப்பில் 2 பேர் பலியாகியதுடன் 11 பேர் காயமடைந்தனர். முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்ஸி பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் எகிப்திய சுற்றுலாத் தலத்தைக் குறிவைத்து முதல் முறையாக வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில்,இரண்டு பொலிஸ் வாகனங்களும், பல கடைகளும் சேதமடைந்தன. இந்தச் சம்பவத்தையடுத்து, பாதுகாப்புப் படையினர், வெடிகுண்டு செயல் இழக்கச் செய்யும் நிபுணர்கள் மற்றும் மருத்துவ உதவிக் குழுவினர் அந்த இடத்திற்கு விரைந்தனர். அவர்கள், குண்டு வெடித்த இடத்தில் இருந்து மக்களை அப்புறப் படுத்திவிட்டு சோதனை நடத்தியுள்ளனர். (14)

# டுவிட்டருக்கும் ஐ.எஸ்.கொலை மிரட்டல்




லண்டன்,மார்ச் 4
ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பு, டுவிட்டர் நிறுவுநர் ஜேக் டோர்சேக்குக் கொலை மிரட்டல் விடுத்துள்ளது.
இந்த அமைப்பு பிணைக்கைதிகளின் கொலைக் காட்சிகளை யூரியூப்பில் வெளியிடுகிறது. விரிவான தகவல்களை வெளியிடவும், ஆள் திரட்டவும், டுவிட்டரை பயன்படுத்துகிறது. இதனால், ஐ.எஸ் அமைப்பினரின் சந்தேகத்திற்குரிய டுவிட்டர் கணக்குகளை டுவிட்டர் நிர்வாகம் மூடி வருகிறது.
இதையடுத்து, டையாஸ்ப்ரோ என்ற சமூக வலைத் தளத்தை ஐ.எஸ். பயன்படுத்தத் துவங்கியது. ஆனால், டுவிட்டர் போல் உலகளாவிய பயன்பாடு இல்லாததால், தங்கள் கொள்கைகள், தகவல்களை டையாஸ்ப்ரோ மூலம் பரப்ப பயங்கரவாதிகளால் முடியவில்லை.
அதனால், ஆத்திரமடைந்த ஐ.எஸ் அமைப்பு டுவிட்டர் நிறுவுநர் ஜேக் டோர்சேக்கு அவரது படத்துடன் கொலை மிரட்டல் விடுத்துள்ளது.
பேஸ்ட் பின் என்ற வலைத்தளத்தில் வெளியாகியுள்ள அந்தப் படத்தின் கீழ், அரபு மொழியில், "எங்களுடன் மெய்நிகர் போரை துவங்கியுள்ள நீங்கள், நிஜப் போரை சந்திப்பீர்கள். இந்தத் தோல்வியடைந்த போரை நீங்கள் தான் துவக்கினீர்கள்.
துவக்கத்தில் இருந்தே, 'இது உங்களுடனான போர் அல்ல' என, நாங்கள் கூறி வந்தோம். ஆனால், தொடர்ந்து டுவிட்டர் கணக்குகளை மூடி வருகிறீர்கள். அப்படி மூடினாலும், நாங்கள் திரும்பவும் வருவோம்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.(14)

# மனைவிக்காக தினமும் 35 மைல் நடக்கும் முதியவர்

இயோவா, மார்ச 4
அமெரிக்காவின் இயோவா மாகாணத்தில் உள்ள டேவிஸ் சிட்டியில் வசிப்பவர் 61 வயதான ஸ்டீவன் சைமாஃப்.
இவர் ஒஸ்சியோலோ வின் லுக் பகுதியில் உள்ள கேசினோ ஹோட்டலில் இரவு நேர துப்புரவு தொழிலாளராகப் பணியாற்றி வருகிறார். துப்புரவு தொழிலாளியாக வேலை செய்யும் இவர் வேலைக்காக தினமும் 35 மைல் தூரத்துக்கு நடந்து செல்வது தான் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.
நோயுற்ற மனைவியை காப்பாற்றுவதற்காகத் தினமும் இந்த 35 மைல் தூரத்தை 7.30 மணி நேரத்தில் நடைபயணமாகக்கடந்து வேலைக்குச் செல்கிறார்.




டேவிஸ் சிட்டியில் வீட்டு வாடகை குறைவாக இருப்பதால் தான் அங்கு வசித்து வருவதாகக் கூறும் ஸ்டீவன், மாதம் ஒன்றிற்கு 400 டொலர் மட்டுமே வீட்டு வாடகையாக செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.
ஹோட்டலில் துப்புரவு வேலை செய்வதால் நாளொன்றுக்கு 72.5 டொலர் சம்பளம் கிடைப்பதாகவும், இந்தப் பணத்தைக் கொண்டு தான் நோயுற்ற தனது மனைவியையும், வேலை கிடைக்காத தனது பேரனையும் காப்பாற்றி வருவதாகவும் ஸ்டீவன் மேலும் கூறியுள்ளார். (14)

பெரு நாட்டில் உள்ள பாலைவனப் பகுதியின் நடுவே ஓர் அதிசய நகரம் அமையப் பெற்றுள்ளது. இதனைக் கண்டுகளிக்க வருடந்தோறும் வரும் சுற்றுலாப்பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (14)

## ஓடிப்பிடித்து விளையாடும் பேய்

வொஷிங்டன்,மார்ச்4
அமெரிக்காவில் உள்ள பூங்காவில் பேய் ஒன்று ஜாலியாக ஓடி விளையாடிய வீடியோ வெளியாகியுள்ளது. இந்தக்காட்சியானது அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.
இதுதொடர்பான இந்த வீடியோ, கடந்த 2009ஆம் ஆண்டு இணையதளத்தில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தநிலையில், இந்த வீடியோவை நபர் ஒருவர் மீண்டும் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார். தற்போது இந்த வீடியோவை பார்த்து வரும் நபர்கள், அந்தப் பூங்காவில் என்ன தான் நடக்கிறது என்று தெரியவில்லை எனக் கூறியுள்ளனர். (14)



## எகிப்தில் நீதிமன்ற வாசலில் குண்டுவெடிப்பு

கெய்ரோ, மார்ச்4
எகிப்து தலைநகர் கெய்ரோவின் மையப் பகுதியில் உள்ள நீதிமன்றத்தின் அருகில் நேற்று பயங்கர குண்டு வெடித்ததில் 8 பேர் படுகாயம் அடைந்தனர்.
அரசுதலைமை வழக்கறிஞரின் அலுவலகம் அமைந்துள்ள நீதிமன்ற கட்டடத்தின் பிரதான வாயிலின் அருகில் குண்டு வெடித்ததாகவும், 6பொலிஸார் மற்றும் பொதுமக்கள் தரப்பில் 2 பேர் என மொத்தம் 8 பேர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எகிப்தில் நடைபெறும் மோசமான தாக்குதல்கள் காசா எல்லையில் உள்ள சினாய் பெனிசுலாவில் நடக்கின்றன.
இது தவிர கெய்ரோவில் சிறுசிறு குண்டுவெடிப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரம் கெய்ரோவில்நடந்த 4 வெடிகுண்டுத்தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (14)

# இஸ்ரேல் மீது போர்க்குற்ற விசாரணை

ரமல்லாஹ்,மார்ச் 4
போர் குற்றம் புரிந்ததாக இஸ்ரேல் மீது பலஸ்தீனம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முதல்முறையாக வழக்கு தொடர உள்ளது.
இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையே கடந்த 1967ஆம் ஆண்டு தொடக்கம் பிரச்சினை இருந்து வருகிறது. பலஸ்தீனம் தனிநாடு கோரிக்கையும் முன் வைத்துள்ளது. இதே வேளை பலஸ்தீனத்தின் கட்டுப்பாட்டில் காஸா, மேற்குகரை, ரமல்லாஹ் ஆகிய பகுதிகள் மீது இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி அங்கு குடியிருப்பவர்களை விரட்டியடித்தும் வருகிறது.
இந்த நிலையில் பலஸ்தீன விடுதலை இயக்கம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் எதிர்வரும் ஏப்ரல்மாதம் வழக்குத்தொடர உள்ளது.
பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் கடந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 2ஆயிரத்து 200 அப்பாவி பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
இது குறித்துஇஸ்ரேல் மீது போர் குற்றவிசாரணை நடத்திடக் கோரி நெதர்லாந்தின்ஹேக்நகரில்உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இந்த வழக்குத்தாக்குதல்மேற்கொள்ளப்படவுள்ளது. (14)

## நடைபாதைவாசி சுட்டுக்கொலை

அமெரிக்காவில் வீடற்ற நடைபாதைவாசி ஒருவரை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரப் பொலிஸார் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றுள்ளனர்.
லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வசிக்க வீடுகளற்றவர்கள் சாலையோரங்களில் உள்ள நடைபாதைகளில் தங்கி வருகின்றனர். இதைப் போன்ற ஒரு பகுதியை நேற்றுத்திடீரென சுற்றி வளைத்த பொலிசார் அங்கு தங்கியிருந்த ஒருவரை நோக்கி மின்சாரம் பாய்ச்சும் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். பொலிஸாரின் இந்த அத்துமீறலை தனது கைத்தொலைபேசியில் படம்பிடித்த சமூக ஆர்வலர் ஒருவர் அதை வீடியோ காட்சியாக வெளியிட்டதையடுத்து இந்த மனித உரிமை மீறல் அமெரிக்க மக்களின் இன்றைய விவாதப்பொருளாக மாறியுள்ளது. (14)


## வடகொரியா ஏவுகணை தாக்குதல்



சியோல்,மார்ச்.4
அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் போர்ப் பயிற்சித் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடகொரியா இரண்டு ஏவுகணைகளை வீசித்தாக்குதல் நடத்தியுள்ளது.
இதனால், இரு கொரிய நாடுகள் இடையே, போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வருடந்தோறும் தென்கொரியா, அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து, இரு மாதங்களுக்குப் போர்ப் பயிற்சி மேற்கொள்வது வழக்கம். இது, தன் மீது போர் தொடுப்பதற்கான முயற்சி என, வடகொரியா கண்டித்து வருகிறது. இந்தப் போர்ப் பயிற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், வடகொரியா, கடந்த வருடங்களில் அணுகுண்டு சோதனை நடத்தியது. கடந்த வருடம் ஜனவரியில், 'அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகள் இந்தாண்டுகூட்டுப்போர்ப்பயிற்சியை ரத்துச் செய்தால், அணுகுண்டு சோதனை நடத்த மாட்டோம்' என, வடகொரியா கூறியது. ஆனால், 'இந்த மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம்' என்று கூறிய அமெரிக்கா அதன் முப்படையை சேர்ந்த 3 ஆயிரத்து 400 வீரர்களை தென்கொரியாவிற்கு அனுப்பியது. இவர்கள், தென்கொரியாவை சேர்ந்த, 2 இலட்சத்துக்கும் அதிகமான இராணுவத்தினருடன் இணைந்து போர்ப் பயிற்சியை துவக்கியுள்ளனர்.
இதனால் ஆத்திரமடைந்த வடகொரியா, துறைமுக நகரமான நம்போவில் இருந்து தென்கொரியா மீது, இரண்டு ஏவுகணைகளை ஏவியது. ஏவுகணைத் தாக்குதல் காரணமாக, வடகொரியா, தென்கொரியா நாடுகள் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (14)

## கோழி முட்டை 45 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை

லண்டன், மார்ச்4
பிரபல ஒன்லைன் ஷொப்பிங் வெப்சைட்டான ஈபே-யில் ஒரு கோழியின் முட்டை ரூ.45 ஆயிரத்திற்கு விற்பனையாகியுள்ளது.



இங்கிலாந்தின் லட்சிங்டனில் வசித்து வருபவர் கிம் பிராட்டன். அவரது பண்ணையில் கோழிகளை வளர்த்து வருகிறார். அவரது கோழிகளில் செல்லமாக வளர்ந்து வந்த பிங் பாங் அதிசயமாகப் பந்து வடிவத்தில் முட்டையிட்டது.
அந்த முட்டையை ஒன்லை னில் விற்பதற்கு முடிவு செய்தார். அதை பார்த்துபலர்வாங்குவதற்குமுன்வந்தனர். இறுதியாக ஒருவருக்கு ரூ.45 ஆயிரம்(480பவுண்டுகள்)விலைக்கு விற்கப்பட்டதுஅந்தப்பணத்தைஅவரது நண்பரின் மகன் நோயால் இறந்த தன்நினைவாக சிஸ்டிக்பிப்ரோசிஸ் என்ற டிரஸ்ட்டுக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டார். (14)

# மக்களின் பாதுகாப்புக்காக வரவு செலவை உயர்த்தும் ஜேர்மன்

சர்வதேச அளவில் நிலவி வரும் அசாதரண சூழ்நிலைகளின் காரணமாக நாட்டு மக்கள் பாதுகாப்புக்காக செலவிடப்படும் வரவு செலவுத்திட்டத்தை உயர்த்த உள்ள தாக ஜேர்மனி அரசு தெரிவித்துள்ளது.
ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட சர்வதேச அளவில் உறுதியற்ற நிலைமை நிலவி வருவதால், இதனை எதிர்கொள்ளும் வகையில் நாட்டின் பாதுகாப்புக்கு செலவிடப்படும் சராசரி தொகையை இன்னும் சில வருடங்களில் உயர்த்த முடிவு செய்துள்ளது.
பாதுகாப்பு குறித்து ஏற்பாடுகளை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதால், அந்த துறைக்குரிய செலவினங்களையும் உடனடியாக உயர்த்த முடியாதுள்ளதால், அரசு வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான அனைத்து செலவினங்களையும் சராசரியாக உயர்த்த அரசு பரிந்துரை செய்துள்ளது. தற்போதைய உலகில் பாதுகாப்பின்மை அதிக அளவில் நிலவி வருவதால், அந்த துறைக்குரிய செலவினங்களை உயர்த்த வேண்டியது அவசியமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (14)



## 20 கிலோ நிறையுடன் வலம் வரும் குழந்தை

ஜார்கண்ட்,மார்ச் 4
ஜார்கண்ட் மாநிலத்தில் 10 மாத குழந்தை ஒன்று 20 கிலோ எடையுடன் இருப்பது பெற்றோர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.
ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள முகமது சலீம் மற்றும் ஷபீனா பர்வின் ஆகியோருக்கு பிறந்த அலியா சலீம் என்ற சிறுமி பிறக்கும் போது சாதாரண நிறையுடன் பிறந்தார் என்றும் 4 மாதங்களுக்குப் பின்னர் நிறை அதிகரித்து வருவதாகவும், சராசரியாக 6 வயதுள்ள குழந்தை போன்று அலியா சலீம்மின் நிறை உள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.
இது குறித்து குழந்தை மருத்துவ நிபுணர் கிருஷ்ணா கூறுகையில், இது ஒரு ஹார்மோன் மாற்றத்தால் நிகழக்கூடியது. குழந்தையை வைத்து சில சோதனைகளை செய்ய வேண்டி உள்ளது.சரியான ஆய்வுக்கு பின்னர் தான் இதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.(14)

# யாழ்ப்பாணத் தமிழ் மக்களும்

## மதுபாவனைக் கலாசாரமும்

தே. பிறேமராஜா
மது ஒழிப்பு ஆர்வலர்

யாழ்ப்பாணத்திலே மதுபாவனைக் கலாசாரம் அதிகரித்துச் செல்கின்றமை கவலையை அளிப்பதாக உள்ளது. போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் காணப்படும் புதிய கலாசாரம் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.



இதற்கு முக்கிய காரணியாக விளங்குவது மதுபாவனை என்பதுதான் வருத்தமளிக்கின்றது. தமிழ் மக்களின் சொத்துக்கள் சொந்தங்கள் ஆகியன போரால் அழிக்கப்பட்டன. போர் நிறைவடைந்ததும் மதுபான வகைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இன்றைய இளைஞர்கள் மதுபானங்களுக்கு அடிமையாகி தமது எதிர்காலத்தையே தொலைத்து நிற்கின்றனர். இன்று யாழ்ப்பாணத்தில் பார்க்கும் இடமெல்லாம் மதுபானசாலைகள் காணப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் அபிவிருத்தி என்பது பௌதீக அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டே அளவிடப்பட்டது. ஆனால் தற்காலத்தில் சமூக அபிவிருத்தியே சிறந்த அபிவிருத்தியாகக் கொள்ளப்படுகின்றது. ஒருவன் தான் வாழும் சமூகத்தில் எவ்வாறு சந்தோசமாக வாழ்கின்றான் என்பதை அடிப்படையாக வைத்தே அளவீடுகள் அமைகின்றன. இந்த வகையான சந்தோசம் இல்லாதவன் அதனை அனுபவிக்க முடியாத கோழையாக மாறி விடுகின்றான். அவனுக்கு மதுப் போத்தலைத் தவிர வேறெதுவும் சந்தோசம் தரமாட்டாது எனவும், அவன் கருதுகின்றான். அத்தோடு இன்றைய இளைஞர்கள் ஒன்றுகூடும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குறிப்பாகக் களியாட்ட நிகழ்வுகள், சுற்றுலாக்கள், பண்டிகைகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்றவற்றில் மதுவைப் பாவிக்கின்றனர். மகிழ்ச்சியாக இருக்கலாம் எனும் சாராயப் போலிகளின் பேச்சைக்கேட்டு அனைத்துச் சம்பவங்களிலும் சாராயத்தைக் குடித்துவிட்டு போலிவேடம் பூண்டு ஆட்டம்போடும் இளை

உருவாக்கப்படுவதில்லை. மதுவை அருந்தியவர் வேறு இயல்பான சந்தோசம் நிறைந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதை நாம் அன்றாடம் அவதானித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இதேவேளை மதுவை அருந்திவிட்டு என்ன தவறு செய்தாலும் அதனை மன்னிக்கும் அனுமதியை எமது சமூகம் வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றது. அவன் நல்லவன், ஆனால் மது அருந்தினால் மட்டும்தான் இவ்வாறு தவறு செய்கின்றான் என்று கூறி மதுவின் மீது பழியைப்போட்டு விடுகின்றது. எனவே ஒருவன் ஒரு தவறு செய்யும்போது குடித்திருந்தாலும் அதற்கான தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும். மதுவை அருந்துவதற்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

அனுப்பப் பஞ்சி போக்க....!, கவலையைப் போக்குவதற்கு, சந்தோசமாக இருப்பதற்கு, சண்டித்தனம் செய்வதற்கு, கௌரவத்தைப் பேணுவதற்கு, நினைத்ததை முடிக்க, கடினமான வேலைகளைச் செய்வதற்கு, நட்பைப் பரிமாறிக் கொள்வதற்கு, நிம்மதியான உறக்கத்துக்கு, உறக்கமின்றி விழித்திருப்பதற்கு, பிரச்சினைகளை மறப்பதற்கு, பழையவற்றை நினைவுபடுத்துவதற்கு, பசியைப் போக்குவதற்கு, பசியை உண்டாக்குவதற்கு, குளிரைப் போக்கி உடம்பைச் சூடேற்றுவதற்கு இப்படியான போலிக் காரணிகள் சமூகத்தில் நிலைத்து நிற்பதால் தான் புதியவர்கள் இவற்றுக்கு ஏமாந்து மதுவை அருந்துவதற்கு முற்படுகின்றனர். ஆனால் மேற்குறிப்பிட்ட காரணங்கள் எதுவுக்குமே மது ஒரு தீர்வாகாது என்று நாம் விஞ்ஞான ரீதியாக விளக்கம் அளித்துள்ளோம்.

இன்றைய காலகட்டத்தில் மதுசாரம் மற்றும் போதைப் பொருள்களை இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு தென்னிந்திய சினிமாவின் பங்களிப்பு முக்கியமாக உள்ளது. இன்று எமது சமூகத்தில் இடம்பெறும் சில சம்பவங்கள் சினிமாப்பாணியில் அரங்கேறுவதைக் காண முடிகின்றது. குறிப்பாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பழிக்குப்பழி, பாலியல் பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம், முறையற்ற பாலியல் தொடர்பு மற்றும் மதுபாவனை எனப் பல அதில் அடங்கியுள்ளன.

இன்றைய இளைஞர்கள் சிந்தனைத் திசை மாறா இலட்சிய நோக்கு உடையவர்களாக இருக்க வேண்டுமானால் மதுவுக்குப் பலியாகாமல் இருத்தல் வேண்டும்.

மதுபாவனையை ஒழிப்பதற்கான எமது செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் சண்டை சச்சரவுகள் குறையும், பாலியல் துஷ்பிரயோகங்கள் குறையும், ஒவ்வொரு மனிதனது ஊதியமும் தனது குடும்பச் செலவுக்கே பயன்படுத்தப்பட்டு பிறரிடம் கையேந்தும் நிலைமை மாறும். ஒற்றுமையான மிகுந்த ஆரோக்கியமான சந்தோசமான குடும்ப வாழ்க்கை மிளிரும். குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்படும். வாழ்க்கையில் இயல்பான சந்தோசங்கள் அதிகரிக்கும். இது போன்ற மாற்றங்களை நினைக்கும்போதே எவ்வாறு புத்துணர்ச்சியாக இருக்கின்றது. ஆம் இனிதே செயற்படுவோம்! என்றோ ஒரு நாள் இந்த மாற்றத்துக்காகத்தான் நாங்களும் செயற்பட்டோம் அதை இப்போது அடைந்தோம் என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்லும் காலம் வரும்போது கண்டிப்பாக யாழ்ப்பாணம் மாறவே செய்யும்.

**இன்றைய இளைஞர்கள் மதுபானங்களுக்கு அடிமையாகி தமது எதிர்காலத்தையே தொலைத்து நிற்கின்றனர். இன்று யாழ்ப்பாணத்தில் பார்க்கும் இடமெல்லாம் மதுபானசாலைகள் காணப்படுகின்றன.**



## வட பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் பெறுவதற்கு பாதுகாப்பான சேவையை வழங்கும் சம்பத்



வெளிநாட்டிலிருந்து இலங்கையிலுள்ள தமது அன்புக்குரியவர்களுக்கு வெவ்வேறு தேவைகளின் நிமித்தம் பணத்தை அனுப்பும் போது அது விரைவாகவும் பாதுகாப்பாகவும் வசதியான முறையிலும் இலங்கையிலுள்ளவரை சென்றடைய வேண்டும் என்பது அனுப்புபவரின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதுபோலவே இலங்கையிலுள்ளவர்களுக்கும் தமக்கு வரும் பணம் முழுமையாக பாதுகாப்பாக துரிதமாக கிடைக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து பணத்தை அனுப்புவதற்கு வெவ்வேறு முறைகள் காணப்பட்ட போதிலும் உறுதி யான வங்கி வலையமைப்பு ஒன்றினூடாக அனுப்பப்படும் சேவை என் பதன் மூலமாக அனுப்பும் தொகை பாதுகாப்பாகவும் விரைவாக வும் வசதியான முறையிலும் பெறுபவரை வந்தடைவது உறுதி செய்யப் படுகிறது. சம்பத் வங்கியின் ஈ–ரெமிட்டன்ஸ் சேவை பற்றி வங்கியின் வட பிராந்தியத்துக்கான முகாமையாளர் பி.சங்கர் உடன் மேற்கொண்ட நேர்காணலின் போது வட பிராந்தியத்தில் எட்டுக் கிளைகளை சம்பத் வங்கி கொண்டுள்ளது. நெல்லியடி, யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, திருநெல்வேலி, புங்குடுதீவு, சாவகச்சேரி ஆகிய நகரங்களில் இந்த கிளைகள் காணப்படுகின்றன.

ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை பொறுத்தமட்டில் கடந்த இரண்டு வருடங்களில் உயர்வடைந்துள்ளது என குறிப்பிடலாம். இதற்கு பிரதான காரணியாக நாம் வழங்கும் சேவையின் தரத்தை நாம் மேம்படுத்தியுள்ளோம். ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை பயன்படுத்த வரும் வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நாம் சேவைகளை வழங்குகிறோம். இதன் காரணமாக எமது சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

துரித சேவையை சாந்தமான முறையில் வழங்குவதன் மூலமாக வட பிராந்தியத்தில் நாம் வெற்றிகரமாக எமது வங்கிச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறோம். இந்த பிராந்தியத்தின் மக்கள் மத்தியில் ந–ரெமிட்டன்ஸ் சேவை தொடர்பில் சிறந்த வரவேற்பும் அறிவும் காணப்படுகிறது என தெரிவித்தார்.

ஈ–ரெமிட்டன்ஸ் சேவை தொடர்பில் அவருடனான முழு நேர்காணலின் விவரம் வருமாறு

**ஈ–ரெமிட்டன்ஸ் என்றால் என்ன?**

ஈ–ரெமிட்டன்ஸ் என்பது இணையத்தை அடிப்படையாக கொண்டு வெளிநாடுகளிலிருந்து பணத்தை உள்நாட்டுக்கு அனுப்பும் சேவையாக அமைந்துள்ளது.

**இது எவ்வாறு செயற்படுகின்றது?**

குறித்தவொரு சர்வதேச கட்டமைப்பினூடாக அனுகூலம் பெறுபவருக்கு பணத்தை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக் கும் வகையில் அமைந்துள்ளது. சட்டபூர்வமான வெளிநாட்டு நாணய பரிமாற்றல் சேவையை பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?

பணத்தை பாதுகாப்பான முறையிலும் நம்பிக்கையான வகையிலும் அனுப்புவதற்கு சட்டபூர்வமாக வெளிநாட்டு நாணயத்தை அனுப்புவது சிறந்ததாகும்.

**ஈ–ரெமிட்டன்ஸ் பற்றி பொதுவாக நிலவும் தவறான கருத்துக்கள் என்ன?**

இந்த முறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் பற்றி போதியளவு அறிவின்மை மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அத்துடன் இந்த முறை தொடர்பில் மக்கள் மத்தியில் போதியளவு நம்பிக்கை யின்மையும் காணப்படுகிறது. ஆனாலும் எமது ஈ–ரெமிட்டன்ஸ் சேவை பற்றி மக்கள் அதிகளவு விழிப்புணர்வுடன் உள்ளனர்.

**ஈ–ரெமிட்டன்ஸ் ஊடாக அனுப்பும் தொகையில் ஏதேனும் வரையறைகள் காணப்படுகிறதா?**

பொதுவாக வரையறைகள் இல்லை இருந்த போதிலும் அனுப்பும் நாடுகளில் காணப்படும் வரையறைகளை பொறுத்து இந்த தொகை வேறுபடும். இது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு அமைவாக சகல நிதி நிறுவனங்களாலும் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியுள்ளது.

**ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை பயன்படுத்தும் போது வரி விதிப்புகள் உண்டா?**

இந்த சேவையை பயன்படுத்தும் போது எவ்விதமான வரி அறவீடுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது.

**பணத்தை அனுப்பும் போது ஈ–ரெமிட்டன்ஸ் முறை என்பது ஏன் நவீன மற்றும் பாதுகாப்பான முறையாக கருதப்படுகிறது?**

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தை பாதுகாப்பாகவும் விரைவாகவும் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் சேவை ஏன் பிரத்தியேகமானதாக அமைந்துள்ளது?**

பரந்த வலையமைப்பினூடாக இந்த சேவையை பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. சந்தையின் முன்னோடிகளாக திகழும் நிறுவனங்களுடன் கைகோர்த்துள்ளது. பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் வேகமானதாக அமைந்துள்ளது. குறைந்தளவு தரகுக் கட்டணம் அறவிடப்படுகின்றது. உயர் தரம் வாய்ந்த சிறந்த சேவை போன்றன வழங்கப்படுகின்றன.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் ஊடாக எவ்வாறு பணத்தை அனுப்பவும் பெறுக் கொள்ளவும் முடியும்?**

சம்பத் வங்கியின் ஈ.எம்.ரி.எஸ் (சம்பத் இலத்திரனியல் பண பரிமாற்றல் கட்டமைப்பு) சேவையை பயன்படுத்துவதன் மூலமாக இந்த சேவையை பயன்படுத்த முடியும்.


**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் ஊடாக கிடைக்கும் விசேட சௌகரியங்கள் என்ன?**

குறைந்தளவு நேரத்தில் பணத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளமை. நாட்டினுள்ளேயே பணத்தை அனுப்பக்கூடியதாக உள்ளமை. சம்பத் மொபைல் பண சேவை ஊடாக பணத்தை நாடு முழுவதும் காணப்படும் ஏ.ரி.எம் வலையமைப்பினூடாக 365 நாள்களினுள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

**சம்பத் ஈ–ரெமிட்டன்ஸ் சேவையை வாடிக்கையாளர்கள் எவ்வாறு எங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம்?**

வெளிநாட்டிலுள்ள வாடிக்கையாளர்கள் ஈ–ரெமிட்டன்ஸ் சேவை ஊடாக எமது பரிமாற்றல் கம்பனிகள் மற்றும் பி.பி.ஒக்கள் ஊடாக

# வாசகர் திருமுகம்



## கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்

சித்தன்கேணிச் சந்தியில் மோட்டார் சைக்கிளால் மோதப்பட்டு ஒருவர் உயிரிழந்த பரிதாபச் சம்பவம் மன்னிக்க முடியாத ஒன்றாகும்.

தலைக் கவசத்தை அணியாத இருவர் பயங்கர வேகத்துடன் மோட்டார் சைக்கிளில் வருவதைக் கண்ட இறந்தவர் பயத்தின் காரணமாக வீதியில் ஒதுங்கி நின்றுள்ளார். அப்போது மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தவர்கள் வீதியோரத்தில் ஒதுங்கி நின்றவரை மோதித் தள்ளியுள்ளனர். இதில் மோதுண்டவர் பரிதாபமாக உயிரிழக்க மோதியவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்மூடித்தனமாகவும் பொறுப்பற்ற விதத்திலும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் அப்பாவி ஒருவரை அநியாய மாக உயிரிழக்கச் செய்துள்ளனர். இதை சாதாரண ஒரு விபத்தென எடுத்துக் கொள்ள முடியாது. மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் விபத்தை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் அப்பாவி ஒருவரின் சாவுக்கு காரணகர்த்தாக்களாக மாறிவிட்டனர்.

மோட்டார் சைக்கிள்களே தற்போது வீதிகளில் அதிகமாகப் பயணிக்கின்றன. முன்பு சைக்கிள்கள் இருந்த இடத்தில் தற்போது மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. அவசர தேவைகளுக்கு மோட்டார் சைக்கிள்கள் நல்ல வாகனங்கள் தான். ஆனால் அவசர கதியில் எமலோகம் புகுவதற்கும் அவை உதவுவதுதான் வேதனை தருகின்றது. நாடுபூராகவும் தினமும் மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்களில் சிக்குவதும் பலர் உயிரிழப்பதும் வாடிக்கையான நிகழ்வுகளாகிவிட்டன. தலைக் கவசங்களை அணிந்து கொண்டு மிகையான வேகத்தில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தினால் விபத்துக்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பும் குறைந்துவிடும். ஆனால் இவையிரண்டும் கடைப்பிடிக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்படுவதோடு பலர் உயிரிழந்தும் வருகின்றனர்.

தற்கால இளைஞர்கள் வருமானம் கிடைக்கின்றதோ இல்லையோ மோட்டார் சைக்கிளில் கம்பீரமாக வலம் வருவதே தமக்கும் கௌரவம் என நினைக்கின்றனர். அவர்களது பெற்றோரும் தமது பிள்ளைகளின் நச்சரிப்பைப் பொறுக்க முடியாத நிலையில் கடன்பட்டாவது மோட்டார் சைக்கிள்களை வாங்கிக் கொடுத்து விடுகின்றனர். இந்த இளைஞர்கள் விதிகளை மதிக்காது அவற்றை இயக்கிச் செல்வதால் அப்பாவிகளின் சாவுக்குக் காரணமாகி வருகின்றனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் விபத்துக்களை ஏற்படுத்தி மற்றவர்களின் சாவுக்குக் காரணமானவர்களுக்கு மிகக் குறைவான தண்டனையே வழங்கப்படுகின்றது. இதனால் விபத்துக்களை ஏற்படுத்துவதில் எவருக்கும் அஞ்சாத நிலைதான் இன்று காணப்படுகின்றது.

ஆகவே தேவையற்ற விதத்தில் விபத்துக்களை ஏற்படுத்துபவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிப்பதன் மூலமாகவே அப்பாவிகளின் உயிரிழப்பைத் தடுக்க முடியும்.

*க.பாஸ்கரன்,வட்டுக்கோட்டை*

## கட்டாக்காலி நாய்களை அழிக்க வேண்டும்

மஹிந்த காலத்தில் இருந்து இன்று வரை தெருக்களில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

மஹிந்த சிந்தனையில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களைக் கொல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் இவ்வாறான நாய்கள் கட்டுப்பாடு எதுவுமின்றி பெருகிக் காணப்படுகின்றன. காலையில் வீதிகளில் செல்லும் போது இவற்றின் எச்சங்களைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது. இவற்றினால் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

உடம்பு முழுவதும் சொறி ஏற்பட்டு புண்களுடன் காணப்படும் நாய்கள், பார்ப்பதற்கு அருவருப்பாக உள்ளன. சிலவேளைகளில் வீதிகளில் செல்பவர்களை நாய்கள் துரத்திச் சென்று கடிப்பதும் உண்டு. நாய்களால் கடியுண்டவர்கள் ஊசிபோட்டுக்கொள் ளும் பொருட்டு மருத்துவமனைகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

வீட்டில் வளர்க்கப்படும் நாய்களும் கட்டாக்காலி நாய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே புதிய அரசு, மஹிந்த சிந்தனையைப் புறமொதுக்கிவிட்டு கட்டாக்காலி நாய்களை அழித்து விடுவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

இதுவே இத்தகைய நாய்களால் பாதிக்கப்படுவர்களின் எதிர்பார்ப்பாகும்.

*கு.இரங்கன், அச்சுவேலி.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# சீனாவுடன் முரண்படும் இலங்கை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் காலத்தில் சீனா–இலங்கை இடையிலான உறவுநிலை மிகமிக நெருக்கமாக இருந்தது. இந்தியாவுக்கு சினத்தை வருவிக்கும் அளவுக்கு சீனாவுடன் நெருங்கிப் பழகினார் மஹிந்த. அதன் பயனாக இலங்கையில் பல முதலீட்டு வாய்ப்புக்கள் சீனாவுக்கு வழங்கப்பட்டன. சீனா இலங்கைக்கு கடன்களை அள்ளி வழங்கி, இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் செல்வாக்கைக் குறைப்பதற்கான ஓர் உத்தியாக இலங்கையுடன் ஒட்டிக்கொண்டது.

இந்த நடவடிக்கை இந்தியாவுக்கு கடும் வெறுப்பேற்றும் செயலாகவே அமைந்தது. இதுகுறித்து பல தடவை இந்தியா இலங்கைக்கு நேரில் எச்சரித்தபோதும், சீனாவுடனான த்னது உறவை எந்தவித மாற்றமும் இன்றி, தொடர்ந்து வந்தார் மஹிந்த.

சீனா–இலங்கை இடையிலான நெருக்கத்தின் உச்சக்கட்டமாக கொழும்புத் துறைமுகத்தை சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி அளித்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த. இந்த அனுமதி சீனாவுக்கு இரட்டிப்புச் சந்தோஷத்தை அளித்த அதேவேளை, இந்தியாவை கோபமூட்டிய செயலாக அமைந்தது. இதனால், இந்தியா இதுகுறித்து இலங்கைக்கு அழுத்தங்கள் வழங்கியபோதும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் சீனாவுடன் ஒட்டி உறவாடினார் மஹிந்த.

ஆயினும், மஹிந்தவின் ஆட்சி வீழ்ச்சி கண்டபின்னர், இலங்கை–சீனா உறவில் விரிசல் ஏற்படுவதற்கான வாய்ப் புகள் படிப்படியாக தென்படுகின்றன. புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள மைத்திரி அரசு, சீனாவைக் கைவிட்டு, இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவை வளர்க்க ஆரம்பித்துள்ளது. இது விடயத்தில் புதுடில்லியும் கொழும்பும் மிக நெருங்கிச் செயற்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், தனது முதல் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டு அந்த நாட்டுடனான நல்லுறவுக்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்தியா சென்ற மைத்திரிபாலவுக்கு அங்கு கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது. வழமையாக மஹிந்த இந்தியாவுக்குச் செல்லும்போதெல்லாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், வீதி மறியல்களையும் நடத்தும் தமிழகக் கட்சிகள் மைத்திரியின் பயணத்துக்கு வரவேற்பு வெளியிட்டிருந்தன. என்றுமில்லாத வரவேற்பு இந்தியாவில் மைத்திரிக்குக் கிடைத்தது. அதேபோன்று, இலங்கைக்கான தனது முதல் பயணத்தை மேற்கொண்டு, அடுத்தவாரம் வருகிறார் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி. இலங்கையுடனான நல்லுறவை வளர்க்கும் ஒரு நல்லெண்ணப் பயணமாக மோடியின் வருகை நோக்கப்படுகிறது.

இவற்றின்மூலம் இலங்கை–இந்தியா இடையிலான உறவுநிலை புதுப்பிக்கப்பட்டு, ஒரு ஸ்திர நிலை பேணப்படக் கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன. இலங்கை–இந்தியா இடையிலான இந்த நெருக்கம் சீனாவின் வயிற்றில் புளியைக் கரைப்பதாக அமைந்திருக்கிறது.

அண்மையில், சீனா சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீன நீர்மூழ்கிகளை கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதிக்க முடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார். மஹிந்த அரசின் இந்த அனுமதி பற்றி புதிய அரசு ஆராய்ந்ததாகவும் அதன் அடிப்பண்டயில் நீர்மூழ்கிகளை கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதிப்பதில்லை என்றும் அவர் குறிப்பிட்டர்ர். அமைச்சரின் இந்தக் கூற்றுமூலம் இலங்கை–சீனா உறவு விரிசல் நிலையை எட்டும் நிலைக்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேநேரத்தில் சீனாவின் நீர்மூழ்கிகள் தரித்துச் செல்வதை இலங்கை வரவேற்கும் என தாம் எதிர்பார்ப்பதாக சீன வெளிவிவகார் அமைச்சு தெரிவித்துள்ளது. மங்கள சமரவீரவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே சீன வெளிவிவகார அமைச்சு இதனைக் கூறியுள்ளது. இலங்கையுடன் தொடர்ந்தும் நெருக்கமாக இருக்க சீனா விரும்பினாலும் மைத்திரி அரசு அதனை விரும்பவில்லை. அது இந்தியாவுடன்நெருங் கிப் பழகவே ஆவலாக உள் ளது. இதன்மூலம் எதிர்காலத்தில் இலங்கை– சீனா உறவு கேள்விக் குறியாகும் என்பதில் சந்தேகமில்லை.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசுகள் மாறினாலும் தமிழரின் உரிமைகள் கேள்விக்குறியே......

இன முரண்பாடுகளை மறந்து, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அபிவிருத்திப் பணி களை மேற்கொள்ள வேண்டும். அவ்வகை சார்ந்தே, இப்போதைய அரசினால் அபிவிருத் திப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன --

இன முரண்பாடுகள் காரணமாகவே இந்த நாட்டில் போர் உருவானது. போரினால் சிங் கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பாதிப்புற்றுள்ளனர். இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் அபி விருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் -- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கலாசாரத்துறை இராஜாங்க அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்கா.

இலங்கையை அந்நியர்களிடமிருந்து மீட்டு சுதந்திர நாடாக மாற்றுவதற்கு, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் போராடினார் கள். அவர்கள் பெற்ற சுதந்திர இலங்கையில், டி.எஸ். சேனநாயக்கா காலத்தில் மூவின மக்களும் - அனைவரும் சம உரிமைகள் கொண்ட வர்களாக - சமமாக நடத்தப்பட்டனர். அதன் பின்னரே இனமுரண்பாடு உருவாகியது -- உருவாக்கப்பட்டது என்ற சரித்திரத்தையும், கிழக்கிலங்கையில், தமிழர் பிரதேசமான திருக்கோவிலில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விவரித்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர்வரை, ஒன்பது ஆண்டுகள் காலமாக தொடர்ச்சியாக ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருந்த ராஜபக்ஷ அரசும், அபிவிருத்தி ஊடாக மட்டும் இன முரண்பாட்டைக் களைய இயலும் என்ற ஒவ் வாத நடைமுறையை மேலே உயர்த்திப் பிடித்து செயற்படுத்தி வந்தது. ஆனால் அதனூடான பெறுபயன் பூச்சியமாகவே தொடர்ந்தது.

அதாவது வெறுமனே, அபிவிருத்தியால் மட் டும் இனமுரண்பாட்டுக்குத் தீர்வு காண இய லாது என்ற தேற்றமே அனுபவப் பாடமாகி உள்ளது.

புதிய ஜனாதிபதியைப் பதவிக்குக் கொண்டு வருவதில் பெரும் பங்கு வகித்த தமிழ் மக்கள், ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்பது போன்ற நிலையே இப்போது மேலெழுந்து உள்ளது.

இதேவேளை, வெறுமனே அபிவிருத்தித் திட்டங்களால் எந்தப் பிரதேச மக்களும் நின்று நிலைக் கும், பெறுமதியான பயனை அடைய இயலாது என்பதே யதார்த்தமும், உண்மையும் ஆகும்.

அத்தகைய நின்று நிலைக்கும் அபிவிருத்தித் திட்டங்களை (Sustainable Development Projects) --போரினால் சிதைக்கப்பட்ட, சீரழிக்கப்பட்ட - தமிழ்ப் பிரதேசங்களில், நிலை பேண் அபிவிருத்தித் திட்டங்களாக நடைமுறைப்படுத்துவதே, இன்றைய முக்கிய தேவை.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை, நடைமுறைப்படுத்துவதற்கு முன்னோட்டமாக, தமிழ் இளைஞர், யுவதிகள் தமது சொந்த மண்ணில் சுதந்திர மாக நடமாடுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

தமிழ் மக்கள் -- தமிழ் இளைஞர், யுவதிகள் போர்க்காலத்தில் அனுபவித்த பல துன்பங்களுக்கும் அதிகமாக, இப்போதும் மிகப் பல இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். போர்க் காலத்தில் அனுபவித்த வேதனைகளை விடவும், போர் முடிவுற்ற பின்னரும் பெரும் அட்டூழி யங்களுக்கும் அராஜகங்களுக்கும் அவர்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

மிகப் பலர் கொல்லப்பட்டமை, காணாமற் போகச் செய்யப்பட்டமை, வீடு தேடிச் சென்று கடத்தப்பட்டமை, பலர் சிறை வைக்கப்பட்டமை என்பன தொடர்ந்து கொண்டே இருந்தன.

இவை குறித்து, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, வவுணதீவில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வு ஒன்றில் விலாவாரியாகச் சுட்டிக்காட்டி உள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாமல் இருப்பதன் விளைவே இவை என்றும் காத்திரமாகத் தெரிவித்திருக்கிறார்.

கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று பணியாற்றிவிட்டு மீண்டும் இங்கு வரும் தமிழ் இளை ஞர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுத் துன்புறத்தப்படும் அட்டூழியத்தையும் அவர் புட்டுக் காட்டி உள்ளார். ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் மற்றும் அரச பிரதானிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பயணம் செய்து --

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று தேனொழுகப் உரையாற்றிச் செல்வதால் இன நல்லுறவும், நல்லாட்சியும் துளிர்த்துவிட்டதாக, ஒரு துளி அளவும் கிடைத்தாகக் கூறுவதற்கான வெளிச்சம் வெளிப்படவில்லை. கொழும்பு அரசுகள் மாறினாலும், தமிழ் மக்களின் அரசியல், வாழ்வியல் [illegible] உரிமைகள் [illegible] என்பது தூய [illegible] வரும் [illegible] அடுக்காகவே [illegible]

# இனங்களுக்கிடையில் உறவுகளை வளர்க்கும் ஆணைக்குழு வேண்டும்

குவைத்துக்கான முன்னாள் தூதுவர் எஸ்.ஏ.சி. ஸுஹைல் எழுதிய ஆங்கிலக் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

ஒரு தேசம் என்ற முறையில் எமது சமூகத்தில் காணப்படும் பல தரப்பட்ட இனக் குழுக்களுக்கிடையில் நெருங்கிய புரிந்துணர்வைக் கொண்டுவர வேண்டியது அவசியமாகும். வெவ்வேறு கலாசாரங்களைக் கொண்ட பல நூற்றாண்டு பழைமையான மரபுகளைக் கொண்டது எமது தேசம். இருந்தபோதிலும் இவைகளுக்கிடையில் நெருங்கிய புரிந்துணர்வை மற்றும் மற்றவர்களின் கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், மரபுகள் மற்றும் விழுமியங்களை புரிந்து கொள்ளவோ மதிப்பளிக்கவோ தவறவிட்டிருக்கின்றோம்.

எமக்கு சுற்றிலும் வாழ்பவர்களை நாம் அறிந்திருந்தாலும் இந்த முக்கிய அம்சத்தில் கவனம் செலுத்தக்கூடிய அதிகாரபூர்வ அமைப்பைத் தோற்றுவிக்க தவறிவிட்டோம். அது இல்லாமையே இன்று நாட்டை அச்சுறுத்தும் நிலைமையைக் கொண்டு வந்துள்ளது. கடந்த பல பத்தாண்டு காலமாக பல வேதனைகளையும் இன முரண்பாடுகளையும் எதிர்நோக்கி வந்திருக்கின்றோம். இது விடயமாகஎல்.எல்.ஆர்.சி.ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பித்த போது நீதிபதி சி.ஜி. வீரமந்திரி தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் குறித்து வலியுறுத்தியிருந்தார். இதில் முக்கியமாக அமைதிக்கான கல்வி மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலை அவர் அழுத்திக் கூறியி ருந்தார். இவைகளில் நாம் விரைந்து செயற்படவேண்டி யிருக்கின்றது. எனவேதான் இன உறவுக்கான ஆணைக்குழு (Ethnic Relations Commission) ஒன்றை இந்த விடயங்களைக் கையாள்வதற்கென உருவாக்குவதற்கான காலம் கனிந்திருக்கிறது என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கென 19 ஆவது அரசமைப்பு திருத்தம் என்ற வகையில் அரசமைப்பில் திருத்தங்கள் செய்வதற்கான சில யோசனைகளை முன்வைத்து பொதுமக்கள் கருத்துக்களை அரசு கோரியிருக்கிறது. அந்த வகையில் சில முக்கிய யோசனைகளை நான் முன்வைக்க விரும்புகின்றேன். 17 ஆவது திருத்தத்தை மீளவும் உயிர்ப்பித்து 18 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பிலானவை இவை.

உத்தேச ஆணைக்குழுக்கள் அனைத்துமே சில குறிப்பிட்ட பணிகளை வரையறுத்த நிலையில் மேற்கொள்ளவேண்டியிருக்கின்றன. அவை இனரீதியிலான முக்கிய அம்சங்களைப் போதுமான அளவு உள்ளடக்குவதாக இல்லை.

தீவிரவாத அமைப்புகள் தோன்றி மக்கள் மத்தியில் வெறுப்புணர்வுகளை விதைத்து தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயல்வதானது மக்கள் மத்தியில் நிரந்தர பேதங்களையும் ஏற்படுத்தியிருப்பதுடன் சில சமூகங்களில் ஆழமான வடுக்களையும் ஏற்படுத்திவிட்டுள்ளன. இதனை சீரமைப்பதென்பது இலகுவான காரியமல்ல. சமூக ஒருமைப்பாட்டை உருவாக்கும் தெளிவான நோக்கத்துடன் இது அணுகப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையில் அமைதி நிலை பெறாத நிலையில் பொருளாதார வளர்ச்சியினால் எந்தவிதத் தாக்கமும் ஏற்படமாட்டாது. எனவே தான் இனங்களுக்கிடையில் உறவுகளுக்கான ஆணைக்குழு என்ற பெயரில் ஒரு புதிய ஆணைக்குழுவை ஏற்படுத்துவது மிக அவசியமாகின்றது. பல

இதில் முக்கியமாக அமைதிக்கான கல்வி மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலை அவர் அழுத்திக் கூறியி ருந் தார். இவைகளில் நாம் விரைந்து செயற்படவேண்டி யிருக்கின்றது. எனவேதான் இன உறவுக்கான ஆணைக்குழு (Ethnic Relations Commission) ஒன்றை இந்த விட யங்களைக் கையாள்வதற்கென உருவாக்குவதற்கான காலம் கனிந்திருக்கிறது என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.



தரப்பட்ட பிரச்சினைகளை அணுகி, தீர்த்து வைக்கும் பொ[illegible] இந்த ஆணைக்குழுவுக்கு இருக்கவேண்டும். முன்கூட்டியே ஆலோசித்து திட்டங்களை தீர்மானித்து செயற்படுத்தவேண்டும். நிலைமைகளுக்கு ஏற்றபடி அவைகளை எதிர்கொள்ளக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். உதாரணமாகத் தேசிய வாழ்வில் சகல நிலைகளிலும் வேறுபாடுகளை சகித்துக்கொண்டும் ஏற்றுக்கொண்டும் புரிந்து கொண்டும் செயற்படுவதற்குச் சகல இனங்களுக்கிடையிலும் பாது காப்பு உணர்வை வளர்த்தெடுக் கும் பொறுப்பு மற்றும் இனக்குழுக்களும் சமூக, பொருளாதார கலாசார மற்றும் அரசியல் வாழ்வினில் முழுமையாக்க் கலந்துகொள்வதை ஊக்குவித்துவளர்ப்பது.

இதுவரைகாலமும் அர்த்தமுள்ள விதத்தில் அணுகப்படாத மிக முக்கிய அம்சங்களான இனங்களுக்கிடையில் அமைதியையும் சௌஜன்யத்தையும் உருவாக்கும் வகையில் கல்வி மற்றும் ஆய்வுத் திட்டங்களை இனஅமைதிக்கு ஏற்றவகையில் முன்னெடுப்பது.

இம்முயற்சிகள் எமது பல்லின சமூகத்தில் சமயங்களை மற்றும் கலாசார மாறுபாடுகளை மதித்து நடப்பதை ஊக்குவிப்பதாக இருக்கும். மேலும் மத்தியஸ்தம் செய்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், இருதரப்பு நியாயத்தைப் பேசி தீர்த்தல் போன்றவையும் ஊக்குவிக்கப்படுவதாக இருக்கும்.

இந்த வகையில் அந்த ஆணைக் குழுவானது பல்வேறு விடயங்களை கையாள்வதாக இருக்கும். ஆணைக்குழுவானது [illegible] செயல்திறனுடன் பணியாற்றுவதற்கு அதில் சகல பிராந்தியங்களையும் சகல இனங்களையும் கொண்ட உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். கயானா நாட்டில் (Guayana) இம்முறை வெற்றிகரமாக செயற்பட்டுள்ளது.

இலங்கையிலும் இது உருவாக்கப்பட்டு செயல்திறனுடன் செயற்படுத்தப்படுமானால் எம்மைப் போல் பல்லின மக்கள் வாழும் நாடுகளுக்கு நல்ல உதாரணமாக அது விளங்கமுடியும்.



# இலங்கையின் அரசியல் நிலைமை

[illegible]ராஜராஜன்

நாடு நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்கப் போகின்றது. தேர்தல் இடம்பெறுவதற்கான திகதி இன்னமும் முடிவாகவில்லை என்றாலும் அது இடம்பெறுவது உறுதியாகிவிட்டது. தேர்தலின்போது விசித்திரங்களுக்குக் குறைவிருக்காது என்பதையும் இப்போதே அனுமானித்துக் கொள்ள முடிகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலின்போது ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் எதிர் எதிர் முனைகளில் இருந்து செயற்படப்போகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறி[illegible]வும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவும் வெவ்வேறு இரண்டு அணிகளுக்குத் தலைமை தாங்கி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடப் போகின்றமை இந்தத் தேர்தலின் சிறப்பு அம்சமாக இடம்பெறப் போகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போதைய அரசில் இணைந்து செயற்படுகின்ற போதிலும், கொள்கை ரீதியான பிளவுகள் அவற்றிடையே காணப்படுகின்றன. அதேவேளை, மஹிந்தருக்கு விசுவாசமானவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளதால் அவர்கள் தற்போதைய அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கவே விரும்புவார்கள். இவர்களின் பிரதான நோக்கம் மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் நாட்டின் தலைமைப் பதவிக்குக் கொண்டு வருவதே ஆகும்.

இதேவேளை, முன்னைய அரசில் அங்கம் வகித்தவர்களுக்கு எதிரான ஊழல், மோசடி விசாரணைகளை மேற்கொள்வதிலும் தற்போதைய அரசு நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அரசின் முக்கியஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அவர்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அரசு மீது வெறுப்பையும் ஏற்படுத்தி விடலாமென்ற அச்சமும் ஆட்சியாளர்களிடம் காணப்படுகின்றது. இதனால்தான் ஊழல் மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் நத்தை வேகத்தில் நகர்ந்து செல்வதாகக் கூறு[illegible]ோரும் இல்லாமலில்லை.

ஆக[illegible] மைத்திரி–ரணில் கூட்டணி நெருப்பு ஆறு ஒன்றைக் கடந்து செல்லும் நிலையிலேயே தற்போது உள்ளது. இவர்கள் பல சவால்களையும், குழி பறிப்புக்களையும் எதிர்கொண்டு அவற்றில் வெற்றி பெற்றால்தான் ஆட்சியில் நீடிக்கமுடியும். இதேவேளை தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களை ஜனாதிபதி மன்னிக்கமாட்டார் என்றே தோன்றுகின்றது. இதை உறுதி செய்வதுபோன்று நாடாளுமன்றத் தேர்தலில் விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில மற்றும் மஹிந்தவுக்கு ஆதரவான இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து கொண்டு அரசை விமர்சிப்ப[illegible]கள் ஆகியோருக்கு இடமளிக்க[illegible] போவதில்லை என ஜனாதிபதி தீர்மானித்துவிட்டதாக உள்வீட்டுத் தகவல்கள் கசியத் தொடங்கிவிட்டன.


வடக்கு, கிழக்கிலும் தமிழர்கள் மத்தியில் ஸ்திரமற்ற, அதிருப்தி கலந்த மனநிலை காணப்படுகின்றது. இதற்கு மைத்திரி அரசின் தமிழர்மீதான அணுகுமுறையும் முக்கிய காரணமாகும். மைத்திரியை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தியதில் தமிழர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. கூட்டமைப்பின் தலைவர்கள்கூட மைத்திரிக்கு ஆதரவு வழங்குமாறு தேர்தல் வேளையில் கேட்டுக்கொண்டனர். ஆனால் இன்றுவரை தமிழர் பிரச்சினை தொடர்பாக மைத்திரி அரசு ஆக்கபூர்வமாகச் செயற்பட்டதாகத் தெரியவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை, வலிகாமம் வடக்கு, சம்பூர் உட்பட பல இடங்களில் படையினராலும், அரசினாலும் சுவீகரிக்கப்பட்ட மக்களுக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்படாமை, இந்திய மீனவர் பிரச்சினை, காணாமற்போனவர்களின் பிரச்சினை என்பன் தொடர்பாக இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் உருப்படியாக எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் இறுதிப்போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அரசு நழுவல் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருந்த இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பான அறிக்கையும் அரசின் வேண்டுகோளின் பிரகாரம் ஆறு மாதங்களுக்கு அதாவது எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. இதேவேளை சர்வதேச விசாரணைகள் இடம்பெறாதெனவும், உள்ளக விசாரணைகள் இடம்பெறுவதற்கான சாத்தியங்களே அதிகமெனவும் அமைச்சர்கள் உட்பட அரசின் முக்கியஸ்தர்கள் பலரும் பகிரங்கமாகக் கூறி வருகின்றனர். பாதுகாப்பு இணை அமைச்சரின் கூற்றின் பிரகாரம் தமிழர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது. மேலும் இராணுவ காவலரண்களும் அகற்றப்படாது என்பதுடன் இராணுவத்தினரின் எண்ணிக்கையும் குறைக்கப்படமாட்டாது என்பதும் தெரிந்துவிட்டது.

இந்த நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் திசைக்கொன்றாகப் பிரிந்து நிற்கின்றனர். புதிய புதிய அரசியல் கூட்டுக்கள் உருவாகுவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன. கூட்டமைப்புக்குள்ளேயே குத்து வெட்டுக்கள் இடம்பெறுவதாகவும் கூறப்படுகின்றது. சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்டமை, கிழக்கு மாகாணத்தில் சுயகௌரவத்தை விடுத்து முஸ்லிம் காங்கிரஸின் காலில் வீழ்ந்தமை ஆகிய காரணங்களால் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மீது தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் கடும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தமிழர்கள்மாற்றம் ஒன்றை விரும்புவதாகவும் அவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு புதிய அரசியல் நகர்வுக்குத் தாம் தலைமை தாங்குவதற்குத் தயாரெனவும் கூறி வழமை போன்று தனது வித்துவத்தை காட்டத் தொடங்குகிறார் முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவருமாகிய டக்ளஸ் தேவானந்தா. குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கான தருணம் இதுதான் என்பதை அவர் உணர்ந்திருப்பார்.

தமிழ்த் தலைமைகள் மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு வியூகங்களை வகுத்துக் கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதனை அவர்கள் சரிவரப் பயன்படுத்தாமல் விட்டால் குளத்தைக் கலக்கி மீன்களைச் காவுகொடுத்த கதிதான் இங்கு ஏற்படப்போகின்றது.

> “மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அரசின் முக்கியஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அவர்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அரசு மீது வெறுப்பையும் ஏற்படுத்தி விடலா மென்ற அச்சமும் ஆட்சியாளர் களிடம் காணப்படுகின்றது.”



## குழப்பமானதொரு நிலையில்

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 7 | | 9 | | | 5 | 8 |
| 2 | | 9 | 8 | | | | | 3 |
| | | 8 | | | | 9 | | 6 |
| 6 | | | 7 | | 3 | | | 4 |
| 7 | | | 1 | | 4 | | | 5 |
| 4 | | | 9 | | 5 | | | 7 |
| 3 | | 5 | | | | 8 | | |
| 9 | | | | | 8 | 4 | | 1 |
| 8 | 7 | | | 1 | | 5 | 3 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 3 | 2 | 7 | 9 | 1 | 6 | 4 |
| 6 | 9 | 1 | 8 | 4 | 3 | 7 | 5 | 2 |
| 4 | 2 | 7 | 6 | 1 | 5 | 9 | 8 | 3 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 2 | 5 | 3 | 7 |
| 5 | 4 | 9 | 7 | 3 | 6 | 2 | 1 | 8 |
| 3 | 7 | 2 | 5 | 8 | 1 | 6 | 4 | 9 |
| 2 | 6 | 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 1 |
| 7 | 1 | 5 | 3 | 2 | 8 | 4 | 9 | 6 |
| 9 | 3 | 4 | 1 | 6 | 7 | 8 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தவக்காலச் சிந்தனை



## அன்பின் பிறப்பிடமே அமைதியின் இருப்பிடம்

ஒவ்வொரு மனிதனும் அமைதியின் உருவாகவே இறைவனால் படைக்கப்படுகின்றான். ஆனால் அவனது வளர்ச்சிப் பாதையிலே ஏற்படும் பிறழ்வுகள் அமைதியீனத்தைத் தோற்றுவிக்கிறது. பிறப்பிலும் இறப்பிலும் தோன்றும் அமைதி இடையிலே தொலைந்து போகக் காரணமென்ன? அமைதி என்பது கடையில் வாங்கும் பொருளோ பிறர் வழங்கும் பரிசோ அல்ல. உள்ளத்தில் இருந்து உள்ளத்துக்கு பரிமாறப்படும் உன்னத அன்புதான், அதன் தோற்றுவாய் என்னும் யதார்த்தத்தை உணராமையே அதற்கு காரணம் ஆகும்.

'கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்' என்னும் எதிர் மறைச் செயற்பாடுகளை மாற்றி "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறுகன்னத்தைக் காட்டு, உன் மேலாடையைக் கேட்பவனுக்கு உன் அங்கியையும் கொடு, தூற்றுவோருக்காகவும் மன்றாடு" என அன்புக்குப் புதிய இலக்கணம் படைத்தார் இயேசு.இதுவே இறைமகன் விட்டுச் சென்ற அமைதியின் அடித்தளம்.

அடிமைக்கு உரிமையும், பிணக்குக்கு தீர்வும் பகைமைக்கு அன்பும், எதிரிக்கு மன்னிப்புமே அமைதியைத் தரவல்லன. பசிக்கு உணவும், தனிமைக்கு அரவணைப்பும் உடல் உள ஊனத்துக்கு ஆற்றுப்படுத்தலுமே அமைதியை உருவாக்க உதவும் பணிகளாகும்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்;ஏனெனில் அவர்கள்கடவுளின்மக்கள்எனஅழைக்கப்படுவர். (மத்5:9)

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## குழந்தைகளை தன்னம்பிக்கை உடையவர்களாக வளருங்கள்

குழந்தைகளை சிறு வயதிலிருந்தே வலிமை உடையவர்களாகவே ஆக்குங்கள். பலவீனத்தைச் சொல்லித் தராதீர்கள். உருவ வணக்கத்தை கற்றுத் தராதீர்கள். அவர்களை வலிமையானவர்களாக ஆக்குங்கள். தைரியமானவர்களாக எல்லாவற்றையும் வெல்பவர்களாக எல்லாத் துன்பங்களையும் ஏற்பவர்களாக ஆக்குங்கள். அவர்களைத் தங்கள் கால்களில் நிற்பவர்களாகவும் உருவாக்குங்கள்.

# உடலில் இரத்தத்தை சுத்தம் செய்வது எப்படி?

உடலில் உள்ள இரத்தம் சுத்தமில்லாமல் இருந்தால் உடல் அசதி, காய்ச்சல், வயிற்றுப் பொருமல், சுவாசக் கோளறுகள் போன்றவை உண்டாகலாம். அதனால் உடலின் அடிப்படைச் சக்தியான இரத்தத்தை சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியமாகும். இயற்கை உணவுகள் மூலம் இரத்தத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது எப்படி? இரத்தத்தை விருத்தி செய்வது எப்படி என்பதைப் பார்ப்போம்.

பீட்ரூட் கிழங்கு சாப்பிட்டு வந்தால் புதிய இரத்தம் உற்பத்தியாகும்.

செம்பருத்திப் பூவை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர வெட்டை சூடு தீர்ந்து இரத்தம் விருத்தியாகும்.



முருங்கைக் கீரையை துவரம் பருப்புடன்சமைத்து ஒரு கோழிமுட்டை உடைத்து விட்டு கிளறி நெய் சேர்த்து 41நாட்கள் சாப்பிட்டு வர இரத்தம் விருத்தியாகும்.

நாவல் பழம் தினமும் சாப்பிட்டால் கூட இரத்தம் விருத்தி ஆகிறது.

இஞ்சிச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால்இரத்தம்சுத்தப்படுத்தப்படுகிறது.

தக்காளிப் பழம் சாப்பிட்டு வந்தால் கூட இரத்தம் சுத்தமாகும். ஆனால், வாத நோய் உள்ளவர்கள் அதனைத் தவிர்த்தல் நல்லது.

இலந்தைப் பழம் சாப்பிட்டால் இரத்தத்தைச் சுத்தம் செய்வது மட்டுமல்லாமல், சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளலாம். பசியையும் தூண்டும் தன்மை கொண்டது. இன்றைய காலகட்டத்தில் பெரும் அச்சுறுத்தல் இரத்தக் குழாய் அடைப்பு. இதனைச் சாதாரணமாக தவிர்த்துவிடலாம் என்கிறது இயற்கை வைத்தியம்.

தினமும் ஒரு கப் தயிர் சாப்பிட்டு வந்தால் போதும், இரத்தக் குழாய் அடைப்பு நீங்கும்.

விளாம்பழம் சாப்பிட்டால் இரத்தத்தில் உள்ள கிருமிகள் அழிந்துபோகும்.

அகத்திக் கீரையை வாரம் 2 முறை சாப்பிட்டு வந்தாலும் இரத்தக் கொதிப்பு குணமாகும். இரத்தக்கட்டு, சுளுக்கு நிவர்த்தியாக, மஞ்சள், உப்பு, சுண்ணாம்பு ஆகியவற்றை வெந்நீர் விட்டு அரைத்து அந்த விழுதைச் சூடு செய்து சுளுக்கின் மீது பற்றுபோட்டால் போதும்.



# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 30 | 30 | 60 | 20 | 30 | 40 | 20 |
| கத்தரி | 130 | 100 | 140 | 140 | 140 | 160 | 120 | 75 |
| கரட் | 120 | 130 | 120 | 140 | 100 | 140 | 120 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 60 | 40 | 60 | 45 | 35 |
| பயிற்றை | 60 | 60 | 50 | 80 | 60 | 120 | 80 | 80 |
| பாகல் | 90 | 100 | 100 | 120 | 100 | 140 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 50 | 80 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 80 | 90 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 40 | 70 | 60 | 80 | 70 | 140 | 80 | 60 |
| பூசணி | 80 | 60 | 80 | 90 | 90 | 120 | 120 | 80 |
| தக்காளி | 60 | 60 | 70 | 60 | 60 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 90 | 70 | 80 | 90 | 60 | 60 | 80 | 70 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 35 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30 | 20 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 70 | 70 | 80 | 80 | 80 | 100 | 150 | 70 |
| புடோல் | 60 | 50 | 60 | 80 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 60 | 50 | 60 | 90 | 50 | 60 | 80 | 50 |
| வெண்டி | 80 | 40 | 60 | 100 | 50 | 80 | 80 | 40 |
| போஞ்சி | 200 | 150 | 100 | 180 | 120 | 160 | 220 | 160 |
| லீக்ஸ் | 160 | 140 | 140 | 180 | 150 | 180 | 170 | 160 |
| தேங்காய் | 60 | 40 | 60 | 50 | 40 | 55 | 35 | 45 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 90 | 80 | 70 | 90 | 65 | 70 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 30 | 10 | 15 | 10 |
| கறிமிளகாய் | 180 | 120 | 100 | 180 | 160 | 180 | 200 | 160 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 70 |
| பனங்கிழங்கு | 04 | 03 | 04 | 04 | 04 | 05 | 03 | 03 |
| முருங்கைக்காய் | 400 | 280 | 250 | 280 | 240 | 350 | 200 | 180 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 550 | 700 | 650 | 700 | 600 | 500 |
| நண்டு | 200 | 350 | 300 | 300 | 200 | 300 |
| கணவாய் | 500 | 400 | 500 | 400 | 500 | - |
| பாரை | 450 | 500 | 550 | 500 | 500 | 380 |
| சுறா | 500 | 400 | 600 | 600 | - | - |
| சீலா | 350 | 400 | 400 | 450 | 400 | 300 |
| விளை | 500 | 500 | 550 | 500 | 400 | 350 |
| முரல் | 200 | 350 | 300 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 350 | 500 | 400 | 450 | 500 | 270 |
| கிளாக்கன் | 200 | 300 | 350 | 300 | 450 | 300 |
| ஒரா | 250 | 200 | 350 | 300 | - | - |
| திரளி | 150 | 100 | 100 | 200 | 200 | - |
| நகரை | 150 | 100 | 180 | 300 | - | 250 |
| சூடை | 100 | 100 | 120 | 100 | 100 | 70 |
| ஒட்டி | 100 | 180 | 180 | 200 | 250 | 200 |
| திருக்கை | 150 | 100 | 100 | 250 | 100 | 140 |
| பாலை | 350 | 400 | 300 | 400 | 400 | - |
| வாளை | 100 | 180 | 150 | 250 | 100 | 200 |
| கொய் | 100 | 130 | 80 | 80 | 100 | - |
| மதனம் | 150 | 250 | 200 | 250 | 300 | 250 |

## நாளை

**மாசி-21**

**வியாழக்கிழமை**

**05.03.2015**

திதி:பூரணை மு.இ.12.14 வரை
நட்சத்திரம்: மகம் கா.09.19 வரை
சுபநேரம்: 07.56-09.26 வரை
இராகுகாலம்: 01.56-03.26 வரை
பூரணை விரதம்

# சித்திரை மாதத்தில் பிறந்தவர்களின் மகிமைகளும் பலன்களும்



## சித்திரை

சுதந்திர உணர்வும், சீர்திருத்தக் கொள்கையும் கொண்ட சித்திரை மாதத்தில் பிறந்த அன்பர்களே! நீங்கள் அனைவரிடமும் எளிதில் பழகி விடுவீர்கள். அரசியலில் உயர்ந்த மனிதர்களிடம் எளிதில் நெருங்கிப் பழகும் வாய்ப்பு உங்களைத் தேடி வரும். எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை முன் கூட்டியே சிந்திக்கும் திறன் கொண்டவர்களாக இருப்பீர்கள். கம்பீரம் மிக்கவர்கள் நீங்கள். எதிலும் அவசரமாக ஈடுபடும் நீங்கள் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும். வீரதீரச் செயல்களில் ஆர்வம் கொண்டவர்களாக இருப் பீர்கள். சில நேரங்களில் தங்களின் கருத்துக்களையே மேலானதாக நினைப்பவராகவும், பிடிவாத குணம் கொண்டவராகவும் காணப்படுவீர்கள். அதிகமாகக் கோபப்படு வதால் பிறருடன் எளிதில் பகையைத் தேடிக் கொள்ள நேரிடும். இதனால் சமுதாயத்தில் தன்னிலையைத் தாழ்த்திக்கொள்ள வேண்டி யிருக்கும்.

நீங்கள் ஈடுபடும் செயலில் தலைமைப் பொறுப்பும், நம்பகத் தன்மையம் உங்களைத் தேடி வரும். உங்களிடம் பணியாற்றும் சக ஊழியர்களிடம் நீங்கள் அன்போடும் அரவணைப்போடும் பேசி வேலையை முடிக்க வேண்டும். மற்றவர்களின் ஆலோசனைகள் உங்களுக்குப் பல வழிகளில் உதவியாக இருக்கும். அரசியல், அரசு, நிறுவனம் போன்றவற்றில் முக்கிய பொறுப்பு வகிப்பதால் மக்களிடமும், சக ஊழியர்களிடமும் எளிதில் பழகும் சுமூக வாய்ப்புக் கிடைக்கும். நீங்கள் எவரையும் எளிதில் நம்பமாட்டீர்கள். அப்படி நம்பிவிட்டால் அவர்களுக்காக எதையும் செய்யத் துணிந்து விடுவீர்கள்.

தாய், தந்தை மீது அதிக அன்பும் பக்தியும் கொண்டிருக்கும் நீங்கள், குடும்ப உயர்வுக்காகவும், நலனுக்காகவும் பாதுகாப்பாக நடந்து கொள்வீர்கள். பிறருக்கு அறிவுரை கூறுவதில் அலாதிப்பிரியம் கொண்டவராக இருப்பீர்கள். தந்தை விட்டுச் சென்ற பணிகளை முறையாகச் செய்து முடிப்பீர்கள்.

உங்களிடம் உள்ளகுறை என்னவென்றால் எதற்கெடுத்தாலும் முன் கோபமும் அவசரப்படுவதும் தான். அவற்றைக் குறைத்துக் கொண்டால் வாழ்வில் எளிதில்வெற்றி பெறலாம். உங்களது வாழ்க்கைத் துணை நீங்கள் விரும்பி ஏற்றுக் கொண்டவராக அமையும் நிலை ஏற்படும். நண்பர்களுக்காக எதையும் செய்து கொண்டிருப்பீர்கள். ஆன்மிகம், ஆலயம், தெய்வத் திருப்பணிகளுக்காகப் பணி யாற்றுவதில் அதிக ஈடுபாடும் ஆர்வமும் கொண்டிருப்பீர்கள். தந்தை வழி உறவினர்களுக்காக எதை யும் செய்து, அவர்களின் ஆசியையும், ஆதரவையும் பெறுவீர்கள். பொதுநலத் தொண்டு, சமூக சேவை ஆகியவற்றில் ஈடுபடுவதன் மூலம் ஆத்ம திருப்தி அடைவீர்கள். சமூகத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகப் பல திட்டங்களையும், செயல்களையும் தீட்டி வெற்றி காணும் அரசியல் வாதியாகவும் ஒரு சிலர் காணப் படுவார்கள். நீங்கள் சமூகத்தைப் பாதுகாக்கும் காவல்துறை, இராணுவம் போன்ற துறையில் கடமை தவறாத அதிகாரியாகவும் இருப்பீர்கள்.

உங்களுக்கு உஷ்ண தேகம் என்பதால், அசைவ உணவு, கொழுப்பு, எண்ணெய் உணவுகளைத் தவிர்த்தால் உயர் இரத்த அழுத்தம், இதய அடைப்பு, இதயக் கோளாறு, நரம்பியல் தொல்லைகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள லாம்.


உலக நன்மைக்காகவும், மக்களின் உயர்வுக்காகவும் பல சீர்திருத்தக் கருத்துக்களை வகுத்துத் தந்த மகான்களும், சித்தர்களும், ரிஷி முனிவர்களும் என எண்ணற்றோர் சித்திரை மாதத்தில் அவதரித்து புண்ணியங்கள் பல செய்து வாழ்ந்துள்ளனர்.

# திருமணமான பெண்கள் எதிர்பார்ப்பது கணவனது அன்பையே



திருமணத்துக்குப் பின்னர், பெண்கள் பிற ஆண்களுடன் நெருக்கமாக இருப்பது மற்றவர்கள் நம்மைப் பார்த்து கேலி செய்யும் விடயமாகவே இருக்கும். இன்னொரு ஆணின் உறவுக்காகத் தமது திருமண வாழ்க்கையையே இழக்கத் தயாராகும் பெண்களும் இருக்கின்றனர்.

தம்பதியருக்கிடையேயான மனமுறிவுகள் அவர்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தும். திருமணமாகிக் குழந்தை பெற்ற பின்னர் சில வருடங்களில் தம்பதியருக்கிடையேயான நெருக்கம் கொஞ்சம், கொஞ்சமாகக் குறையக்கூடும். திருமணத்திற்கு முன்போ அல்லது திருமணமான புதிதிலோ தனது வாழ்க்கைத் துணையிடம் பிடித்திருந்த ஒரு சில விடயங்கள் காலப் போக்கில் பிடிக்காமல் போகலாம். திருமணத்திற்கு முன்பு ஒவ்வொரு பெண்ணுக்கும் தனக்கு வரப்போகும் கணவன் எப்படி இருக்க வேண்டும் என்ற கனவுகளும், கற்பனைகளும் இருக்கும். திருமணத்திற்குப் பிறகு அந்தக் கற்பனைகள் பொய்யாகும்போது, தனக்கு வாய்த்த கணவனது குணங்கள் எதிர்பார்ப்புக்கு எதிராக அமையும் போது, சில பெண்கள் தங்களது எதிர்பார்ப்புக்கேற்ற வேறு ஆண்களது அன்பைத் தேடுகிறார்கள். ஆனால் திருமணம் செய்த பின்னர், பெண் தாய் என்ற நிலையை அடைந்த பின்னர் குடும்பப் பொறுப்புக்களையும், குடும்பத்தின் மரியாதையையும் பாதுகாப்பவளாகவும் இருக்க வேண்டும். கணவனுக்கிடையில் ஏற்படும் விரிசல்களை சீர் செய்து மனம் திறந்து இருவரும் பேசுவதன் ஊடாக வேண்டாத வீண் உறவுகளில் இருந்து தப்பிக்கலாம்.






# கணவன் மனைவிக்கு இடையில்....




கணவரிடம் காய்கறி வாங்கிவரச் சொல்கிறீர்கள் என வைத்துக் கொள்வோம். வாங்கி வந்ததும் அவருக்கு நன்றி சொன்னதுண்டா? 'இதென்ன காய்கறி வாங்கவெல்லாம் நன்றி சொல்லிக் கொண்டிருப்பதா? அவருக்கும் சேர்த்துத் தானே சமைக்கப் போகிறேன்...' என நீங்கள் கேட்டால் அது தவறு. அதுவே முற்றலான, சொத்தையான காய்கறிகளை வாங்கி வந்திருந்தால் அதற்கு அவரைத் திட்டத் தவறி யிருக்க மாட்டீர்கள்தானே? தவறு செய்யும் போது சுட்டிக் காட்டிச் சத்தம் போடும் நீங்கள், உங்களுக்கு ஒரு உதவி செய்யும் போது அதற்கு நன்றியும் சொல்லித்தானே ஆக வேண்டும். இது கணவர்மாருக்கும் பொருந்தும். உங்களுக்கு ஒரு சேலையோ, சல்வாரோ வாங்கி வரச் சொல்கிறீர்கள். நீங்கள் சொன்ன அளவை அல்லது கலரைத் தவிர்த்து, தவறாக வேறொன்றை வாங்கி வந்து விடுகிறார். தவறாக வாங்கி வர வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்திருக்காது. ஆனாலும், அதை அவர் வேண்டுமென்றே செய்ததாக நினைத்து அவரைக் கடுமையாக விமர்சிப்பீர்கள். இந்த மனநிலை இருந்தால் உங்களால் உங்கள் உறவை நல்ல படியாக நீண்ட நாள்களுக்குக் கொண்டு செல்ல முடியாது. அத்தோடு, உங்கள் விமர்சனத்துக்குப் பயந்து, அடுத்த முறை உங்களுக்கு உதவி தேவைப்படுகிறபோது அதைச் செய்யவே உங்கள் கணவர் பயப்படுவார். கணவன் – மனைவி இடையே செய்யும் சில தவறுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதுமில்லை.

மனைவி சமைக்கிறார்... வீட்டைச் சுத்தம் செய்கிறார்... 'அது மனைவியின் கடமைதானே... தினமும் செய்வது தானே? அதுக்கெதுக்கு நன்றி சொல்ல வேண்டும் என நினைக்காதீர்கள். கணவர்களே... எதையும் உங்கள் மனைவிமாரது கடமை என நினைக்காமல் நன்றி சொல்லிப் பாருங்கள். ஒரு சின்ன நன்றி தான் சாதாரண விஷயத்தை அசாதாரணமாக மாற்றும். நன்றி சொல்லத் தவறும்போது அசாதாரணமான விஷயம்கூட சாதாரணமானதாக மாறி விடும்.

உங்கள் கணவரோ, மனைவியோ, உங்களுக்கு ஒரு உதவி செய்தால் நன்றி சொல்வீர்கள். அதுவே உங்களைச் சார்ந்த யாருக்கேனும்... உங்கள் பெற்றோர், உறவினர், நண்பர்கள், அக்கம்பக்கத்தினர் யாருக்காவது உதவி செய்தால் அதற்கு நன்றி சொல்கிற பழக்கம் உண்டா உங்களுக்கு? துணையை உற்சாகப் படுத்தும் தலைமையாக நீங்கள் இருப்பீர்களானால், உங்கள் துணைவியார் காட்டுகிற பரிவையும் இரக்கத்தையும் செய்கிற உதவியையும் நிச்சயம் பாராட்டுவீர்கள்.

## புற்களுக்குள் ஒளிந்த மலை



இங்கிலாந்தில் சில்பரி என்ற இடத்தில் 40 மீற்றர் உயரம், 167 மீற்றர் விட்டமும் கொண்ட ஒரு மலை உள்ளது. அதன் உச்சி மட்டும் தட்டையாகவும் 30 மீற்றர் விட்டத்திலும் உள்ளது. இந்த மலை சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்துள்ளது. இந்த மலை சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. மூன்று அடுக்குகளாகப் பிரித்து இந்த மலையைக் கட்டியிருக்கிறார்கள். மலை மீது புற்கள் வளர்ந்ததால் இது நிஜமான மலை போலவே மாறியிருக்கிறது. ஆரம்பத்தில் இயற்கையாக உருவான மலை என்றுதான் பலரும் நினைத்தார்கள். ஆனால், இது முழுக்க முழுக்க மனிதர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்டது என்பது தெரியவந்தது. சுமார் 4751 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மலை கட்டப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## விடுகதை



வேகமாகச் சுற்றினாலும் தலை சுற்றாது.
அது என்ன? மின்விசிறி


கடலில் கலக்காத நீர். யாரும் குடிக்காத நீர்.
அது என்ன? கண்ணீர்

அடிமேல் அடி வாங்குவான். ஆனால், அனைவரையும் சொக்க வைப்பான்.
அவன் யார்? மேளம்

கோட்டைக்குள் 32 காவலர்கள்.
அது என்ன? வாய்,பற்கள்

மழை காலத்தில் பிறக்கும் குடை.
அது என்ன? காளான்

## பூஜ்யம் ஒரு ராஜ்ஜியம்



ஒரு நாள் கணித ஆசிரியர் ஒருவர் எல்லா எண்களையும் கலந்துரையாடலுக்கு அழைத்தார். நிகழ்ச்சி ஆரம்பிக்கும் சமயம் பூஜ்யம் அங்கு இல்லை என்பது தெரியவந்தது. பூஜ்யம் ஒளிந்து கொண்டது. மற்ற எண்கள் அதை ஆசிரியரிடம் கூட்டி வந்தன. ஆசிரியர், 'ஏன் ஒளிந்து கொண்டாய்?' என்று கேட்டார். 'நான் வெறும் பூஜ்யம்தானே. என்னை பற்றி யார் கவலைப்படுவார்கள்? எனக்கு மதிப்பே இல்லையே,' என்று வருத்த மாகக் கூறியது. புன்னகைத்த ஆசிரியர், 'ஒன்று'என்ற எண்ணை முன்னே வரச் சொன்னார். குழுவினரைப் பார்த்து, 'இதன் மதிப்பு என்ன?' என்றார். 'ஒன்று!' என்றன மற்ற எண்கள். அடுத்து பூஜ்யத்தை அதன் அருகில் நிற்கச் சொன்னார். 'இப்போது?' என்றார் ஆசிரியர். "பத்து!" என்று மற்ற எண்கள்உரக்கக் கத்தின.அடுத்து பூஜ்யத்தைப் பார்த்து, "இப்போது தெரிந்து கொண்டாயா உன் மதிப்பு? 'ஒன்று' என்ற சாதாரண எண் உன் சேர்க்கையால் பன்மடங்கு அதிக மதிப்பு அடைந்ததைப் பார்த்தாயா?" என்றார். எல்லா எண்களும் மகிழ்ச்சியுடன் கை தட்டின. "ஆமாம்... நான் சரியான இடத்தில் இருந்தால், நானும் பயனுடையவன்தான். நான் மற்றவருடன் சேர்ந்தால் நாங்கள் அனைவருமே அதிக மதிப்பு வாய்ந்தவர்கள் ஆகிறோம்," என்று பூஜ்யம் மகிழ்ந்தது.

## வர்ணம் தீட்டலாம் வாங்க...



## வாழ்க்கையை தீர்கொள்வது எப்படி?





**நம்பிக்கையைத் தூண்டும் வழிகள்**

அடிமனதில் வெற்றிபெறத் துடிக்கும் எண்ணங்களை வரிசைப் படுத்து., சிறப்பான வழிகளை தேர்வு செய்.,எப்படிச் செய்வதென எழுது, வழக்கமான பணி நேரம் போக இதற்கென நேரத்தை ஒதுக்கு, தினமும் எப்படி செய்வதென எழுது, தயார் நிலைக்கு வந்ததும் சரியான சூழலை எதிர் நோக்கு, தினமும் அதற்காக செயற்படப்போவதைக் கற்பனை செய், செயலாக்கு, வெற்றி பெற்றவர் அணுகு முறையை கையாள, தினமும் வெற்றி பெற்றவர்களைப் பார், படி மாதம் தவறாமல் வெற்றி இலக்கை நோக்கி உற்சாகப் பயிற்சியில் ஈடுபடு.

உனக்குள்ளேயே இன்னொரு மனிதனாக உருவெடுத்துத்தூண்டு தலை வணங்கி வெற்றி பெறு.

வெற்றிக்கும் சாதனைக்கும் அடிக்கல்லாய் அமைவது தன்னம்பிக்கையே. கடந்த கால வெற்றிகளையும் தோல்விகளையும் ஆராய்ந்து அதில் சிறந்ததை தெரிவு செய்.

உறங்கப் போகுமுன் உள்ளம் உறுதியாகும்படி மனதில் பேசிப் பழகு.

உறுதியுள்ள மனிதரோடு அடிக்கடி பேசிப்பழகு.

பகை எண்ணங்களை விட்டொழிந்து தைரியமாகச் செயற்படு.

தோல்வியடைந்தாலும் முழுமையான ஆற்றலை இணைத்துச் செயற்படு.

சிறந்த வழியைக் கண்டெடுத்து உடனடியாக செயற்படு.

எப்போதோ சுடுவதற்கு இப் போது ஏன் பயிற்சி என்று கேட்காதே.

ஒவ்வொரு நாளையும் நிமிடங்களையும், தன் வசமாக்கும் சாகசக்காரராக மாறி, ஓர் ஒழுங்கு முறைக்கு கொண்டுவந்து செயற்படுபவனே வெற்றியாளன்.

திட்டமிடுவதும் அதன்படி நடப்பதுமே வெற்றியைத் தரும்.

வெற்றிபெறஎண்ணுபவன்சோர்வதுமில்லை, தடுமாறுவதுமில்லை.

நடக்கும் என்ற எண்ணத்தோடு செயற்பட்டு, எந்தத் தடைக்கும் அஞ்சாமல் முன்னேறு.

உனக்கே நீ ஆணை பிறப்பித்து செயற்பட்டு, வெற்றிபெறு. மற்றவரின் ஆணைக்காக பார்த்திருக்காதே.

மாறி வரும் விஞ்ஞான உலகத்திற்கு ஏற்றவகையில் தங்களை மாற்றிக்கொள்ள முடியாத காரணத்தாலேயே பலர் தோல்வி அடைகிறார்கள்.

எதையும் பின்தள்ளிப் போடாதே, கண்டிப்பாய் இன்றே முடித்துவிட வேண்டுமென எண்ணிச் செயற்படு...

எவ்வளவுதான் சிந்தனை இருந்தாலும் அதைச் செழுமையாக்கி ஒரே சமயத்தில் வலுவான விதமாக செலுத்த அழுத்தமான நிர்வாகத்திறன் வேண்டும்.

எல்லாப்பக்கமும் திரும்பாமல் ஒரே குறியாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து முழுக் கவனத்தையும் செலுத்தினால் மாபெரும் வெற்றி கிடைக்கும்.

வெவ்வேறு திட்டங்களைத் தூக்கியெறிந்துவிட்டு ஒரே இலக்கைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். அதில் வரும் சிக்கல்களை ஆராய வேண்டும். அதை வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாகத் தீர்க்க முயலவேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்த இப்போதே பழகுங்கள், வெற்றி தானாகத் தேடி வரும்.

ஒவ் வொரு நாளும் வெற்றி பெறுவேன் என்ற சிந்தனையை பல தடவைகள் சொல்ல வேண்டும்.

பிறர்நம்மைஎன்னவாகஎண்ண வேண்டுமென நினைக்கிறோமோ அதை நாம் முதலில் எண்ண வேண்டும்.

வெற்றி என்பது தானாக வராது மற்றவருக்கு உதவுவதாலும் வரும்.

(தொடரும்)

# தினேஸ் குணவர்த்தன அறிக்கை பிழையானது

## ஜே.வி.பியின் தலைவர் தெரிவிப்பு

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் தலைமையிலான குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை பிழையானது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

"தினேஸ் குணவர்த்தன ஆணைக்குழுவால் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கையானது இலங்கைக்கு பொருத்தமுடையதல்ல. முன்னாள் அமைச்சரின் பெயரில் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டபோதிலும், சில பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உள்ளீடுகளே காணப்படுகின்றன" – என்றும் அவர் கூறியுள்ளார்.

"கணித ரீதியாகவும் இந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் பிழையாகவே காணப்படுகின்றன. தேர்தல் முறைமையில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய அரசு நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்." – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ற)


### தேவை

சாவகச்சேரியில் இயங்கும் ஹார்ட்வெயர் விற்பனை நிலையத்திற்கு ஹார்ட்வெயர் விற்பனைப் பொருள்கள் விற்பனையில் மூன்று வருட அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு: 077 225 0149
(C/16871)(4.3.7)

### பெயர் மாற்றம்

புதுமுறிப்பு கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்ட வாசு வதனேஸ்வரி என்னும் பெயருடைய நான், எனது பெயரை வாசு சுகிர்தா என மாற்றம் செய்துள்ளேன் என அறியத் தருகின்றேன்.

வாசு சுகிர்தா

### தேவை

சிறிய உருக்கு கைத்தொழில் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் (பழைய வீடு, கட்டடம்) இடம் வாடகைக்கு தேவை.

தொடர்பு : 077 763 0752
(57474)(4.3.7)

### அறிவித்தல்

வண்.மேற்கு வைத்தியசாலையில் (கங்காதரன் வைத்தியசாலை) இன்று 04.03.2015 வெளிநோயாளர் பிரிவு, வைத்திய நிபுணர் சேவைகள் நடைபெறாது என்பதை அறியத் தருவதுடன், நாளை 05.03.2015 தொடக்கம் வழமைபோல் சகல சேவைகளும் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

நிர்வாகி,
வண்.மேற்கு வைத்தியசாலை.
(57470) (4.3.7)

### ஸ்கூட்டர் தேவை

வெஸ்பா / பஜாஜ் ஸ்கூட்டர் தேவை.

தொடர்பு : 077 0387111

### தவறிவிட்டது

மூளாய் மேற்கைச் சேர்ந்த கிருஸ்ணப்பிள்ளை செல்வரத்தினம் என்பவரது தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

077 2611 329

### விற்பனைக்கு

யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சையிக்கிள்கள் (PUSH BIKE) சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. விலை 10,000/= இலிருந்து

தொடர்பு.
0786155929, 0213205939

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

Best Wishes

**ம.பற்றிக் டிறஞ்சன்**

செயலாளர்
கமத்தொழில். கமநல சேவைகள். கால்நடை. நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சு
வடமாகாணம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ் மாவட்ட உதவி ஆணையாளராக 2006ஆம் ஆண்டில் இருந்தும் பின்பு பிரதி ஆணையாளராகவும் சேவையாற்றி 2013 ஆம் ஆண்டில் இருந்து வடமாகாண கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளராக பதவியுயஉயர்வு பெற்று 2015 ஆம் ஆண்டு வரை சிறப்பான சேவை யாற்றி 02.03.2015 ஆம் திகதியில் இருந்து வடக்கு மாகாண கம்த்தொழில். கமநல சேவைகள். கால்நடை. நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்றுள்ள திரு.ம.பற்றிக் டிறஞ்சன் அவர்களுக்கு எமது திணைக்கள சமூகம் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் மேன்மேலும் பதவியுயர்வுகள் பெற்று எதிர்காலத்தில் சிறந்த சேவையினை மக்களுக்கு வழங்க எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள சமூகம்
யாழ்ப்பாண மாவட்டம்.

### திரு. த. கருணாகரன்

Deputy chief security officer Bank of Ceylon,
Northern Province Jaffna.

**மணிவிழா நாளில் மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்!**



இல்லத் தலைவனுக்கு இலக்கணமாய்
கல்வித் தடத்தில் நடைபயில வைத்து
தன்னை ஒறுத்து, எம்மை உயர்த்த
அல்லும் பகலும் உழைத்து,
அயலும் உறவும் எம் நிலை கண்டு
'அடடா' என வியக்க வைக்கும்
அருந்தலைவன் அப்பாவுக்கு
அன்னையுடனும், அனைத்து உறவுடனும்
சின்ன அரும்புடனும் சேர்ந்து
அறுபதாம் அகவை விழாநாளில்
பல்லாண்டு வாழ்ந்து வழிகாட்ட வேண்டுமென்று
அன்னை புவனேஸ்வரியின் அடியினைத் தொழுகின்றோம்.

Best Wishes

"ஸ்ரீ நந்தினி"
மணற்பகுதி, புத்தூர்.

குடும்பத்தினர்.
077 844 8646

## மாற்றத்தை எமது மக்களுக்கானதாக மாற்றுவோம்...















கௌரவ அங்கஜன் இராமநாதன்
வடமாகாண சபை உறுப்பினர் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

## அமைச்சர் டெனீஸ்வரன் தலைமையில்

கொழும்பு, மார்ச் 4

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனைத்து மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட ஒன்றுகூடல் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வடக்குமாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்லரன் தலைமையில் இடம்பெற்றது.

அதில் கிராம அபிவிருத்தி சங்கங்களின் மாகாண பணிப்பாளர் திரு.பெலிசியன் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர், வடக்கு மாகாணம் முழுவதும் உள்ள கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் நிலைமைகள் தொடர்பில் அரசியல் ரீதியாக காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட அமைச்சர் இனி வரும் காலங்களில் சகல சங்கங்களும் அரசியல் தலைபீடுகள் எதுவும் இன்றி கிராமங்களை வளர்க்கும் நோக்கோடு செயற்படவேண்டும்என்று தெரிவித்தார்.

கிரம அபிவிருத்தி சங்கங்களின் வளர்ச்சிகுன்றி அவற்றில் நிதி மோசடிகள் இடம்பெற்றிருப்பின் அவற்றை உடன் விசாரணை செய்து, மக்களுக்கு தரமானகிராம அபிவிருத்திகளை வழங்க வேண்டும். ஒவ்வொரு சங்கங்களையும் புதுப்பிக்கும் நடவடிக்கை முடிவடைந்த போதும் இன்னமும் புதுப்பிக்காமல் இருக்கும் சங்கங்கள் தொடர்பில் அக்கறை எடுத்து அவற்றையும் சரியான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சங்கங்களின் ஊடாக சுழற்ச்சி முறையிலான கடன் திட்டங்களை சரியான முறையிலே மேற்கொண்டு ஒவ்வொரு கிரம அபிவிருத்தி சங்கங்களையும் வளர்க்கவேண்டிய தேவை இருப்பதனால் சகல உத்தியோகத்தர்களும் தமது கடமைகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும் – என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–21)

# புலிகளுடன் தொடர்புடையவர் என கட்டுநாயக்காவில் பெண் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் அவரது 8 வயது மகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பிரான்ஸ் குடியுரிமை பெற்றவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள தனது பெற்றோரை பார்க்கவென பிரான்ஸில் இருந்து வந்த ஜெயகணேஸ் பகீரதி என்ற பெண்ணும் அவரது 8 வயது மகளான ஜெயகணேஸ் பகலவி ஆகியோருமே கைது செய்யப்பட்டுள்ளனர். பகீரதி என்ற பெண் தமிழீழ விடுதலைப் புலிகள் இய்க்கத்தின் முன்னாள் உறுப்பினர் என்றும் அவர் பிரான்ஸில் திருமணம் முடித்த ஜெயகணேஸ் என்பவர் புலிகள் இயக் கத்திற்கு நிதி சேகரித்தவர் என்றும் கூறப்படுகின்றது.

எனினும் பகீரதிக்கும் ஜெய்கணேசிற்கும் இடையில் விவாகரத்து ஏற்பட்டு தற்போது பகீரதி தனது மகளுடன் பிரான்ஸில் வசித்து வருவதாகவும் மகளின் பாடசாலை விடுமுறையை முன்னிட்டு கிளி நொச்சியில் உள்ள தனது பெற்றோரை பார்வையிட வந்து மீண்டும் பிரான்ஸ் செல்ல இருந்தபோதே கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட பகீரதியும் பகலவியும் தற்போது பயங்கரவாத தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## தொடர்ச்சி

### அறிக்கையை

ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 28 ஆவது அமர்வில், பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இராஜாங்க அமைச்சர் பரோனஸ் அனெலி உரையாற்றினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, சமர்ப்பித்திருக்க வேண்டிய இலங்கை குறித்த விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதையும் – அது குறித்த விவாதத்தையும் – ஒத்தி வைக்க ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்த பரிந்துரைக்கு பிரிட்டன் ஆதரவு வழங்குகின்றது."– என்று அவர் தெரிவித்தார்.

"ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பானவிசாரணை அறிக்கையை வெளியிடுவதை செப் ரெம்பர்மாதத்துக்குப் பின்னரும்,தாமதிக்கக் கூடாது என்ற ஐ.நா. மனித உரிமைஆணையாளரின்நிலைப்பாட்டை பிரிட்டன் ஏற்றுக்கொள்கின்றது."– என்றும் அவர் தெரிவித்தார். (ற–5)

### ஹுசைனை

என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற–5)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்


**தம்பு நடராஜா**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் (57469) (45.3)

யா/ சண்டிலிப்பாய் வடக்கு த.க. பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி



02.03.2015 இறைபதம் எய்திய எமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய

**Dr. தியாகராஜா கங்காதரன்**

அவர்களின் மறைவினால் நாமும் துயரடைவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வண்.மேற்கு வைத்தியசாலையில் கடமையாற்றிய முன்னாள் வைத்தியர்கள், (57472)(4.3.7)

நிர்வாக,உத்தியோகத்தர்கள், தாதியர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
26.03.1943
ஆண்டவன் அடியில்
02.02.2015

**சுப்பிரமணியம் திருஞானம்**

திதி: சதுர்த்தசி

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் அப்பா!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.64/01, முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு : 06.04.1928

உதிர்வு : 02.02.2015

**நடராசா சரஸ்வதி**

எமது குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு நேரில் வந்து, மலர்வளையம் சாத்தியும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் துயரினை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (04.03.2015) புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கேரதீவு றோட், நாவற்குழி,
கைதடி.

குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்

**கனகாம்பிகை ராஜலிங்கம்**



யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தாய் கனகாம்பிகை ராஜலிங்கம் அவர்களது மரணச் சடங்கிலும், கிளிநொச்சி-ஊற்றுப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற 31ஆம் நாள் நினைவு நிகழ்விலும், அன்னதானத்திலும், D8 உருத்திரபுரத்திலுள்ள திருக்குடும்ப சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற விசேட பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
மகள்- துவாரகா ராஜேந்திரம்
மற்றும் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி பத்மாவதி குணசீலன்**



பருத்தித்துறை ஐயனார் கலட்டியைப் பிறப்பிடமாகவும் விநாயகர் முதலியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி குணசீலன் நேற்று (03.03.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பாக்கியம்-தம்பையா தம்பதியரின் பாசமிகு மகளும், நடராசா குணசீலனின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா-தங்கராணி அம்மா தம்பதியரின் மருமகளும், மங்கையர்க்கரசி (லண்டன்) , கமலறஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திபாகரன், இளஞ்செழியன் ஆகியோரின் மாமியாரும், நிதர்சன், நிலவன், நித்திலன், சியாமளா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
077 0846590 ந.குணசீலன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**சுப்பிரமணியம் பூபாலசிங்கம்**

மண்ணில் 07.01.1942



விண்ணில் 10.01.2014

**பூபாலசிங்கம் பத்மாவதி**

மண்ணில் 30.06.1950



விண்ணில் 13.02.2014

ஓர் ஆண்டு சென்றாலும்
உங்களது நினைவு மறையவில்லையே!
உங்கள் பிரிவால் துயருறும்...

இல. 22/1, பாரதி வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

மகன்,மகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

## ராஜிதவுக்கு எதிராக ஊழல் முறைப்பாடு

தேசிய சுதந்திர முன்னணி பதிவு செய்தது

கொழும்பு, மார்ச் 4

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக தேசிய சுதந்திர முன்னணி நேற்று லஞ்ச மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை செய்துள்ளது.

கடந்த அரசில் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்த சமயம் அவர் மோசடியாக 2 ஆயிரம் மில்லியன் ரூபாயை பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தியே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்தன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர, பலவந்தமாக இந்த வளங்களை அமைச்சர் ராஜித சேனாரத்ன சூறையாடியுள்ளார் என்று தெரிவித்தார்.

சிறந்த ஆட்சியின் கீழ் இவ்வாறான மோசடிகளை மேற்கொண்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ற)

## வெலேசுதாவின் சகா சிறுமியுடன் சிக்கினார்

கொழும்பு, மார்ச் 4

வெலே சுதாவின் முக்கிய முகவர் என சந்தேகிக்கப்படும் சுராஸ் அகமட் என்பவர் ஹபரணையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட நபர் கைதுசெய்யப்பட்ட வேளை அவருடன் 15 வயது சிறுமியும் இருந்தார் என்றும், குறிப்பிட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்திய வேளை அவர் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப் பட்டுள்ளது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட சந்தேகநபரின் கையடக்கத் தொலைபேசியில் குறிப்பிட்ட சிறுமியினது ஆபாசப்படங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

அதையடுத்து அவர் மீது சிறுமியை தடுத்து வைத்து பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய வழக்கு பதியப்பட்டுள்ளது. கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னர் இந்த நபருக்கு எதிராக போதைப்பொருள் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அவர் அதிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்றும் தெரியவருகின்றது.

பொலிஸார் வெலே சுதாவின் முகவர்களை தேடி வருவது தெரியவந்ததும் குறிப்பிட்ட நபர் கொழும்பிலிருந்து தப்பி ஹபரணை சென்றதாகபொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதமாக நாங்கள் அவரை தேடி வந்துள்ளோம். ஒருமுறை கல்கிசையில் அவரை கைதுசெய்ய முயன்றவேளை அவர் அங்கிருந்து தப்பினார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## தெஹிவளையில் வங்கிக் கொள்ளை

ஆயுததாரிகள் இருவர் துணிகரம்

கொழும்பு, மார்ச் 4

தெஹிவளை, அத்திடிய பகுதியிலுள்ள தனியார் வங்கிக்குள் நுழைந்த முகத்தை மூடி தலைக்கவசம் அணிந்திருந்த ஆயுததாரிகள் இருவர் மூன்று முறை துப்பாக்கிச்சூடு நடத்தி 10 லட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கொள்ளைச் சம்பவத்தின் போது இடம்பெற்ற மோதலில் வங்கி பாதுகாப்பாளர் காயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த மாதம் 21ஆம் திகதி முதல் முகத்தை மூடி தலைக்கவசம் அணிய தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. (ற)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நேசரத்தினம் (நேசி) சின்னத்துரை



காரைநகர் சத்திரந்தை களபூமியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசரத்தினம் சின்னத்துரை 02.03.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-சிவகாமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கோபாலகிருஷ்ணன், சாந்தினிதேவி மற்றும் புஸ்பராணி (லண்டன்), நகுலராணி, சறோஜினிதேவி (லண்டன்), தனபாலன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் தனலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசேந்திரம் (லண்டன்), சண்முகசுந்தரம், ஜெகதீஸ்வரன் (லண்டன்), பாலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் நாகலிங்கம், விமலாதேவி காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சுப்பிரமணியம், செல்லம்மா, மகேஸ்வரன் மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனி யும், சசிகலா-ஐங்கரன், சர்வானந்தன், சயந்தன், சாரா, சர்மினி, புவிராஜ், மிதுனா, கஸ்தூரி, மதுஷனா, திருச்செந்தூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.03.2015 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் தில்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சத்திரத்தை, களபூமி, காரைநகர். குடும்பத்தினர்.

## அந்தோனி ஞானத்துரை



நாவாந்துறை, கெனடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி ஞானத்துரை 01.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - றோசமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், யூலியற்றூபியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஞானப்பூவின் சகோதரனும், காலஞ்சென்ற பிலேந்திரனின் மைத்துனரும், மேரிமார்ஜ், லெனின், றொபின்சன், தமிழ்ச்செல்வி, ஜெனனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீமுரளிதரன், இமல்டா, எலற்நாயகன் ஆகியோரின் மாமனாரும், ஹர்ணி, துவாரகன், கீர்திகன், வர்ஜின் வருணிக்கா, டேமின் ஹக்ஸ்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.03.2015) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

கெனடி வீதி, நாவாந்துறை. குடும்பத்தினர். 077 613 8406

(57468)(4.3.7)

## கங்கமுத்து சோதிநாதன் (நந்தன்)

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கங்கமுத்து சோதிநாதன் (நந்தன்-மின்சார ஒப்பந்தகார ஊழியர்) 02.03.2015 திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலம்பு புளியடி வீதி, சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி புஸ்பம் நவரத்தினம்



(ஓய்வு பெற்ற செயலாளர், யாழ் பல நோ.கூ.சங்கம்)

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி , கோயில் வீதியைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பம் நவரத்தினம் அவர்கள் (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கந்தையா நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், தாட்சாயினி றொஷான் (ஆசிரியை - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தாயாரும், பெனின் றொஷான் ( ஆசிரியர் - வவுனியா நெலுக்குளம் மகா வித்தியாலயம்), அவர்களின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இம்மானுவல் ஞானம்மா மற்றும் மரிய நாயகம் மேரி லில்லி (மணி-கனடா), சிங்கராஜா தங்கரத்தினம் (கிளி) பிரான்சிஸ் சேவியர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனேஸ்வரி திருநாவுக்கரசு, பூரணம் இராமநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (04.03.2015) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித மரி யன்னை தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

17/1, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

தகவல் : க.நவரத்தினம் (கணவர்)

(57480)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம்மா செல்லையா



கதிரிப்பாயைச் சேர்ந்த பொ.செல்லையாவின் அன்பு மனைவியும், காங்கேசன்துறை ஐயாத்துரை நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வியும் ஆகிய இரத்தினம்மா நேற்று (03.03.2015) காலமாகிவிட்டார்.


அன்னார் கமலாஜினிதேவி, பத்மாதேவி, கெங்காதேவி, பாலச்சந்திரன் (ஆசிரியர் யா/வைத்தீஸ்வராக்கல்லூரி), பாலசுந்தரம் (சுவிஸ்), நிர்மலாதேவி ஆகி யோரின் தாயும், துரைராஜா, தியாகலிங் கம், சிவஞானம், விக்னேஸ்வரன், லலித குமாரி, கல்பனா ஆகியோரின் மாமியும், பத்மரூபி, தியாகேஸ் வரன், சுயேந்திரமோகன், ராஜ்மோகன், மதன் மோகன், சிவந்தி, ஞானகணேஸ், சிவநந்தினி விமலினி, ஜெனன், தூயவன், சயான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: செ.பாலச்சந்திரன் (மகன்)

## சிவக்கொழுந்து செல்லத்துரை



யாழ். நல்லூர் மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து செல்லத்துரை நேற்று (03.03.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து -அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நடராசா மற்றும் மங்கையர்க்கரசி, அசுவத்தம்மா, கண்மணி ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், விமலாவதி, சிவராசா (பிரான்ஸ்), சிமித்திரா (லண்டன்), இராமச்சந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), வனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கத் தியாகராசா, கனகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சுமதி, காலஞ்சென்ற சுதாநிதி மற்றும் சுதர்சன் (பிரான்ஸ்), துவாரகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமார், ஸ்ரீராஜன் (கனடா), தர்மப்பிரியா (பிரான்ஸ) ஆகியோரின் அன்பு மாமனும், நிபோஷனன் (பிரான்ஸ்), மிதுர்ஷன் (பிரான்ஸ்), சுமிதா, அபிநயா (கனடா), அட்ஷஜா (பிரான்ஸ்), அட்ஷன் (பிரான்ஸ்), அம்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 42, முத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர். T.P: 021 222 6509

## பொன்னையா தம்பிஜயா



விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிஐயா 02.03.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (தம்பு)- அன்னமுத்து தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவானந்தம் (Srilanka), மகாலிங்கம் (Germany), வாசுகிதேவி (Srilanka), குணரட்ணம் (Swiss),நடேசலிங்கம் (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜினிதேவி, விஜயலட்சுமி (விஜி), செல்லையா (மார்க்கண்டு), தனுஜா (சூட்டி), சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனும், நிர்மலகாந், சிந்து, நிரஞ்சன், நிருபா, மிதிலா, மேருஜா, பகீரதன், நிஷாந்தினி, தயாளன், கலையரசி, கஸ்தூரன், கஜிதா, கஜேந்திரா, கிருஷாந், தனுஷாந், அகிஷா, சஹானா, றொசாந், தர்னிகா, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், விஷால், யோசனா, திஷான், ஜினோசன், கபில், சந்தோஷ், மாதங்கி ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, செல்லம்மா, பொன்னம்மா, கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு தகனக் கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 663 0649/ 077 615 0914

தகவல்: குடும்பத்தினர்.

(57471) (45.3.7)

## இனப்பிரச்சினை

"தமிழ் மக்களின் சார்பில் ஜனாதிபதி மைத்திரி பாலவை வரவேற்கின்றோம். வடக்கு மாகாண ஆளுநர் பளிக்கார நல்லிணக்கம் பற்றிக் குறிப்பிட்டார். ஜனாதிபதி மைத்திரிபால யாழ்ப் பாணத்தில் வடபகுதியில் தமிழில் பேச வேண்டும். தென்பகுதி யில் சிங்களத்தில் பேச வேண்டும். அந்த நிலைமை – அவ்வாறான தொரு நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்." என– நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

"இந்த ஜனாதிபதி எங்களின் ஜனாதிபதி என்று தமிழ் மக்கள் சொல்லக் கூடிய வாறான நிலைமை உருவாக்கப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களித்து உங்களைத் தேர்வு செய்துள்ளனர். முன்னைய ஜனாதிபதி வெளியேற வேண்டும் என்று வாக்களித்தனர். தமிழ் மக்கள் இந்த ஆட்சி மாற்றத்தில் முக்கிய பங்கு வகித்தனர். கடந்த ஆட்சியில் அதுவும் குறிப்பாக, போர் முடிந்த பின்னரான ஐந்து வருடங்களில் தமிழின அடையாளங்களை சிதைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதனாலேயே, தமிழ் மக்கள் கடந்த ஆட்சிக்கு எதிராக வாக்களித்தனர்."– என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

"தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உங்களுடன் (ஜனாதிபதி மைத்திரிபால), முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பல தடவைகள் பேச்சு நடத்தியிருந் தோம் என்பதை நினைவுகூர விரும்புகின்றேன். இதுவரையில் தீர்க்கப்படாத இனப் பிரச்சினை எவ்வாறு தீர்க் கப்பட வேண்டும் என்பது தொடர்பிலான தீர்வுத் திட்டத்தை எங்கள் தலைவர் சம்பந்தன் உங்களிடம் கையளித்திருந்தார். இனப் பிரச்சினை தொடர்பில் நாம் அப்போது புரிந்துணர்வுடன் பேசிக் கொண்டோம். ஒப்பந்தம் எதனையும் கைச்சாத்திடவில்லை.

உங்களின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் தமிழ் மக்களின் மீள்குடியமர்வைப்பற்றி தெரிவித்திருந்தோம். எந்தப் பொதுமகன் எந்தக் காணியிலிருந்து வெளியேற்றப்பட்டானோ, அதே காணியில் குடியமர்த்தப்பட வேண்டும். இது தொடர்பில் தங்களது நூறு நாள் வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வாசகம் பலவீனமான நிலையில் இருந்ததைச் சுட்டிக்காட்டி, அதனை உங்களின்கையெழுத்துடன் திருத்தினோம்." – என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"தற்போது வலி.வடக்கில் ஆயிரத்து நூறு ஏக்கர் விடுவிப்பதை வரவேற்கின்றோம். இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசும் போது, பிரஸ்தாபித்திருந்தோம். இரு வாரத்துக்குள் பதில் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். எனவே இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்.

வடக்கு – கிழக்கு போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம். இந்தப் பகுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அமைச்சரவையில் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அமைச்சரவை கூடுதல் நிதி ஒதுக்க ஆவன செய்ய வேண்டும். வடக்கு மாகாண சபை, வெளிநாடுகளிலிருந்து நிதி பெற்றுக் கொள்வதற்குரிய அனுமதிகள் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு – கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். இங்குள்ள அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு நடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும்."– என்றும் அவர் வலியுறுத்தினார்.

"பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து, பலாலி – இந்தியா இடையிலான விமானச் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும். பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் பலாலி கடற் பகுதி ஆழம் குறைந்த கடல். எனவே பலாலி விமான நிலையத்தை கடற்கரைப் பக்கமாக விஸ்தரிக்கலாம்."– என்றும் அவர் கூறினார். (ற–5)

## காணாமற்போனோர்

காணாமற்போனவர்களை கண்டறியுமாறும் அல்லது அவர்கள் தொடர்பான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துமாறும் கோரி இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

வட பகுதியில் பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர், பாதுகாவலர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக மு.ப. 10 மணியளவில் நடத்தப்படவுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதி, வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு முதலமைச்சர் ஆகியோருக்குத் தனித் தனியான மனுவும் கையளிக்கப்படவுள்ளது.

கட்சிப் பாகுபாடின்றில் அனைத்துக் கட்சிகளின் அரசியல்தலைவர்களும், காணாமற்போனவர்களின் உறவினர்களும், பொதுமக்களும் புத்திஜீவிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ற–ரி)

## மக்களின்

"கடந்த தடவை யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காக வந்தேன். தற்போது ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் முதல் தடவையாக வந்துள்ளேன். நாம் ஜனாதிபதித் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்தவொரு ஒப்பந்தமும் கைச்சாத்திடவில்லை. இதனை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவே இங்கு பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க் கட்சிகள், எமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஒப்பந்தம் இருப்பதாக சொல்லித் திரிந்தனர். ஒப்பந்தம் எழுத்தில் இல்லை. ஆனால் மனதளவில் ஒப்பந்தம் இருக்கின்றது. மனிதாபிமான அடிப்படையில் செய்யப்பட வேண்டும் – அணுக வேண்டும் என்ற ஒப்பந்தம் இருக்கின்றது. "– என்று அவர் குறிப்பிட்டார்.

"இராணுவம் கைப்பற்றி வைத்திருக்கின்ற பொதுமக்களின் காணிகள் அவர்களுக்கே கிடைக்க வேண்டும் என்றுஏற்றுக்கொள்ளப்பட்ட விடயத்தை நாங்கள் நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கின்றோம். முதல் கட்டமாக ஆயிரத்து நூறு ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள் ளப்படும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"போரால் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அந்த மாகாணங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். போரால் தென்பகுதியிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. பிரச்சினைகளை நாம் ஒன்றாக அமர்ந்து பேசித் தீர்க்க வேண்டும். பேச்சுகள் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இங்குள்ள நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் முன்வைக்கின்ற பிரேரணைகள் முக்கியத்துவமானது."– என்றும் அவர் கூறினார்.

"காணிப் பிரச்சினை தொடர்பில் தெரிவித்திருந்தீர்கள். அதற்கு நாங்கள் முக்கியத்துவம் வழங்கியுள்ளோம். கடந்த காலங்களில், கொழும்பில் அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலுள்ள பல காணிகள் பாதுகாப்புத் தரப்பினரால் பெறப்பட்டிருந்தன. அவற்றையும் நாங்கள் கையளித்து வருகின்றோம்.

கடற்தொழில் சம்பந்தமான பிரச்சினை எனக்குத் தெரியும். இந்திய மீனவர்களின் றோலர் படகுகள் அத்துமீறி வருவதால் வடபகுதி மீனவர்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளை அறிந்துள்ளேன். இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட போது, இந்தியப் பிரதமருடன் இது தொடர்பில் பேசியிருந்தேன். இந்தியப் பிரதமர் அதனை ஏற்றுக்கொண்டார். அதிகாரிகள் மட்டத்திலும் இது தொடர்பில் பேச்சு நடத்தப்படும்."– என்றும் ஜனாதிப்தி கூறினார்.

"வடக்கு மாகாண முதலமைச்சர், வைத்தியசாலைக் குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டினார். அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஏனெனில் கடந்த 5 வருடமாக சுகாதார அமைச்சராக இருந்தவன் என்ற அடிப்படையில் எனக்கு அவை தெரியும்.

வடபகுதி விவசாயிகள் ஒட்டுமொத்த நாட்டு விவசாயிகளுக்குமான உதாரண புருஷர்கள். அவர்கள் தேசிய வருமானத்திற்கு அதிகளவு பங்களிப்புச் செய்கின்றார்கள்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"வடக்கு – கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட விதவைகள் 80 ஆயிரம் பேர் வரையில் இருக்கின்றனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளோம்." – என்றும் அவர் தெரிவித்தார்.

"இரும்பு – மண்ணினால் மாத்திரம் மக்களை ஒன்று சேர்க்க முடியாது. வடக்கு – தெற்கு மக்களுடைய உள்ளங்களை ஒன்று சேர்க்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை நான் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். வடக்கு – தெற்கு மக்கள் நண்பர்களாக, சந்தேகம் இல்லாமல் நம்பிக்கையுடன் பழக வேண்டும். சகோதரத்துவம் ஏற்பட வேண்டும். இதனை எம்மால் செய்ய முடியும் என்று நம்புகின்றேன்"– என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார். (ற–5)

## சந்திரசிறியை

"வடக்கு மாகாணத்துக்கு சிவில் நிர்வாக சேவை ஆளுநர் ஒருவர் வேண்டும் என்று கேட்டார்கள். நீண்டகாலமாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது. முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்கள். அப்போது நான் அமைச்சராக இருந்தேன். கோரிக்கையை நிறைவேற்றுங்கள் என்று அப்போது ஜனாதிபதிக்குச் சொன்னேன். கிழக்கிலும் இராணுவ ஆளுநரை நீக்கி விட்டு சிவில் ஆளுநரை நியமியுங்கள் என்று கோரினேன். ஆனால் அதனை அவர் செய்யவில்லை.

அவ்வாறு மஹிந்த செய்யாமையாலேயே, நான் இன்று ஜனாதிபதியாகியுள்ளேன்"– என்று சிரித்துக் கொண்டே கூறினார் மைத்திரிபால சிறிசேன.(ற–5)

## கீரிமலை

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திடீரென கீரிமலைக்குப் புறப்பட்டார். அவருடன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோரும் சென்றனர். கீரிமலையில் ஜனாதிபதிக்கான மாளிகை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. 200 கோடி ரூபா செலவில் குறித்த மாளிகை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. எதுவித நிதி அறிக்கைகளும் இல்லாது, எந்த அனுமதியும் பெறப்படாது குறித்த மாளிகை அமைக்கப்பட்டு வருகின்றது என்று அறிந்திருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால அதனைப் பார்ப்பதற்காகவே அங்கு திடீர்ப் பயணம் மேற்கொண்டார்.

கடற்படையினருக்கோ அங்கு பொறுப்பான இராணுவ அதிகாரிகளுக்கோ தனது வருகை பற்றி ஜனாதிபதி அறிவிக்கவில்லை. இதனால் அவர்கள் அங்கு எந்த ஏற்பாட்டையும் மேற்கொண்டி ருக்கவில்லை. திடீரெனச் சென்ற ஜனாதிபதி மாளிகையின் வெளிப் பகுதியைச் சுற்றிப் பார்வையிட்டார். அது மிகவும் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தங்குவதற்குரிய இடம் தனியாக அங்கு அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்வையிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரி விரும்பவில்லை. இதனைப் பார்க்க விரும்பவில்லை என்று அங்குள்ள அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்ததுடன், அதனை வீடியோ எடுத்து வந்து காட்டுங்கள் என்று தெரிவித்து விட்டு வெறுப்புடன் அங்கிருந்து புறப்பட்டார். (ற–5)

## இருநாட்டு

இந்திய மீனவர் சங்கங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்தச் பேச்சை நடத்துவதற்கு இலங்கை அரசு உடன்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சுக்கு விடுக்கப்பட்ட பணிப் பின்பேரில் பேச்சில் கலந்துகொள்ளும் இலங்கைத் தரப்பினருக்கான தெரிவு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நிமால் கெட்டியாராச்சி தலைமையில் உதவிப் பணிப்பாளர் லால்டி சில்வா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, கிளிநொச்சி, புத்தளம் ஆகிய மாவட்டங்களின் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளும், மன்னார் மாவட்ட நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் அடங்கிய குழுவினரே இந்தப் பேச்சில் கலந்து கொள்ளவுள்ளனர். அவர்க்ள எதிர் வரும் 10 ஆம் திகதி சென்னை புறப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு மீனவர் சங்கப்பிரதிநிதிகளும், மன்னார் மாவட்டத்தில் 2 மீனவர் சங்கப் பிரதிநிதிகளும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, புத்தளம், திருகோணமலை மாவட்டங்களில் இருந்து தலா ஒவ்வொரு மீனவர் சங்கப்பிரதிநிதிகளும் இதில் அடங்குவார்கள்.

இந்தந் பேச்சில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் நாளை மறுதினம் இவர்கள் கொழும்பில் கலந்துரையாடவுள்ளனர்.(ற–14)

## தமிழரின்

"கடந்த சில வாரங்களாக வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். காங்கேசன்துறையிலும், முல்லைத்தீவிலும் கடந்த வாரம் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின், இயந்திர இலக்கங்களை ஆராய்ந்தபோது அவை தமிழ் மக்களால் போரின் இறுதிக் கட்டத்தில் கைவிட்டுச் சென்ற வாகனங்களுக்குரியவை என்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ்நாயக்காவிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் இராணுவத்தினரிடம் பேசி விட்டுச் சொல்வதாகப் பதிலளித்தார். இராணுவத்தினருடன் பேசிய பின்னர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில், பொதுமக்களுக்கு பகிரங்க அறிவித்தல் கொடுத்து அவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படாத வாகனங்களையே விற்பனை செய்வதாகத் தெரிவித்துள்ளனர் என்று கூறினார்.

இராணுவத்தினர் அவ்வாறு பகிரங்க அறிவித்தல் கொடுக்கவில்லை என்பதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு சுட்டிக்காட்டினேன். எனவே இந்த நடவடிக்கையை உடனடி யாக நிறுத்துமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இணங்கினார்."– என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (5)

## காணிக்

பிரதேச செயலக நிர்வாகத்துக்கு உட்பட்ட எந்தவொரு உத்தியோகத்தர்களும் பங்கேற்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 44 ஏக்கர் இராணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. விசுவமடு மேற்கில் 3 ஏக்கர் காணியும், மாணிக்கபுரத்தில் 2 ஏக்கரும், சுதந்திரபுரத்தில் 20 ஏக்கர் தென்னங்காணியும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள 19 ஏக்கர் காணியும் அதில் உள்ளடங்குகின்றன.

இந்தக் காணிகள் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38 (ஏ) பிரிவின் கீழ் சுவீகரிக்கப்பட்டுள்ளன. சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளில், விசுவமடு மேற்கு மற்றும் மாணிக்கபுரத்தில் உள்ள காணிகளை உத்தியோகபூர்வமாக இராணுவத்தினரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை, வடக்கு மாகாண முதலமைச்சரும், காணி அமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன், காணி சுவீகரிப்புத் தொடர்பில் விசேட செயற்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். எனவே தற்போது காணி கையளிப்பு – காணி சுவீகரிப்பை உடன் இடைநிறுத்துங்கள் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குப் பணித்துள்ளார்.

முதலமைச்சரின் பணிப்புரைக்கு அமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மேற்படி காணி கையளிப்பு நடவடிக்கையை இடைநிறுத்துமாறு, கிளிநொச்சி மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலருக்குப் பணித்துள்ளது. ஆயினும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த குறித்த காணி சுவீகரிப்பு அலுவலர், தனக்கு அவ்வாறான எந்தப் பணிப்புரையும் வரவில்லை என்று தெரிவித்து நேற்றுக் காணி கையளிப்பைச் செய்துள்ளார்.

கிராம சேவையாளர், காணி உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் எவருமின்றியே அவர் இதனை மேற்கொண்டுள்ளார். மாணிக்கபுரத்தில் குறித்த காணி தமக்குத் தேவையில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். விசுவமடு மேற்கில் மாத்திரம் காணி கையளிப்பு நடந்துள்ளது. (ற–5)

## பட்டப்பகலில்

அரசஉத்தியோகத்தர்களானகணவனும், மனைவியும் பணிக்குச் சென்றிருந்தனர். மனைவியின் தந்தை வெளியே அலுவலாகச் சென்றுவிட்டார். பிள்ளைகளும் பாடசாலை சென்றுவிட மாமியார் மட்டும் வீட்டில் தனித்திருந்துள்ளார்.

அவருக்குக் தெரியாது வீட்டுக்குள் லாவகமாகப் புகுந்த தருடன் சங்கிலி, காப்புகள் என சுமார் 8 பவுண் நகைகளை சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளான் என்று கூறப்படுகின்றது. இதுகுறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ற–4,35)

## கூட்டு

சங்கத்தினர் சந்தேகம் எழுப்பினர். இதுதொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

'உதயன்' பத்திரிகையில் நேற்று இந்தச் செய்தி வெளியானது. இதை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோ நோக ராதலிங்கம், மாகாணசபை உறுப்பி னர்களான திஜாகராஜா, லிங்கநாதன், தர்மபால ஆகியோர் சிறுமியின் வீட் டுக்கு நேற்று நேரில் சென்றனர்.

பாலியல் வன்புணர்வின் காரணமாகவே சிறுமி உயிரிழந்தார் என கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்து வைத்தியர் ஒருவர் தங்களி டம் கூறினார் என சிறுமியின் உறவி னர்களும் மாதர் அபிவிருத்தி சங்கத்தி னரும் அப்போது தெரிவித்தனர்.

இறப்பதற்கு முன்னர் சிறுமி தங்கியிருந்த வீடு குறித்தும் ஊரவர்கள் பல்வேறு சந்தேகங்களைத் தெரிவித்தனர். அந்த வீட்டிற்கு வந்து செல்லும் ஆண் ஒருவர் வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு கைப்பேசியில் ஆபாசப் படங்களைக் காட்டுகிறவர் என்றும் அந்தச் சிறுவர்கள் தனக்கும் அதனைக் காட்டியிருக்கிறார்கள் என்றும் உயிரிழந்த சிறுமியின் சகோதரன் தெரிவித்தார்.

சிறுமி உயிரிழந்தமை தொடர்பாக ஊடகங்களுக்கு எந்த விதமான தகவல்களும் வழங்கக்கூடாது எனவும் மீறி வழங்கினால் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும். சிவில் உடையில் வந்த பொலிஸார் மிரட்டினர் எனவும் ஊரவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை மூடிமறைக்க சில சக்திகள் முயல்கின்றன என்றும் அப்படி நடந்தால் கிராமத்தில் இருக்கும் ஏனைய சிறுமிகளின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சிறுமியின் உயிரிழப்புத் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், சிறுமியின் இறப்புக் குறித்த உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்றும் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் கனகராயன்குளம் பொலிஸார் பக்கச் சார்பாக செயற்படுகின்றனர் என்று ஊர் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"சிறுமி நோயினால் இறக்கவில்லை. பாலியல் வல்லுறவினால் ஏற்பட்ட விளைவுதான் அவரது இறப்புக்குக் காரணம் என்பதை இங்கு வந்து பார்க்கும்போது திட்டவட்டமாகத் தெரிகிறது" என்று கூறினார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம்.

"பொலிஸார் தீர விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும. நான் மட்டுமல்ல இந்த கிராமத்து மக்களும் பொது அமைப்பினரும்கூட இதைத்தான் வலியுறுத்துகின்றோம். இந்த விடயத் தில் எங்கோ ஒரு தவறு நடந்துள்ளது. சிறுமியை வன்புணர்ந்ததில் நான்கு அல்லது ஐந்து பேருக்கு மேற்பட்டவர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் அதுவரைக்கும் நாங்கள் இந்த விடயத்திலே மிகவும் கரிசனையுடன் இருப்போம். இந்த மக்களுக்கு உறுதுணையாகவும் இருப்போம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ–21)

## பெண்ணுக்கு இருவருட சிறை

பொலநறுவை, மார்ச் 4
சிகிரியாவின் கண்ணாடி சுவரில் தனது காதலனின் பெயரை எழுதிய பெண்ணுக்கு 2 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு பெண்ணுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது.
தனியார் கைத்தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் குறித்த பெண் கடந்த 14 ஆம் திகதி சிகிரியாவுக்குச் சுற்றுலா சென்றிருந்தார். இதன்போதே [illegible]னது காதலனின் பெயரை எழுதியுள்ளார். (வ)

## பழுதடைந்த அரிசி மீட்பு

கொட்டாஞ்சேனை, சிவானந்த மாவத்தையில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் இருந்து, மனித பாவனைக்கு உதவாத 20 ஆயிரம் கிலோ கிராம் அரிசி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.
குறித்தஅரிசி விற்பனை செய்வதற்காக களஞ்சியப் படுத்தப்பட்டிருந்ததாக ஆரம்ப விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.
கைப்பற்றப்பட்ட அரிசி தொகையின் சந்தை பெறுமதி 12 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.(வ)




மட்டக்களப்பில் போரால் கால்களை இழந்த மற்றும் கணவனை இழந்த பெண்களுக்கு ஞானம் பவுண்டேஷன் மற்றும் லைக்கா மொபைல் நிறுவனத்தால் நேற்று முன்தினம் உதவிகள் வழங்கப்பட்டன. (வ)

# நீதிமன்றை மீளத்திறக்குக்

### நீதி அமைச்சரிடம் இம்ரான் மஹ்ரூப் வலியுறுத்து

திருமலை, மார்ச் 4
அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ், கிண்ணியா நீதிமன்றத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
அமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்தபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
இதன்போது அவர் அமைச்சரிடம் மேலும் தெரிவிக்கையில்:
கிண்ணியாவில் இயங்கி வந்த சுற்றுலா நீதிமன்றம் கடந்த போர்க்காலத்தில் மூடப்பட்டது. நாட்டில் சுமுக நிலை ஏற்பட்டு பல நீதிமன்றங்கள் மீளத்திறக்கப்பட்ட போதும் கிண்ணியா நீதிமன்றம் மீளத்திறக்கப்படவில்லை.
கிண்ணியா பிரதேச வழக்குகள் திருகோணமலை மற்றும் கந்தளாய் நீதிமன்றங்களிலேயே பதியப்படுகின்றன. இதனால் அந்தப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
எனவே, இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் கிண்ணியா நீதிமன்றத்தை அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
நீதிமன்றத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் வரை கிண்ணியாவில் உள்ள பொருத்தமான அரச கட்டடம் ஒன்றில் நீதிமன்றம் இயங்க ஒழுங்கு செய்யும் வாய்ப்பு உள்ளது என்று இம்ரான் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார். (வ)

## உறுப்பினர்களுக்கு கால்கட்டு சுதந்திரக் கட்சி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 4
சிறிலங்கா சுதந்திர கட்சி பிரதிநிதிகள் கட்சி தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் ஏற்பாடு செய்யும் கூட்டங்களில் அனுமதியின்றி பங்குபற்ற முடியாது என கட்சியின் மத்திய குழு அறிவித்துள்ளது.
கட்சியின் செயலாளர் அநுர பிரியதர்ஷனயாப்பா நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
''சுதந்திர கட்சி பிரதிநிதிகள் தமது இஷ்டத்திற்கு செயற்படவும், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடவும் தடைவிதிக்க மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் தமது தனிப்பட்ட கருத்துக்களை ஊடகங்களுக்கு முன் வைப்பதால் சிறிலங்கா சுதந்திர கட்சியின் கொள்கைக்கு இழுக்கு ஏற்படுகின்றது.''- என்று அவர் அந்த அறிகையில் சுட்டிக்காட்டி யுள்ளார்.
''சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்துள்ள ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து எதிர் வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதே தமது பிரதான நோக்கம். இந்தத் திட்டத்தை சீர்குலைப்பதற்கு சில தரப்புக்கள் சதி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.''- என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## எல்லை தாண்டும் மீனவருக்கு அபராதம்

சென்னை, மார்ச் 4
இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்தால் அவர்களுக்கு 50 ஆயிரம் இந்திய ரூபா அபராதம் விதிக்கப்படு வதுடன், அந்த மீனவர்கள் ஒரு மாதம் மீன்பிடிக்கச் செல்ல தடை விதிப்பது என்று காரைக்கால் மாவட்ட மீனவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
புதுவை மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் 11 மீனவக் கிராமங்கள் உள்ளன. சுமார் 300 விசைப்படகுகளும், ஆயிரம் பைபர் படகுகளும் உள்ளன. ஆயிரக்கணக்கான மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்தநிலையில், காரைக்கால் மீன்பிடித் துறை முகத்தில் காரைக்கால் மாவட்ட மீனவர்களின் அவசர ஆலோசனை கூட்டம் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.
மீனவர்கள், இந்திய எல்லைக்குட்பட்ட கடற்பகுதியில் மட்டுமே மீன்பிடி தொழில் செய்ய வேண்டும். எந்தக்காரணத்தைக் கொண்டும் இந்திய எல்லையைத் தாண்டி இலங்கைக்குள் மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இந்திய செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வ)

## தமிழ் அரச அதிபர் வேண்டும்

அம்பாறை, மார்ச் 4
அம்பாறை மாவட்டத்துக்கு தமிழ் பேசும் மாவட்ட செயலாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநரிடம் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பில் [illegible]வர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கிழக்கு மாகாணம் தமிழ்பேசும் மக்கள் அதிகமாக வாழும் மாகாணம். அங்கு வாழுகின்ற மக்கள் அரச கரும மொழியான தமிழ் மொழியிலேயே தமது நிர்வாகக் கடமைகளைப் புரிவதுடன்; அந்தமொழியூடாக தமது நிர்வாகத் தொடர்புகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.
அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களான தமிழர்களும் முஸ்லிம்களும் ஏறக்குறைய 60 வீதம் வாழ்ன்றனர். இந்நிலையில், குறித்த மாவட்டச் செயலகம் சிங்கள மக்கள் வாழும் பிரதேசமான அம்பாறை நகரில் உள்ளது. மாவட்டச் செயலாளரும் சிங்கள மொழி பேசுபவராக உள்ளார். அம்பாறை மாவட்டத்தின் அம்பாறைத் தேர்தல் தொகுதி தவிர [illegible]ந்துவில், சம்மாந்துறை மற்றும் கல்மு[illegible] ஆகிய 3 தொகுதிகளிலும் வாழும் மக்[illegible]ள் தமிழ் [illegible]ம் மக்கள்.
அவர்கள் தமது நிர்வாகத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அம்பாறை நகரிலுள்ள மாவட்டச் செயலகத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் மொழிப்பிரச்சினை காரணமாக பெரிதும் அசௌகரியங்களையும் சந்தித்தித்து வருகின்றனர்''-என்றார். (வ)



வலிகாமப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு யாழ், கிளி. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேரில் சென்று அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தார். தனது சொந்த நிதியிலிருந்து சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (வ)

# சர்வதேச ஆய்வு மாநாடு இன்று

மட்டக்களப்பு, மார்ச் 4
தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் அரபு மொழி பீடம் நடத்தும் இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு இன்று புதன்கிழமை பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த ஆய்வு மாநாடு மொழிகள், மதங்கள், கலாசாரம், மற்றும் சமூகத்தினூடாக தேசிய அபிவிருத்திக்கான நம்பிக்கை எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.
இவ்வாய்வு மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வாளர்களால் சுமார் 42 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் இந்தியா மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும் ஆய்வாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.
தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷெய்க் எஸ்.எம்.எம்.மஸாஹிர் தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் ஆரம்ப உரையை பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயிலும் பிரதான உரையை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவருமான பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸூம், பிரதான பேச்சாளர் பற்றிய அறிமுகத்தை சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எம்.எஸ்.எம்.ஜலால்தீனும் நிகழ்த்தவுள்ளனர். (வ)

## மோ.சைக்கிள் சிப்பாயுடன் மோதி விழுந்து ஒருவர் காயம்

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது பின் சில்லு ரயர் வெடித்ததால் ரோந்து சென்ற இராணுவச் சிப்பாயுடன் மோதினார் ஒருவர்.இதனால் அவர் விழுந்து காயமடைந்தார். 6ஆம் வட்டாரம், வேலணையைச் சேர்ந்த வேலாயுதம் நகுலேஸ்வரன் (வயது–51) என்பவரே பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.சிப்பாயும் காலில் சிறிய காயங்களுக்குள்ளானார். இராமாவில் முருகன் ஆலயத்திற்கு முன்பாக நேற்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (த–105)



யாழ்.நகர் கடைத் தெருப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதி வலம் வந்தார்.(த–17)

## பூ மலர்ந்தானில் மக்கள் குடியமர்வு



மன்னார் மடுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராம மக்களை மடு, பூமலர்ந்தான் கிராமத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மடு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தம்பனைக்குளம் கிராமத்தில் ஏற்பட்டு வரும் வெள்ளப் பெருக்கின் காரணமாக கிராமம் வெள்ளத்தில் மூழ்குவதோடு 364 குடும்பங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்த மக்களின் நலன் கருதி மடு பிரதான வீதியில் உள்ள பூ மலர்ந்தான் கிராமத்தில் காடுகளை வெட்டி மீள்குடியேற்ற முடிவெடுக்கப்பட்டது. இந்த நிலையில் தம்பனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 273 குடும்பங்கள் பூ மலர்ந்தான் கிராமத்தில் மீள் குடியேறுவதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தன. இவர்களுக்கு, பூ மலர்ந்தான் கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன–என்றார். (த–56)

# விரைவுபடுத்தி அனுமதியுங்கள்

## குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் மைத்திரியிடம் கோரிக்கை

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் மேற்கொள்ளப்படவுள்ள யாழ்ப்பாணம்–கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை, விரைவுபடுத்தி அனுமதிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் கோரிக்கை விடுத்தார். வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தின் நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது. கழிவு ஒயில் கலந்துள்ளமையினால் அதனைப் பாவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், யாழ்ப்பாணம்–கிளிநொச்சி குடிதண்ணீர்த்திட்டத்தை நடைமுறைப் படுத்த புதிய அரசு அனுமதி வழங்கவேண்டும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால், 160 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் முன்னெடுக்கப்பட இருந்த யாழ்ப்பாணம்– கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம் பின்னர் வடக்கு மாகாண சபையினால் மாற்றியமைக்கப்பட்டது. இரணைமடுக்குளத்திலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வராமல், மருதங்கேணியிலிருந்து கடல் நீரை நன்னீராக மாற்றும் திட்டம் முன்வைக்கப்பட்டது. புதிய திட்டத்துக்காக 390 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியுள்ளது.

இந்த நிலையில் புதிய அரசு, வெளிநாட்டு நிதியில் மேற்கொள்ளப்படும் சகல திட்டங்களையும் இடைநிறுத்தி மீளாய்வு செய்து வருகின்றது. அதனுள் யாழ்ப்பாணம் –கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தத் திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே அதனை அரசு விரைவில் மீளாய்வு செய்து திட்டத்தை ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டும் என்று பிரதம செயலாளர் பத்திநாதன் கோரிக்கை விடுத்தார். (த–5)

## மனைவியை கத்தி கொண்டு வெட்டிய கணவனுக்கு சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 4

தனது மனைவியை கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திய நபருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் ரூபா 1500 அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கணவரின் சார்பில் தோன்றிய சட்டத்தரணி குறித்த நபர் குற்றத்தை ஏற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். இதனையடுத்து நீதிவான் பெ.சிவகுமார், எதிரிக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

எதிரி சார்பில் தோன்றிய சட்டத்தரணி, எதிரி தனது மனைவி பிற ஆடவர் ஒருவருடன் கள்ளத் தொடர்பைப் பேணியதால் ஏற்பட்ட திடீர் கோபம் காரணமாகவே மேற்படி செயலைப் புரிந்தார் எனவும், தற்போது அதற்காக மனம் வருந்துகிறார் என்றும் சமர்ப்பணம் புரிந்ததைக் கருத்தில் கொண்டு குறித்த இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையில் 18 மாதகாலத்தினை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன் மிகுதி ஆறுமாத காலச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டுமெனவும் கட்டளையிட்டார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மனைவி கத்திக் குத்துக்கு இலக்காகி தலை, கழுத்து மற்றும் முன்கை ஆகிய பகுதிகளில் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த–103)

## அதிகாலையில் தீப்பிடித்து முற்றாக நாசமானது கடை



சாவகச்சேரி, மார்ச் 4

மீசாலைச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் திடீரெனத் தீப் பற்றி எரிந்ததால் கடையிலிருந்த அனைத்துப் பொருள்களும் எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.00 மணியளவில் இடம்பெற்றது.

வர்த்தக நிலையம் தீப்பற்றி எரிந்ததில் அங்கிருந்த சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகியதுடன் வர்த்தக நிலையத்தின் மேலாகச் சென்ற மின் வயர்களும், தொலைபேசி வயர்களும் எரிந்து சேதமடைந்தன. இதனால் மீசாலை, அல்லாரைப் பகுதிகளுக்கான மின்விநியோகமும், பளை, மருதங்கேணி போன்ற இடங்களுக்கான தொலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. அதிகாலை திடீரெனச் சத்தம் கேட்டதால் பக்கத்துக் கடைக்குள் படுத்திருந்த சிப்பந்திகள் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். பொலிஸார் யாழ்.மாநகரசபை தீயணைப்புப் படையினருக்குத் தகவல் கொடுத்தனர். அங்கு விரைந்த பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் தீயை அணைத்தனர். (த–9–131)

## ரயில் கடவை இன்றி ஆபத்து

கிளிநொச்சி, ஆனந்தபுரம் – உதயநகர் ஆகிய வற்றை இணைக்கும் வீதியில் பாதுகாப்பான ரயில் கடவை இல்லையென்றும், இதனால் ஆபத்து மிகுந்த நிலையில் தினமும் பயணிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். உதயநகர், அம்பாள்குளம், ஆனந்தபுரம் மற்றும் கிருஷ்ணபுரம் மக்கள் இந்தப் பாதையூடாகக் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குச் செல்கின்றனர். ரயில் கடவையை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கைஎடுக்கும்படி மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (த)

## கரிசல் கிராமத்துக்கு மின்சார விநியோகம்

மன்னார், மார்ச் 4

மன்னார் கரிசல் கிராமத்துக்கான மின் விநியோகத்தை கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். வடக்கின் வசந்தம் மின்சார திட்டத்தினூடாக இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (த)

## இரண்டு கட்டடங்கள் முல்லையில் திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 4

உலக வங்கியின் நிதியுதவியில் முல்லைத்தீவு துணுக்காய் சண்முகரத்தினம் வித்தியாலயம் மற்றும் துணுக்காய் வலயக் கல்வி பணிமனையில் அமைக்கப்பட்ட கட்டடங்கள், வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவினால் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

43.5 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட துணுக்காய் சண்முகரத்தினம் வித்தியாலய கட்டடம் முழுமையடைந்த நிலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் 50 மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் அமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு, 13 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஒரு கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (த)

## ஆய்வுகூடங்களை வடக்கு அமைச்சர்கள் திறப்பர்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வடமாகாண பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் பல இன்னும் திறந்து வைக்கப்படாதமையால், அவற்றை வடமாகாண முதலமைச்சர், கல்வி அமைச்சர் மூலமாகத் திறந்து வைக்குமாறு மத் திய கல்வி அமைச்சர், கல்வி இராஜாங்க அமைச் சர் ஆகியோர் வட மாகாணக் கல்வி அதிகாரி களுக்குக் கூறியுள்ளனர்.

ஆனாலும் அவ்வாறு திறந்து வைப்பதற்கு உரிய தொழில்நுட்ப உபகரணங்கள், பொருள்கள் இன்னும் வந்து சேராமையால் அவற்றை திறந்து வைப்பதில் தாமதம் ஏற்படுவதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கில் 90 பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றில் 18 பாடசாலைகளில் அவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.4 பாடசாலைகளிலுள்ள ஆய்வு கூடங்கள்கடந்த வாரம்திறந்து வைக்கப்பட்டன.

மிகுதியை மத்திய அமைச்சர்களை எதிர்பார்த்திராது வடக்கு முதலமைச்சர், கல்வி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் மூலமாகத் திறந்து வைக்குமாறு மத்திய அமைச்சர்கள் ஏற்கன வே கூறிவிட்டனர்.

ஆனாலும் அவற்றுக்குரிய உபகரணங்கள் இன்னும் வந்த சேராமையால் திறந்து வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், அவை விரைவில் வந்து சேரும் என்றும் சத்தியசீலன் தெரிவித்தார். (த-4)

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

யாழ். குடாநாட்டில் இம்முறை அதிகளவான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டதால் சந்தைகளில் வெங்காயத்தின் விலை குறைவடைந்துள்ளது. (த)

## மாற்று வலு உள்ளோருக்கு செயற்கை அவயங்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கு செயற்கை அவயவங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வு இன்று பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி தென் னிந்திய திருச் சபை முன்பள்ளியில் இடம் பெறும். (த-9)

## யாழ். நகர வீதிகளில் மதுப் பிரியர்கள் அட்டகாசம்

யாழ். நகரப் பகுதியின் பிரதான வீதிகளில் இரவுவேளை மதுப்பிரியர்களின் அட்டகாசத்தினால் போக்கு வரத்துச் செய் வோர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த)

## மாதகலில் பொலிஸ் ரோந்து அதிகரிப்பு

மாதகல் கடல் ஊடாக கஞ்சா கடத்தப்படும் சம்ப வங்கள் அதிகரித்ததை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் இரவு, பகல் வேளைகளில் அதிகரிக்கப் பட்டுள்ளன.

அதிகளவான பொலிஸார் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்களில்களிலும் ரோந்தில் ஈடுபடுகின்றனர். (த)

# மாணவர் பாதிப்பு

### குடிதண்ணீர் இல்லாமையால் மதிய உணவும் இல்லை

கிளிநொச்சி, மார்ச் 4

பூநகரி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 8 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் இன்மையால் மதிய உணவு வழங்கப்படவில்லை என்றும், அந்த உணவை நம்பி பாடசாலைக்கு வரும் மாணவர்கள் பட்டினி யாலும், குடிதண் ணீர் இன்றியும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடு வதாகவும், இந்த உணவை நம்பி பாடசாலைக்கு வரும் மாணவர்கள் தற்போது கல்வி செயற்பாடுகளில் ஆர்வம் இன்றியும் இருப்பதாக பாடசாலைச் சமூகம், பெற்றோர்கள் விசனம் அடைந் துள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பாடசாலைகளுக்குமான மதிய உணவு வழங்கப் பட்டு வந்தது. இதனடிப்படையில் பூநகரிக் கோட்ட பாடசாலை களுக்கும் உணவு வழங்கப் பட்டது. ஆனால் பூநகரியைப் பொறுத்த வரை அங்கு குடி தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக காணப்பட்டதால் அதற்கான நீர் விநியோகத்தை கடந்த காலங்களில் பூநகரி பிரதேச செயலகம் வழங்கி வந்தது. ஆனால் தற் போது இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக அந்த பாடசாலைகளுக்கு தற் போது மதிய உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது பாடசாலைகளில் உணவு சமைப்பதற்கும் சுத்தமான நீரை பெறமுடியாதுள்ளது.

இது குறித்து பூநகரிப் பிரதேச செயலர் சத்தியசீலனை கேட்ட போது, பூநகரி பிரதேச செயல கத்துக்கு இடர் நிவாரண அமைச் சினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து கடந்த காலங்களில் கிட்டத்தட்ட 8 பாடசாலைக ளுக்கு நாங்கள் இந்த நீர் விநியோகத்தை மேற்கொண்டு வந்தோம். ஆனால் தற்போது அந்த நிதி முடிவடைந்தள்ளது. ஆகவே தான் பாடசாலைக ளுக்கு நீர் வழங்கப்படவில்லை. இந்த நீர் வழங்குவது எமது பிரதேச சபைக்குரிய வேலைத் திட்டம் இல்லை இருந்தாலும் எமது பிரதேசத்து மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட கூடாது எமது பிரதேசம் உணவு இன் மையால் கல்வியில் பின்தங்கிவிடக்கூடாதுஎன்பதற்காகவேவழங்கியிருந்தேன்-என்றார். (த-21)



மன்னார் மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கை வெற்றியளித்ததையிட்டு பெரியமடு கிழக்கு கிராமத்தில் கடந்த சனிக்கிழமை வயல்விழா நடைபெற்றது. (த)

## குழுக்களின் அட்டகாசத்தால் இரவில் அச்சத்துடன் மக்கள்

சாவகச்சேரி, மார்ச் 4

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இரவு நேரங்களில் குழுக்களின் அட்டகாசத்தினால் மக்கள் அப்பகுதியில் நடமாட அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரங்களில் அப்பகுதியில் பல்வேறு வாள் வெட்டுச் சம்பவங்கள் பதிவாகி இருப்பதனால் இப்பகுதியில் இரவு நேரத்தில் மக்கள் நடமாட்டம் தற்போது குறைவடைந்துள்ளது.

இரவு நேரங்களில் அப்பகுதியில் இளைஞர் குழுக்களின் நடமாட்டம் அதிகமாக உள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

சில நாள்களுக்கு முன்னர் இனம் தெரியாத சிலரால் வர்த்தகர் ஒருவரும் ,அவரது நண்பரும் வாள் வெட்டுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனை விட பல்வேறு சிறு சிறு சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இதனைத்தொடர்ந்து மட்டுவில் ,சரசாலைப் பகுதிகளைச் சேர்ந்த சாவகச்சேரி வர்த்தகர்கள் அச்சம் காரணமாக நேரத்துடன் மாலை நேரத்திலேயே தமது கடைகளை மூடிவிட்டு வீடு செல்வதாகவும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் யாரையும் கைது செய்யாமல் மௌனம் சாதிப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-9)

## குடும்ப நல உத்தியோகத்தர் அடையாள வேலை நிறுத்தம்

தென்மராட்சி, மார்ச் 4

சுகாதார நிறுவனங்களில் கடமைபுரியும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் சேவையைச் சேர்ந்தவர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளின் பிரசவ விடுதி, பிரசவ அறையினுள் தாதிய உத்தியோகத்தர்கள் கடமை செய்வதைக் கண்டித்து இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

பிரசவ விடுதிக்கு வரும் அவசர நோயாளர்களுக்கு மட்டும் சிகிச்சையளிக்கப்படுமெனவும் குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கத்தினால் மருத்துவமனைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாளை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## [illegible]ங்களுக்கு சேவையாற்றுவதே அரச ஊழியர்களின் கடமை

பொது மக்களுக்கு சேவையாற்றுவதே அரச ஊழியர்களின் கடமையாகும். குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட பொது மக்க ளுக்கு அரச உத்தியோகத்தர்கள் உதவிகளைச் செய்வதற்கு முன் வரவேண்டும் – இவ்வாறு அறிவுறுத்தினார் யாழ். நீதிவான் பெ.சிவகுமார்.

யாழ்.நீதிவான் நீதி மன்றில் நடந்த வழக்கொன்றுக் காக நல்லூர் பிரதேச செயலரையும் அந்தப் பகுதியில் உள்ளடங் கும் பகுதி ஒன்றுக்காக கிராம சேவையாளரையும் நன்னடத்தை உத்தி யோகத்தரையும் மன்றுக்கு வரவழைத்த நீதிவான் மேற்படி அறிவுரை வழங்கினார்.2009ஆம் ஆண்டு வன்னியில் நடந்த போரின்போது தாய் தந்தையரை இழந்த இரண்டு சிறுவர்களுக்கு நீதிமன்றால் பொருத்தமான பாதுகாவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் குறித்த சிறுவர்கள் வாழும் கிராமத்துக்கு பொறுப்பான கிராம அலுவலர் அவர்களுடைய குடும்ப அட்டையை கொடுப்பதற்கு தொடர்ச்சியாக மறுத்துவந்தார். இந்த விட யம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

குறித்த அலுவலர்கள் மன்றில் முன் னிலையாகியிருந்தனர். அதன் [illegible]து நீதிவான், “போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து உதவிகளை எதிர் பார்க்கும் போது அவர்களுக்குரிய உதவிகளை தம்மால் இயன்றளவு வழங்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் முன்வரவேண்டும் ”– என அறிவுறுத்தினார்.குறித்த சிறுவர்கள் இருவரினதும் பாது காவலருக்கு உடனடியாக குடும்ப அட்டையை வழங்க நடவ டிக்கை எடுக்குமாறு பிரதேச செய லருக்கு பணித்த நீதிமன்றம் அவர் களின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை மன்றுக்குசமர்ப்பிக்குமாறு நன்னடத்தை உத்தியோகத்தருக்கு கட்டளையிட்டார். (ந-103)

## மரக்கறி விலை சரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 4

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் கடந்த இரண்டு தினங்களாக கீழிறங்கிக் காணப்படுகின்றன. (த)

## சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்பு

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உணவு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சிக்குப் பயணமொன்றை மேற்கொண்டு, அம்பாள்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற தம்புள்ள மாதிரியிலான பொருளாதார மத்திய நிலையத்தை கடந்த வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நெல் கொள்வனவு நடவடிக்கைகளை மேலும் இலகு படுத்தி அனைத்து விவசாயிகளும் நன்மை பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து அமைச்சர், அதிகாரிகளிடம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கினார். கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையானது ஒரு விவசாயியிடமிருந்து 2000 கிலோ கிராம் மாத்திரம் கொள்வனவு செய்வதால் எல்லா விவசாயிகளாலும் உரிய காலத்தில் நன்மையை பெற்றுக்கொள்ள முடியாது எனவும் சுட்டிகாட்டப்பட்டது. (த)

# வடக்கின் மாபெரும் போர் நாளை



யாழ்.மத்திய கல்லூரி அணி

இருப்பவர்கள்–(இடமிருந்து வலம்) விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் வி.ஆர்.வி.டினேஸ், பி.நிரோஜன்,(அணித் தலைவர்),எஸ்.கே. எழில்வேந்தன்(அதிபர்),எஸ்.மதுஷன் (உப அணித்தலைவர்) எஸ்.சுரேஸ்மோகன் (பயிற்றுநர்) முதல்வரிசையில்–(இடமிருந்து வலம்) ஏ.ஜேரோஷன், எஸ்.கௌதமன், எஸ்.திரேசன், ஏ.தனுஷன், ஜீ.நிதுஷன்,எஸ்.மதுஷன், வை.கிருபகரன், எஸ்.தசோபன், வி.திசோத்.

இரண்டாம் வரிசையில்(இடம்மிருந்து வலம்) எஸ்.கோமேதகன், எஸ்.ஹரிதீபன், யு.பிரியலக்சன, கே.தீபன்ராஜ், எஸ்.அலன்ராஜ், வி.டினோஜன்.



சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி

இருப்பவர்கள்–(இடமிருந்து வலம்) பி.லவேந்திரா (பயிற்றுநர்) எ.கானமிர்தன் ,பி.துவாரகசீலன், எஸ்.கபில்ராஜ் (அணித் தலைவர்), வண.பிதா என்.ஜே.ஞானப்பொன்ராஜா (அதிபர்), ஆர்.லோகதீஸ்வர்,(உப அணித் தலைவர்). எம்.சிந்தூரஜன், வி.குமணன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள்–(இடமிருந்து வலம்) எஸ்.ஜெனி பிளெமின், வி.ஜதுஷன், ஜே.கிஷாந்துஜன், ஏ.கிஷயாந்தன், ஆர்.செலுமீல்,ரி.சிவதர்ஷன், ஆர். பிரியஷங்கர்

நிற்பவர்கள் 2ஆம் வரிசை –(இடமிருந்து வலம்) சி.தேவப்பிரஷாந், ரி.கஜீபன் எஸ்.டினேஜன், கே.கபில்ராஜ், ஏ.ஹெ ரோல்ட் லக்கி.

யாழ்ப்பாணம்,மார்ச் 4

வடக்கிலுள்ளவர்கள் மட்டுமல்ல இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களையும் புலம் பெயர் மக்களையும் யாழ்ப்பா ணத்தின் பக்கம் கவர்ந்திழுக்கும் வடக் கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான109 ஆவது துடுப்பாட்டப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் சனிக் கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி கபில்ராஜின் தலைமையிலும், யாழ்.மத் திய கல் லூரி நிரோஷன் தலைமையிலும் கள மிறங்கவுள்ளன. இரு அணிகளுமே சகலதுறை பலம் வாய்ந்தாகக் காணப் படுவதால் போட்டி பரபரப்பாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதுவரை நடைபெற்று முடிந்த 108 ஆட்டங்க்ளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33 வெற்றிகளையும், மத்திய கல்லூரி 27 வெற்றிகளையும் பெற்றுள்ளன. 39 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்ததுடன் 7 ஆட்டங்கள் முடிவு இல்லாதவையாகவும் 1 ஆட்டம் கைவிடப்பட்டதாகவும் உள்ளது.

ரசிகர்களுக்கு விருந்தாக விருக்கின்ற இந்த வடக்கின் மாபெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் இரு அணிகளின் வீரர்களும் தங்கள் ரசிகர்களின் எதிர் பார்ப்பை பூர்த்தி செய்யும் அதேவேளை தங்கள் அணியினையும் வெற்றிப் பாதையில் கொண்டு செல்வதில் முனைப்புடன் செயற்படுவார்கள்.

(த–ரி–23)

பணிநிலை வெண்டுகை
யாழ் A9 வீதியில்
இயங்கிவரும் Bastian Hotel
இற்கு பகுதி நேர Waiter தேவை
வேலை நேரம் : 6.00 P.M. - 11.00 P.M.
4, 5, 6 ஆம் திகதிகளில்
காலை 9.00 - 11.00 வரை
நேரில் வரவும்.
WANTED
PART TIME WAITER
Bastian HOTEL
37, Kandy Road, Jaffna. | TP: 021 222 2605

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவஞானம் மனோரகரன்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் மனோகரன் 02.03.2015 காலமாகிவிட்டார்.

அன்னார் மனோகரனின் (சின்னராசா வெற்றிலைக்கடை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராசா - அன்னம்மா தம்பதிய ரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான மருதப்பு - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், இராசமலர், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தர்மராஜா, சரஸ்வதி, தவமணி, நிர்மலாதேவி, கனகரத்தினம் மற்றும் பராசக்தி சொக்கலிங்கம், சுசீலாதேவி, ரஞ்சினிதேவி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாணிக்கவாசகர் வீதி,
செட்டியார் வளவு,
சுன்னாகம்.

(57466) (45.3.7)

தகவல்:
கணவர்- ம.மனோகரன்
(சின்னராசா வெற்றிலைக்கடை)



### மயில்வாகனம் சுப்பிரமணியம்

துரைவீதி, இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், 183, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, இணுவிலை வதிவிடங்களாகவும் கொண்ட மயில்வாகனம் சுப்பிரமணியம் 01.03.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலசென்றவர்களான மயில்வாகனம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா- கண்மணி தம்பதியினரின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், குலசிங்கம்,இலங்கநாதன், காந்தராயா(வவுனியா), மகேஸ்வரி (கண்டி), இரத்தினமூர்த்தி (ஜெயகணன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருச்செல்வம் (தம்பி), அருட்செல்வம் (தயா -இத்தாலி), நந்தினி (கனடா), ஜெயந்தா, சுதா, வவி(பிரான்ஸ்), கெங்கா(கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் இந்திராதேவி, வதனா(இத்தாலி), நவதீபன்(தீபன்- கனடா), ரஜிதான் (கரன் பான்ஸி, சுன்னாகம்), கர்ணராஜன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சானுகா (கனடா), ஆரண்யன், அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்ர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை அவரது இணுவிலில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரைவீதி,
இணுவில் தெற்கு, தாவடி.

(57438)(45.3.7)

தகவல் : குடும்பத்தினர்.
T.P. : 077 927 5886

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021567111

பிறக்கும் புத்தாண்டை முன்னிட்டு
லா(F)ப் காஸ்
வழங்கும் விசேட விலை தள்ளுபடி
12.5 Kg லா(F)ப் வெற்று சிலிண்டர் 3400 ரூபா
அத்துடன் 5Kg வெற்று சிலிண்டர் 2300 ரூபா
4000.00 விசேட விலை 3400.00
விசேட விலை 2600.00 2300.00
இச்சலுகையினை தங்களுக்கு அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட லா(F)ப் காஸ் முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
மேலும் விசேடமாக இப் பண்டிகை காலத்தில்
நியூ லக்ஷமி ரேடர்ஸ்
இல . 275, கண்டி வீதி.சாவகச்சேரி
என்னும் முகவரியில் அமைத்துள்ள எமது லா(F)ப் காஸ் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ் விநியோகஸ்தர்களிடம் நேரடியாகப் பெற்று கொள்ளமுடியும்.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே (நிபந்தனைகளுக்குட்பட்டது)
தொடர்புகளுக்கு: 077 1880 117, 021 227 0162

விசேடவகுப்புக்கள்
வியாழன் (5/3) நடைபெறும்
அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் தடைதாண்டலுக்கு
காலை 9.00 - 3.00 மணிவரை
வடமாகாண ஆசிரியர் தெரிவு
முற்பகல் 10.00 - 4.00 மணிவரை
அதிபர் E.B. இற்கு
நண்பகல் 12.00 மணி
T.P: 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ். நகர்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550 0777585913, 0777222422, 071429935
கிழமை நாளுக்கான மாலை வகுப்புகள் 2.30 - 5.00 மணி வரை புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது
அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள்07/03/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.
Batch 1 : 07-03-2015
Batch 2 : 09-03-2015
Batch 3 : 11-03-2015
Batch 4 : 14-03-2015

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புதன் பொய்கை

உதயன்

04 மார்ச் 2015 புதன்கிழமை


எல்லை தாண்டி
நடப்பவர்களது வாயில்
தோன்றும் கடுஞ்
சொற்களைப் பொறுத்துக்
கொள்பவர்கள்,
துறந்தவர்களைப் போல
தூய்மையும்
கொண்டவர்களாவர்.
—திருவள்ளுவர்.

# எது ஜனநாயகம்?

ராஜராஜன்



மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டதே மக்களின் ஜனநாயகம் என்று அழகாக எடுத்துக் கூறிச் சென்றார் அமெரிக்க நாட்டின் புகழ்பூத்த ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஆபிரகாம் லிங்கன். இதைக் கூறுவதற்கு அவர் மிகவும் பொருத்தமானவர் ஏனென்றால் அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, நாயிலும் கேவலமாக நடத்தப்பட்ட கறுப்பு இன மக்களின் விடுதலைக்காகத் தமது உயிரையும் பொருட்படுத்தாது போராடிய உத்தமர் அவர்.

இன்று ஜனநர்யகத்தின் பெயரைக் கூறிக் கொண்டு அரசியலில் பிழைப்பு நடத்துபவர்களை நாம் காண்கின்றோம். ஜனநாயகம் என்ற போர்வையால் தம்மை மறைத்துக்கொண்டு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுத் தம்மையும் தம்மைச் சுற்றியிருப்பவர்களையும் உயர்த்தி விடுவதே இவர்களின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகின்றது.

ஒரு நாட்டில் வாழும் மக்கள் பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், கருத்துக்களை எவரின் இடையூறுமின்றி வெளிப்படுத்தும் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் மட்டுமே அவர்களின் ஜனநாயக உரிமைகள் அந்த நாட்டில் மதிக்கப்படுகின்றன என்று கொள்ள முடியும். இதைவிட அவரவர்களுக்குரிய மொழி, மதம், கலாசாரம் ஆகியனவற்றைப் பேணுவதற்கான சுதந்திரமும் வழங்கப்படவேண்டும். ஆனால் இன்று ஜனநாயக நாடுகள் எனக்கூறிக்கொள்ளும் பெரும்பாலான நாடுகளில் வாழும் மக்களுக்கு இவை கிடைப்பதில்லை. அதிகார பலத்தின் மூலமாக மக்களின் உரிமைகள் நசுக்கப்படுவதையே காண முடிகின்றது.

அண்மையில் கறுப்பின இளைஞர் ஒருவர், வெள்ளை இனத்தவரான பொலிஸ்காரர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டமை அமெரிக்காவில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருந்தது. கறுப்பின மக்கள் அமெரிக்காவில் விரும்பிக் குடியேறியவர்கள் அல்ல. அமெரிக்க வெள்ளை இனத்தவர்களால் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்கள்தான் இவர்கள். இன்று அமெரிக்காவின் முக்கிய குடி மக்களாகத் திகழும் இவர்கள், விளையாட்டுத் துறையில் அமெரிக்காவுக்கு புகழ் ஈட்டிக் கொடுக்கின்றனர். ஆனால் அமெரிக்க வெள்ளையர்களிடம் இனவெறி முற்றாக நீங்காத நிலையில், கறுப்பினத்தவர்கள் அவ்வப்போது சீண்டப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதன்காரணமாக ஆபிரகாம் லிங்கன் கூறிய ஜனநாயகம் அமெரிக்காவில் இன்னமும் கேள்விக்குறியான நிலையிலேயே காணப்படுகின்றது.

தாம் விரும்பியவரை ஆட்சித் தலைவராக நியமிக்கும் உரிமையை ஜனநாயகம் மக்களுக்கு வழங்கியுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டின் முதுகெலும்பாக அங்கு இடம் பெறும் நேர்மையான தேர்தல்கள் கணிக்கப்படுகின்றன. தேர்தல்களில் மக்கள் சுய விருப்பத்துடனும், எவரது இடையூறுகள் இல்லாமலும் வாக்களிக்கும் உரிமைகளைக்கொண்டிருக்கவேண்டும்வாக்காளர்களுக்கு லஞ்சம் வழங்குதல்,தேர்தல் மோசடிகளில் ஈடுபடுதல் என்பன ஜனநாயக விழுமியங்களைச் சிதைத்து விடும். ஆனால் இன்று பெரும்பாலான நாடுகளில் நேர்மையான தேர்தல் இடம்பெறுவதில்லை. ஜனநாயகத்தின் பெயரைக் கூறிக் கொண்டு தேர்தல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளையே நாம் காணக் கூடியதாக உள்ளது. ஒருவரைக் கைது செய்யும்போது கூட அதற்கென விதிமுறைகள் உள்ளன. இவற்றின் மூலமாக தனிமனிதர்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் அதிகாரங் கள் பயன்படுத்தப்பட்டு பொலிஸார் மற்றும் படையினரின் ஒத்துழைப்புடன் மக்கள் நீதிக்குப் புறம்பான வகையில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும் காணாற்போகச் செய்யப்படுவதும் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிப்பதற்குச் சமனானதாகும்.

கம்யூனிச தத்துவங்களைக் கடைப்பிடித்து வந்த நாடுகள் கூட, ஜனநாயக வழிமுறைகளை ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வருகின்றன. ஆனால் அங்கு இடம்பெறும் தேர்தல்கள் எப்போதுமே விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றன. இதை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள முடியாது.

இன,மத , ரீதியான முறுகல் நிலைகள் ஜனநாயகத்தின் ஆணிவேரையே பாதிக்கக் கூடியன. இவற்றுடன் நிற ரீதியான வேறுபாடுகள் சேரும்போது நிலைமை படுமோசமான கட்டத்தை எட்டி விடுகின்றது.

ஜனநாயகம் என்ற அந்தப் புனிதமான வார்த்தையை உச்சரிப்பதற்கு ஒரு தகுதி வேண்டும். ஆனால் தகுதியில்லாதவர்களிடம் அது சிக்கிச் சின்னாபின்னமாவதைப் பார்க்கும் போது மனம் வேதனையில் உறைகின்றது. ஜனநாயகம் என்றால் என்ன என்றகேள்வியை எழுப்புவர்கள் இன்னமும் இருக்கும்வரையில், அதற்கான பதிலையும் சொல்லியே ஆகவேண்டும்.


ஒரு நாட்டில் வாழும் மக்கள் பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், கருத்துக்களை எவரின் இடையூறுமின்றி வெளிப்படுத்தும் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஆகியவற் றைக் கொண்டிருந்தால் மட்டுமே அவர் களின் ஜனநாயக உரிமைகள் அந்த நாட்டில் மதிக்கப்படுகின்றன என்று கொள்ள முடியும்.





அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டு பொலிஸார் மற்றும் படையினரின் ஒத்துழைப்புடன் மக்கள் நீதிக்குப் புறம்பான வகையில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக் கப்படுவதும் காணாற்போகச் செய்யப்படுவதும் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிப்பதற்குச் சமனானதாகும்.

உதயன் புத்தாண்டு – 2015

மலர் மேய்ச்சல்:

# 'போஷாக்குகள் விளைந்துள்ள ஒரு வயல்!'




நவாலியூர் கவிராயர்

பழைய இலக்கியங்களும் வரலாறுகளைப் பகர்கின்றன. ஆயினும் கட்டுரைகள் ஊடாக வாசிக்கும் சுவை தனியானது.

பொ.சோபா எழுதியுள்ள 'எல்லாவற்றின் ஆதி மூலமும் பெண்களே' கட்டுரை கொஞ்சம் கீழே போனதும் என்னை மலைக்கச் செய்யும் புதுமைத் தகவல்களைத் தந்து கொண்டே இருந்தன. பெண்கள் அடுப்பங்கரைக்கு மட்டுமே லாயக்கெனச் சொல்லப்பட்ட பிற்காலப் போதம் தூக்கி அடிக்கப்பட்டு சகலவித தொழில் உற்பத்தி வேட்டை சமரிடல், கலை, ஞானம் எந்தத் துறைகளை எடுத்துக் கொள்ளினும் பெண்களே மூலவர்களாக விளங்கியமையை வாசித்து இக்காலப் பெண்கள் நிமிர்த்தலாம் நெஞ்சை!

அன்னை தெரேசாவை நோயாளர்களுக்கான பணியில் ஈடுபடுத்தியவர் அவரது கணவரான றெஜினோல்ட் என்பதை என்னைப் போன்று இதுவரை அறியாமல் இருந்த பலருக்கும் எஸ்.சுஜாதா எழுதியுள்ள 'வாழும் அன்னை தெரேசா' கட்டுரை தெரிவித்து இருக்கும்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 'சமூக நோக்கில் பல்லவர் காலப் பக்தி இயக்கம்' பற்றிப் பிரஸ்தாபிக்கையில் கி.பி. 575முதல் 882வரையான காலப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே நடந்தேறிய சமய மாற்றங்கள் பற்றி அறிய வைத்துள்ளது.

பொதுவாகத் தமிழர்களுக்கு என்று சொந்தச் சமயங்கள் இருக்கவில்லை என்பதும், பிற நாட்டு மொழிகள் வழியாகவே பிற சமயங்கள் தமிழரிடையே ஊடுருவின என்பதும், ஒரு பக்கம் இருக்க, தமிழர் தழுவிய ஏனைய சமயங்களான சமண பௌத்த மதங்களுக்கு மாறிய மக்களைத் திரும்பவும் வைதிக சமயங்களில் சேர்த்துக்கொள்ளக் கையாண்ட மொழிப் பற்று, பிரதேசப்பற்று மற்றும் அற்புதங்கள், உலகியல் வாழ்வு, பாதயாத்திரை, கலை கலாசார உந்துதல், குடும்ப உறவு போன்ற இன்னோரன்ன உத்திகளைப் பக்தி இயக்கம் கையாண்ட அணுகு முறைகளைக் கட்டுரை விவரித்துள்ளது.

'யாழ்–கிராமிய நடனங்கள் நலிவடையக் காரணமென்ன?' என்பதை விரிவாக நோக்கியுள்ள திருமதி அம்பிகைரூபன் உமாமகேஸ்வரி முக்கியமாக அந்த மூன்று தசாப்தகாலங்களைச் சுட்டுவதில் தவறே இல்லை.

அகதி முகாம் வாழ்வு, பொருளாதார இறுக்கம், விலைவாசிகள் அதிகரிப்பு உலகமயமாக்கல் போன்ற பலவற்றைக் காரணங்களாகக் கூறியவர் அதற்கான மார்க்கங்களையும் தெரிவித்து இருப்பதானது கட்டுரைத் தரத்தை உயர்த்துகிறது.

இறுதியாக தற்போது அந்தக் கலைகளில் ஈடுபட்டு வரும் கலைஞர்களை வரிசைப்படுத்தி உள்ளதும் தேவையானது. பாரம்பரியக் கலைகள் அமைப்பை இயக்கிக் கொண்டிருந்த கலைஞர் மெற்றாஸ் மெயில் மறைவும் சுட்டிக் காட்டத்தக்க ஒன்று.

தொல்காப்பியம் நன்நூலுக்குப் பிற்பாடு தமிழ் உரை நடை, வளர்ச்சி அமைந்துள்ளது. அதற்கான புதிய இலக்கணம் தமிழ் மொழிக்கு எழுதப்பட வேண்டுமென்னும் சிந்தனையை அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை மிகச் சிறிய கட்டுரையில் வலியுறுத்துகிறார்.

இலக்கணங்கள் பற்றி அறிய பெரிய பெரிய நூல்களைப் புரட்டி மினக்கெட விரும்பாதவர்களுக்கு பதச் சோறாக அமைந்துள்ளது கட்டுரை!

டாக்டர் நி.தர்ஷனோதன் 'வாழ்க்கையில் வெற்றி காண்பது எப்படி' எனப் பார்க்கையில் அநேகமானோர் இலகுவாகப் பணக்காரர் ஆக முயல்வதைப் பற்றி விரிவாகச் சொல்ல, அதற்கு மருந்து இது தானென்று மருத்துவர் பாணியில் மார்க்கத்தைச் சமர்ப்பித்து இருப்பதும் நன்றாக அமைந்து விட்டது.

கந்தையா பால சுப்பிரமணியம் எழுதியுள்ள 'பண்பாடுகளைப் பாதுகாப்போம்' கட்டுரையில் பண்டிகைகளின் வழியாகப் பேணப்பட்டு வந்த தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் சமகால நவீனத்துவ நுழைவுகளால் சிதறடிக்கப்பட்டிருக்கும் பிறழ்வுகள் பண்பாட்டைப் பேணுதலில் இடைவெளி தோன்றக் காரணமென்கிறார்.

'ஜனாதிபதி இல்லத்தில் பொங்கல்' ராஜராஜன் எழுதிய கட்டுரை சந்தர்ப்பத்துக்கு ஏற்ப சுவாரஸ்யமாய் அமைந்துள்ளது. இறுதியில் அனைத்தும் கற்பனை எனும் குறிப்புப் போடாவிடினும் வாசிப்போருக்குப் புரிந்திருக்கும்.

மருத்துவர் சி.யமுனாநந்தா 'இயல் இயம்பும் இயல் யாழியம்' கட்டுரையில் தமிழின் தொன்மைகள் ஆராயப்பட்டுள்ளன. உலகப் பல மொழிகளுக்கும் மூலமொழி தமிழென்பதும் நிறுவப்பட்டுள்ளது. அழிவுக்கு உட்படாமல் வாழவும் வாழ வேண்டியதற்கும் தமிழில் தொன்மங்கள் இன்றும் பேணப்பட்டுக் கொண்டிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொங்கல் நாளாந்தம் ஒவ்வோர் நாடு, வீடுகளில் எல்லாம் உணவுக்காக மேற்கொள்ளும் கைங்கரியம். அந்தப் பொங்கலை தைத்திங்கள் முதல் நாளில் திருநாளாகக் கொண்டாடும் மரபைத் தமிழர் மத்தியில் விதைத்த உழவுத் தொழிலுக்கு உதவும் எருதுகளுக்கும் மறுதினம் விழா செய்கின்றனர். நெற்பயிர் விளைவில் பெரிதும் உதவிடும் சூரியனை வரவேற்று நன்றியைத் தெரிவிப்பதற்கு பொருண்மியத்தில் மேலோங்க வைத்ததற்கும் நன்றியைத் தெரிவிக்கும் உழவுத் தொழில் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் காலத்தில் 1000 தோணிகளில் ஈழ மக்களுக்கு நெல் அனுப்பி வைத்தமையையும்–

'மாடு கட்டிப் போரடிக்க மாழாதென்று யானை கட்டிப் போராடித்தனர்' என்னும் வரலாற்றுச் சங்கதிகளை ஆசிரியர் க.குணரத்தினம் தந்ததோடு அல்லாமல், மேலும் பல அரிய தகவல்களைத் தந்துள்ளமையை புத்தாண்டு மலர் நூறு பக்கங்களில் மாந்தக் கிடைத்தமை பாக்கியமே!

அடுத்துச் சிறுகதைகளைப் பார்ப்போம். எமது எழுத்தாளர்கள் எண்மர் எழுதியுள்ளனர். கோகிலா மகேந்திரனின் 'ஆத்ம இம்சை' மலரின் முன்பாக வந்துள்ளது.

படிக்கும் பருவத்தில் அதே பருவ மாணவனுக்கு பிள்ளையைப் பெத்துக் கொண்டு வந்துள்ள மகளின் வாழ்வைச் சிந்திக்கும் தாயொருவள் மனவிகாரங்களைச் சிலந்தி வலையில் வீழ்ந்து குற்றுயிராகத் துடிக்கும் 'மொத்'பூச்சியொன்றை உவமேயப் படுத்தி உளவியல் பார்வையில் சொல்கிறார் கோகிலா.

கதையை நகர்த்த இறுக்க உத்தியைக் கையாண்டுள்ளார். கருப் பொருளில் புதுமையில்லை. நியாய விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கதாசிரியர் உளவியல் ஈடுபாட்டைக் கொண்டவராதலால் நுகர்வோரும் அதே உத்தியில் வாசித்தாலே விளங்கும். அந்தப் பிரச்சினைக்கு நிறையச் சொல்லியும் எதையோ சொல்லாமல் விட்டு விட்டது போலவும் எனக்குப் படுகிறது.

கண–மகேஸ்வரனின் 'ஆக்கிரமிப்பு' அடுத்து வருகிறது. பென்சனியர் செல்லையா மலேசியாவில் இருக்கேக்கை அவர் மகனிடம் பசுபதி வாங்கியுள்ள காணியை அடாத்துச் செய்யப் பென்சனியர் திட்டம் போட்டதுக்கு பசுபதிக்காக நியாயம் கதைக்க வந்த சின்னத்தம்பி உடையார், அதனை மறுதலித்து பென்சனியருக்கும் தனக்கும் சின்னக் குரோதம் இருந்தாலும் உறவுமுறை குலையாமலும் இருக்கத் தன்னலத் திட்டம் இடுகிறார்.

பாம்புக்கும் வேடனுக்கும் இடையே அகப்பட்ட கலைமானான பசுபதிக்கு, பிழையான பரிகாரத்தைப் போதிக்கிறார் உடையார். அதன்படி செயற்பட்ட பசுபதி, ஏற்பட்ட பிரளயத்தால் கைமோசக் கொலைகாரனாக மாற, பயந்த அவனது மகன் குடும்பம் உடையாரின் உதவியை நாடிச் செல்கின்றனர்.

தன்னுடைய குட்டு வெளிப்படாமல் இருக்க அவர்களுக்குக் கொஞ்சப் பணத்தைக் கொடுத்து ஓடித் தப்பும்படி சொல்கிறார் உடையார். இவற்றை அறியாமல் சட்டத்தின் கையில் மாட்டுப் பட்டிருந்த பசுபதி, பிள்ளைக்காக இரத்தம் சிந்திப் பெற முனைந்த காணியையும் விட்டுத் தலைமறைவாகிவிட்ட மகனை நினைந்து சாம்புவதாகக் கதை நிறைகிறது.

பழக்கப்பட்ட கருப்பொருள் கதை அடக்குமுறைக்குச் சாதகமாகவே முடிந்துள்ளது. அடக்கப்படுபவர்களின் மீட்சிக்கு கோடி காட்டி இருந்தால் அதனது தரம் உச்சம் பெற்றிருக்கும்.

'ஆண்'மீகம் தையிட்டி அ.இராசதுரை எழுதியுள்ள கதை. கதையில் இராசதுரை என்னத்தைச் சொல்ல முனைகிறாரென்று விளங்கவில்லை என்று சொல்ல நானும் வெட்கப்படேல்லை. 'சுதந்திரன்' காலத்துப் பழமை வாய்ந்த எழுத்தாளர் இடப் பெயர்வின் போது மக்களுடன் வெளியேறாமல் படையினருடன் தங்கி இருந்தவர்.

அதன் பின்பாக அவரெழுதும் கதைகளை என்னால் வாசித்து அறியக் கஷ்டமாகவே உள்ளது. இந்தக் கதையில் நனைவேடை உத்தியை அளவுக்கு அதிகமாகப் பாவித்துள்ளார். உதாரணத்துக்கு லெக்ஸரர் வாசவன் ஹரிச்சந்திர மாஸ்ரரைக் கண்டதும் மனதுள் திட்டுவதெல்லாம் எழுத்தில் வந்துள்ளது.

அது போலவே ஹரிச்சந்திர மாஸ்ரர் வாசவனை மனதுள் வைவதெல்லாம் எழுத்தில் வந்துள்ளது. அதுவும் பெரிய பெரிய பந்திகள் தெருச் சண்டையில் எல்லாளன் வாசகி கம்பஸில் நடத்திய லீலைகள் திரைப்படம் போலோடுவதாயும் அவ்விடம் வந்த லெக்ஸரர் வாசவன் டயரியைத் தொலைப்பதாகவும் விளங்குது.

அப்புடி இப்புடியெண்டு நகர்ந்த கதை லெக்ஸரர் வாசவன் வாசகியைப் பெண் பார்க்கப் போன இடத்தில் அந்த டயரி அவளின் தகப்பனார் மடியில் குந்தி இருப்பதாகவும் கதை குளோஸ்.

தேவிபரமலிங்கத்தின் 'முள்ளிவாய்' ஒரு குடும்பத்தின் வரலாற்றின் சிறுதுளி எனலாம். அடைக்கல முத்து– ராணி தம்பதிகளின் வாழ்வில் கிடைத்த ஐந்து ஆண் பிள்ளைகளில் மூன்றை வன்னி இறுதிச் சண்டையின் போது இழந்தது. அவர்கள் தொலைத்து விட்ட வாழ்வுக்கு அச்சாரம் கொடுத்துள்ளது. அதுவரையில் தன்னுள் விளைந்த புற்று நோயையும் அறியாமல் இருந்த ராணி மறைய அடைக்கலமுத்து தனித்துவிட எஞ்சிய இரு ஆண்பிள்ளைகள் பக்கத்தில் இல்லை. அடைக்கலமுத்து,ராணி, பிள்ளைகள் குடும்ப வாழ்வை "முள்ளிவாய்" என்னும் கறையான் உள்ளால் அரித்துக் கொல்ல முள்ளிவாய்க்கால் பிரச்சினைகளும் கால்கோள் இடுகின்றன.

கதையை ஆரம்பிப்பதும் முடிப்பதும் ஒருசேர அழகாக அமைந்துள்ளன. நீண்டதொரு கதைக் களத்தை நாவலாக எழுதாமல் சிறுகதை ஆக்கியுள்ள குறை சுட்டிக்காட்டுகிறது. வாசகர் கதையை ஒப்புவித்துள்ளமை தெளிவாகக் கதையை அறிய உதவுகிறது.

'விடையில்லா வினாக்கள்" ஒரே நாட்டில் வாழும் இரு இனங்களைச் சேர்ந்தோர் சவூதி அரேபியாவில் சந்தித்த வேளை அரேபிய மொழியில் பேசிக்கொள்வதை அரேபியன் கண்டு கொதிப்படைகிறான்.

(தொடரும்)



# கைகளால் எழுதிப் பழகாவிட்டால் கற்கும் திறன் பாதிக்கப்படும்

மிதுமி

கைகளால் எழுதிக் கற்கும் முறை குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்குத் துணைபுரிவதாக, புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. கைகளால் எழுதுவதற்குப் பதில் கணினியின் விசைப் பலகை மற்றும் தொடுதிரைகளைப் பயன்படுத்தி குழந்தைகள் மேலதிகமாகக் கல்வி கற்கும் தற்போதைய நடைமுறை அவர்களது படிக்கும் திறனை பாதிப்பதாகவும் அந்த ஆய்வு குறிப்புணர்த்தியுள்ளது.

உலக அளவில் குழந்தைகள் பேனா மற்றும் பென்சிலைப் பயன் படுத்தி காகிதத்தில் எழுதும் போக்கு படிப்படியாகக் குறைந்து வருகிறது. அதற்குப் பதிலாக, தற்காலக் குழந்தைகள் கணினிகளின் விசைப்பலகைகளை பயன்படுத்தியும் ரப்லட்களின் தொடுதிரை கணினிகளில் விரல்களைப் பயன்படுத்தியும் தட்டச்சு செய்யும் போக்கு அதிகரித்துவருகிறது.

இதன் காரணமாக அவர்களின் (மூளை) வளர்ச்சியும் படைப்புத் திறனும் பாதிக்கப்படுமா என்கிற கேள்விக்கு பாதிக்கப்படும் என்று பதில் கூறியிருக்கிறது இந்தப் புதிய ஆய்வின் முடிவு.

குழந்தைகள் கைகளால் எழுதிக் கற்கும் நடைமுறை அவர்களின் மூளை வளர்ச்சிக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை விளக்கும்படி பிபிசியின் சார்பில் மூளை வளர்ச்சி தொடர்பான நரம்பியல் நிபுணர்களின் ஜேம்ஸிடம் கேட்கப்பட்டது.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்காக அமெரிக்காவில் இருக்கும் ப்ளூமிங்க்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ஜேம்ஸ் இதுவரை படிக்கத்தொடங்காத குழந்தைகள் மத்தியில் தனது ஆய்வை மேற்கொண்டார்.

அந்தக் குழந்தைகளால் எழுத்துக்களை அடையாளம் காண முடியும் என்றாலும், அந்த எழுத்துக்களைக் கூட்டி வார்த்தையாக உருவாக்க அவர்கள் பழகியிருக்கவில்லை. அந்த குழந்தைகள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒரு பிரிவு குழந்தைகளுக்கு இந்த எழுத்துக்களை கைகளால் எழுத பயிற்சியளிக்கப்பட்டது. மற்றப் பிரிவு குழந்தைகளுக்கு கணினியின் விசைப்பலகைகள் மூலம் எழுத்துக்களை தட்டச்சு செய்யப் பழக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக அந்தக் குழந்தைகள் எந்த அளவுக்கு எழுத்துக்களை கற்றிருக்கிறார்கள் என்று பரிசோதிக்கப்பட்டது. அந்தக் குழந்தைகளின் மூளைச் செயற்பாட்டை கண்காணித்து பதிவு செய்யக் கூடிய மின்காந்த எதிர்வினை படப்பிடிப்பு தொழில் நுட்பமும் இந்தப் பரிசோதனைகளின் போது பயன்படுத்தப்பட்டது.

இதன்மூலம் குறிப்பிட்ட எழுத்துக்களை குழந்தைகள் கற்றுத் தேறும்போது அவர்களின் மூளையில் என்னவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

அந்தப் பரிசோதனைப் பயிற்சிக்கு முன்பும், பயிற்சி முடிந்த பின்புமாக அந்தக் குழந்தைகளின் மூளைகள் ஸ்கேன் மூலம் படம் பிடிக்கப்பட்டன. இந்த இரண்டு குழு குழந்தைகளின் மூளைகளும் தமது செயற்பாட்டுக்குளெடுத்துக்கொள்ளும் ஒக்சிஜனின் அளவும் இதன் மூலம் கணிக்கப்பட்டது.

குழந்தைகள் கைகளைக் கொண்டு ஒரு எழுத்தை எழுதும்போதும், கணினியின் விசைப்பலகையை பயன்படுத்தி தட்டச்சு செய்யும் போதும் மூளை வெவ்வேறாக எதிர்வினையாற்றுவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

### கையெழுத்து கண்களைப் படிக்க ஊக்குவிப்பதாக கூறுகிறது ஆய்வு

கைகளால் எழுதும் குழந்தைகளின் மூளைச் செயல்பாடானது, நன்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின்மூளையின்செயல்பாட்டை ஒத்திருப்பதை இந்த ஆய்வின் முடிவுகள் காட்டின.

ஆனால் கணினியின் விசைப்பலகையைப் பயன்படுத்தி எழுத்துக்களைத் தட்டச்சு செய்த குழந்தைகளின் மூளைச் செயல்பாடு அப்படி இருக்கவில்லை.

குழந்தைகள் தங்களின் கைகளால் எழுதும் போது, அவர்களின் மூளை அந்தச் செயலுடன் ஒத்திசைந்து எதிர்வினையாற்றுகிறது. இதன் மூலம் குழந்தைகளின் கையால் எழுதும் பழக்கத்துக்கும், படிக்கும் பழக்கத்துக்கும் இடையில் நேரடித் தொடர்பு இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பரிசோதனைகளில் எடுக்கப்பட்ட மூளைச் செயற்பாட்டின்படங்கள்,குழந்தைகள்கைகளால் எழுதும்போது அவர்களது படிக்கும் பழக்கம் கூர்மைப்படுவதைக் காட்டுகிறது. எனவே தொடர்ந்து அவர்கள் கைகளால் எழுதும் போது அவர்களது படிக்கும் திறனும் தொடர்ந்து கூர்மைப்படுகிறது என்கிறார் ஜேம்ஸ்.

அத்துடன், கைகளால் எழுதுவதற்குத் தேவையான நேர்த்தியைக் குழந்தைகள் வளர்த்துக் கொள்ளும்போது, அதனால் அவர்களின் நரம்பு மண்டலச் செயற்பாடு மேம்படுவதாகவும், அதன் பயனாக அவர்களின் அறிவுத் திறன் வளர்ச்சியும் பலவகைகளில் அதிகரிப்பதாகவும் பேராசிரியர் ஜேம்ஸ் தெரிவித்தார். இந்த ஆய்வின் முடிவுகள் உலக அளவில் கல்விக்கொள்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையக்கூடும்.

உலகின் சில பகுதிகளில் மழலையர் பாடசாலை மட்டத்திலேயே கூடுதலாக கணினிகளை அறிமுகம் செய்யவேண்டும் என்கிற அவசரம் காட்டப்படுவதாகவும், இந்த ஆய்வின் முடிவுகள் அதை தாமதப்படுத்தக்கூடும் என்றும் பேராசிரியர் ஜேம்ஸ் நம்பிக்கை வெளியிட்டார். அமெரிக்காவின் பல பாடசாலைகளில் கூட்டெழுத்துப் பழகும் நடைமுறையை விருப்பப் பாடமாக மாற்றிவிட்டதால், பல ஆசிரியர்கள் அதை பள்ளிகளில் கற்பிப்பதையே நிறுத்தி விட்டார்கள்.

கணினிகளின் விசைப்பலகைகளே பாடசாலைகளின் கூடுதல் நேரத்தை எடுத்துக் கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. பாடசாலை கால அட்டவணையில் கையெழுத்தின் முக்கியத்துவம் என்பது படிப்படியாக குறைந்து வருகிறது என்கிறார் ஜேம்ஸ்.

இதற்கு ஒரு தீர்வாக, மடிக்கணினிகளின் தொடுதிரையில் எழுதும் ஸ்டைலஸ் எனப்படும் மின்னணு பேனாவைக் கொண்டு எழுதும் பழக்கத்தை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தலாம் என்கிற யோசனை சிலரால் முன் வைக்கப்படுகிறது. இதன் மூலம் கைகளால் எழுதும் பழக்கத்தின் பலன்கள் கிடைக்கும் என்பது இவர்களின் எதிர்பார்ப்பு.

ஆனால், கைகளால் எழுதுவதற்கு மாற்றாக வேறு எந்தவிதமான மாற்று ஏற்பாடும் உரிய பலன் தருமா என்று பேராசிரியர் ஜேம்ஸின் ஆய்வின் முடிவு கேள்வி எழுப்பக்கூடும்.

# புத்தகப் பாதுகாப்பு

## ஒரு நுண்ணிய கலை



நாம் சிறுவயதில் மிகவும் கஷ்டப்பட்டுச் சேகரித்த காமிக்ஸ் மற்றும் இதர புத்தகங்கள் விலை மதிப்பற்றவை என்பதை நாம் அறிவோம். நாம் அன்று ஒரு சில ரூபாய்கள் கொடுத்து வாங்கிய புத்தகங்களை, இன்று யாரேனும் பல ஆயிரங்கள் கொடுத்துக் கேட்டாலும் விற்க மாட்டோம் என்பது புத்தகங்கள் மீது காதல் கொண்ட ஒவ்வொரு சேகரிப்பாளருக்கும் தெரியும். ஆனால் எம்மில் பலருக்கு தெரியாத சங்கதி ஒன்று இருக்கிறது. அது, பாடுபட்டுச் சேர்த்த புத்தகங்களை முறையாக பாதுகாப்பது எப்படி என்பது பற்றி தான்.

புத்தகங்களை அதிக வெப்பம், ஈரப்பதம், தூசி இல்லாத அறையில் அல்லது அலுமாரியில் பாதுகாக்கவும், ஈரப்பதம் மற்றும் செல்லரித்ததால்பாதிக்கப்பட்ட புத்தகங்களைப் பிற புத்தகங்களுக்கு அருகில் வைத்திட வேண்டாம்,முடிந்தால் தனியே பாதுகாக்கவும். புத்தகங்களைப் பரணில் அல்லது வீட்டின் கிடங்கில் ஒருபோதும் வைக்க வேண்டாம். அதிகபட்ச ஈரப்பதமும், பூச்சிகளும் உங்கள் புத்தகங்களை பதம் பார்த்துவிடும். புத்தகங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கக் கூடாது, மாறாக அவற்றை நிற்பாட்டிய நிலையில் வைக்க வேண்டும்.

### புத்தகங்களை அடுக்கும் முறை

ஒவ்வொரு புத்தகத்தையும் அதன் அளவைவிட சற்றே பெரிய பிளாஸ்டிக் உறையில் வைத்திடவேண்டும். புத்தகத்தை நுழைப் பதற்கு முதல் அதற்கு சாய்மானமாக உறை அளவிலான ஒரு அட்டையை வைக்க வேண்டும். மூடியுடன் கூடிய அட்டைப் பெட்டிகளில் சிறிது சிறிதாய் புத்தகங்களை பிரித்து வைக்கலாம். இவ்வாறு அட்டை பெட்டிகளில் மூடி வைப்பது பூச்சிகளையும், ஈரப்பதத்தையும் கட்டுப்படுத்தும். சில மாதங்களுக்கு ஒரு முறை பெட்டிகளைத் திறந்து புத்தகங்களை கண்காணிக்க வேண்டும்.

செய்தித்தாள் அல்லது மட்டை ரக தாள்கள் மூலம் புத்தகங்களுக்கு அட்டை போட வேண்டாம், இது புத்தக அட்டையை பழுப்பேறச் செய்யும்.

கிழிந்த புத்தகங்களைப் பின் அடிப்பது, கிளிப் செய்வது, ரப்பர்பேண்ட் மூலம் கட்டுவது போன்ற முறைகளைத் தவிர்க்கவும். இவைகள் துருப்பிடித்தோ அல்லது ரப்பர் ஒட்டியோ புத்தக அட்டை மற்றும் உள்பக்கங்களைப் பாழாக்கிவிடும்.

கிழிந்த பக்கங்களை சாதாரண பிளாஸ்டிக் பசைநாடா மூலம் ஒட்டக்கூடாது. முடிந்தால் உயர்தர நிறம், வழுவழுப்பில்லாத, மின்னாத நாடாக்களைப் பயன்படுத்த வேண்டும். மடங்கிய பக்கங்களை சீராக்குவதாய் நினைத்து புத்தகத்தின் மேல் அதிக எடை உடைய பொருள்களை பல மணி நேரம் வைப்பது தவறு. சுருண்ட பக்கங்களை நேராக்க இஸ்திரிப் பெட்டியை ஒருபோதும் உபயோகிக்கக் கூடாது. இது தாளை பழுப்பேற்றி விரைவில் பொடித்துப் போகச் செய்துவிடும்.

கரப்பான் பூச்சிகளும் மிக – ஆபத்தானவை, அவற்றை கட்டுக்குள் வைத்திடுங்கள். அதற்காக கொல்லி மருந்து தெளிப்பான்களைப் பயன்படுத்தி புத்தகங்களைக் குளிப்பாட்ட வேண்டாம். பழைய புத்தகங்களை படிக்க நினைத்தால் அதை இன்னொரு புத்தகத்தின் உள்ளே வைத்து, சமதளத்தில் கிடத்தி அதிகம் கை படாமல் படிக்கவும். பக்கங்களை எச்சில் அல்லது பசை தொட்டு திருப்பக்கூடாது.



# சிற்பியும் நீயே சிலையும் நீயே!

■ புவி

*மாணவன்: கடவுள் என்பவர் யார்?*
*தத்துவ ஆசிரியர்: முதலில் நீ யார்?*
*மாணவன்: நான் பாலு.*
*தத்துவ ஆசிரியர்: அது உனது பெயர். உண்மையில் நீ யார்?*
*மாணவன்: நான் மாணவன்.*
*தத்துவ ஆசிரியர்: அது நீ கல்லூரியில் உள்ளவரை. அதன்பின்?*
*மாணவன்: என் பெற்றோரின் மகன்.*
*தத்துவ ஆசிரியர்: அது வீட்டில். அதைத் தவிர்த்து நீ யார்?*
*மாணவன்: நான் ஒரு கிரிக்கெட் வீரன்.*
*தத்துவ ஆசிரியர்: அது விளையாடும்போது. அதைத் தவிர்த்து நீ யார்?*
*மாணவன்: ம். இப்போது சரியாகக் கண்டுபிடித்துவிட்டேன். நான் ஒரு மனிதன்.*
*தத்துவ ஆசிரியர்: அது உனது மனித உடம்பு. நீ யார்?*
*மாணவன்: எனக்குக் குழப்பமாக உள்ளது. நான் யார் என்று தெரியவில்லை.*
*தத்துவ ஆசிரியர்: முதலில் உன்னை நீ அறிந்துகொள். பிறகு கடவுள் யார் என்பதைப் பற்றி யோசிக்கலாம்.*

இது ஒரு பிரபலமான தத்துவ உரையாடல். முதல் பார்வைக்கு ஆன்மிகத் தேடல் குறித்த விவாதமாகத் தோன்றலாம். என்னை அறியும்போது உலகம் கடந்தும் என்னுள் இருக்கும் கடவுளை உணர்கிறேன் என்ற பொருள் ஒருபுறம் இருக்கிறது. மற்றொரு புறம், முதலில் என்னை நான் அறிய வேண்டும், அதன்பின்தான் மற்றவை எல்லாம் என்ற அர்த்தமும் உள்ளது. இந்தத் தத்துவக் கேள்விகளுக்குள் எதார்த்த வாழ்வுக்கு அவசியமான கருத்துகள் பொதிந்துள்ளன. அவற்றை ஆராய்வதுதான் எமது நோக்கம்.

**இது யாருக்காக?**

இந்தக் கட்டுரையைப் படிக்கும் நீங்கள் ஒரு மாணவர் என்ற ரீதியில் சில விடயங்களை ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தற்போது தேர்ந்தெடுத்திருக்கும் இந்தப் படிப்புத்துறையில் ஏன் சேர்ந்தீர்கள்? உங்கள் திறனை, விருப்பத்தை, கனவை நீங்களே உள்ளார்ந்து ஆராய்ந்து இதுதான் எனது தெரிவு என்று முடிவெடுத்தீர்களா? அல்லது உங்களுடன் இருக்கும் நண்பர்கள், சக மாணவர்கள் அத்துறையைத் தேர்ந்தெடுத்ததால் நீங்களும் அதே படிப்பைத் தேர்ந்தெடுத்தீர்களா? அல்லது பெற்றோர், அயலில் உள்ளோர் இதைப் படித்தால் எதிர்காலத்தில் நல்ல வேலைக்கு உத்தரவாதம் உண்டு எனச் சொல்லக் கேட்டுச் சேர்ந்தீர்களா? அல்லது எதையுமே யோசிக் காமல் போகிற போக்கில் சேர்ந்தீர்களா?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை உடனடியாகக் கண்டறிந்து நீங்கள் யாரிடமும் சொல்ல வேண்டியதில்லை. முதலில் இந்தக் கேள்விகளை உங்களுக்குள் அசை போடுங்கள். உங்கள் கல்வியோடு மட்டும் தொடர்புபடுத்திப் பார்த்துவிட்டு நின்று விடாதீர்கள். ஒட்டுமொத்தமாக நீங்கள் யார் என்பதைச் சிந்திக்கத் தொடங்குங்கள். வாழ்வில் மிக முக்கியமான விடயம் எதுவென்றால், மிக முக்கியமான விடயம் எது என்பதைக் கண்டறிவதே! என்றார் ஒரு ஜென் தத்துவ அறிஞர்.

**உங்கள் சிற்பி யார்?**

பெற்றோர், உறவினர், நண்பர்கள், அயலார், படிக்கும் கல்விக்கூடம், வேலை பார்க்கும் அலுவலகம் இப்படி உடன் இருப்பவர்களோடு இணங்கித்தான் பெரும்பாலான நேரங் களில் நாம் எமது வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுக்கிறோம். நண்பர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அறிவுரையைப் பின்பற்றுவது தவறா என்றால், அவர்கள் அக் கறையோடுதான் உங்களைச் செதுக்க முயல்கிறார்கள். ஆனால் மனிதன் என்ற சிலையை வேறொரு சிற்பி செதுக்கும்போது அந்தச்சிலை முழுமை பெறாது. மனிதன் தன்னைத்தானே வடிக்கும் சிற்பி. நீங்களே சிற்பி! நீங்களே சிலை! உங்களுடன் இருப்பவர்களும் இதே போன்ற கற்பிதங்களின் அடிப்படையில்தான் உங்களுக்கான பாதையைக் காட்டுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களது பாதையை நீங்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கு முதலில் உண்மையாக நீங்கள் யார் என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதைச் செய்வதுதான் தன்னிலை அறியும் திறன்.

**அமைதிப் புரட்சி**

இயல்பாகவே இந்தத்திறன் கொண்டவர்கள் தங்களுடைய பலம், பலவீனம் இரண்டையும் சரியாகக் கணித்து வைத்திருப்பார்கள் என்று சென்ற வாரம் பார்த்தோம். பிறர் சொல்வதைக் கண் மூடித்தனமாகக் கேளாமல் தங்களது மனம் சொல்வதைக் கேட்பார்கள், அதன்படி செயற்படுவார்கள். தங்க ளுக்கான இலக்கைக் கண்டறிந்து அதை அடையத் தன்னம்பிக்கையோடும், நேர்மறை யாகவும் பயணிப்பார்கள். அதே சமயம் விழுமியங்களுக்கு மதிப்பளிப்பார்கள். இந்தத்திறனுக்கு மிகச்சிறந்த உதாரணங்களாகத் தத்துவ ஞானி சோக்ரடீஸையும், அன்பின் திருவுருவம் அன்னை திரேசாவையும் குறிப்பிடலாம். இருவரும் வெவ்வேறு விதமான ஆளுமைகளாக இருந்த போதிலும், அமைதியாக அதே சமயம் ஆழமாகத் தாங்கள் யார் என்பதை உணர்ந்து, இந்த உலகுக்குச் செய்ய நினைத்த பங்களிப்பை அளித்துவிட்டுக் கண்டம், காலம் கடந்தும் வரலாற்றில் நிலையான இடம் பிடித்திருப்பவர்கள்.

**குழப்பம் வேண்டாம்**

ஆனால் தன்னிலை அறியும் திறன் உடையவர்கள் அதிகமாகப் பேசமாட்டார்கள், தனிமை விரும்பிகளாக இருப்பார்கள், குழு மனப்பான்மை குறைவாக இருக்கும். அப்படியானால் தன்னைத் தானே ஒரு கூட்டுக்குள் சுருக்கிக் கொள்ளும் இண்ட்ரோவர்ட் மனோபாவம் உடையவர்களோ என்ற சந்தேகம் எழலாம். சர்வாதிகார மனப்பான்மை கொண்டவராகச் செயற்படுவார்களோ எனவும் தோன்றலாம். தன்னிலை அறியும் திறன் வேறு வேறு என்று உளவியல் நிபுணர் கார்டனர் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். தன்னை அறியும் திறன் கொண்டவர்கள் தன்னைப் பற்றிய ஆழமான புரிதல் உடையவர்கள் என்பதால் பிறரைப் பற்றிய அக்கறை அற்றவர்கள் என்ற பார்வை மிகத் தவறானது. அமைதியாக இருப் பதால் அவர்கள் பிறரோடு பழகத் தெரியாதவர்கள் அல்ல. தனக்கான பாதையைக் கண்டறிய முடியாதவர் எவர் ஒருவரும் பிறருக்கும் வழிகாட்ட முடியாது என விளக்குகிறார் கார்டனர். மாற்றத்துக்காக காத்திருக்காமல் மாற்றமாகி வாழ்பவர்களே தன்னிலை அறியும் திற னாளிகள்.

# மனிதனுக்குக் கிடைத்த வரம்

■ மயூரி

எமது அன்றாட வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாதவற்றில் ஒன்று மொழி. நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஏதோ ஒரு வகையில் மொழி உள்ளது. பேச்சு, எழுத்து, குரல் வழியாக (வானொலி), காட்சியுடனான எழுத்து வழியாக (காணொலி) எனப் பல வகைகளில் மொழி உள்ளது.

மொழி இருப்பதால்தான், எல்லா விடயங்களையும் அடையாளப்படுத்தி, புரிந்துகொள்ள முடிகிறது இல்லையா? மனிதனுக்கும் குரங்குகளுக்கும் இடையிலான அறிவு வளர்ச்சி இடைவெளிக்கு மொழியே காரணம் என்கிறார் குரங்கு ஆராய்ச்சியாளர் ஜேன் குடால்.

மொழியின் வழியாக அனுபவங்களும் வரலாறும் காலங்காலமாக நினைவு கூரப்படுவதே முக்கிய காரணம். அதிலும் எமது தாய்மொழியே அறிவு வளர்ச்சிக்கு முழுமுதற் காரணமாக இருக்கிறது.

பெப்ரவரி 21 ஆம் திகதியை உலகத் தாய் மொழி நாளாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. அதையொட்டி உலக மொழிகளைப் பற்றிச் சில சுவாரஸியமான விடயங்களைத் தெரிந்துகொள்வோமா?

எஸ்பிரான்டோ என்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு மொழி. இதை 5 லட்சம் பேர் முதல் 20 லட்சம் பேர்வரை பேசுகிறார்கள். இந்த மொழியில் 2 திரைப்படங்களும் எடுக்கப் பட்டுள்ளன.

அமெரிக்க நாட்டில் ஆட்சி மொழி கிடையாது. ஆனால், ஆங்கிலத்தில்தான் கிட்டத்தட்ட எல்லாத் தகவல் பரிமாற்றங்களும் நடைபெறுகின்றன.

ஐ.நா. சபையின் அதிகாரப்பூர்வ மொழிகள் 6.

கிறிஸ்தவப் புனித நூலான பைபிள் 2,454 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

உலகில் 2,400 மொழிகள் அழியும் ஆபத்தில் இருப்பதாக அடையாளம் காணப் பட்டுள்ளன.

சராசரியாக ஒவ்வொரு 14 நாள்களுக்கும் ஒரு மொழி அழிந்துபோவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கிழக்கு சைபீரியா, வட அமெரிக்காவின் வடமேற்கு பசுபிக் பகுதி, வடக்கு ஆஸ்திரேலிய பகுதிகள் அழியும் தறுவாயில் உள்ள பல மொழிகளைக் கொண்டுள்ளன. 231 மொழிகள் ஏற்கெனவே முற்றிலும் அழிந்து போய்விட்டன.

ஒரு கணக்குப்படி சராசரியாக ஒரு நாளைக்கு 4,800 வார்த்தைகளை ஒவ்வொருவரும் பேசுகிறோம். ஆபிரிக்[...] நாடுகளிலேயே சோமாலியாவில் மட்டும்தான், நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசுகின்றனர். அது சோமாலி மொழி.

ஆசியக் கண்டத்தில் மட்டும் 2,200 மொழிகள் இருக்கின்றன.

சீன மொழியான மாண்டரினில் 50,000 எழுத்துகள் உள்ளன. எல்லாம் சித்திர எழுத்துகள். ஒரு நாளிதழைப் படித்துச் செய்தியைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால்கூட 2,000 எழுத்துகள் தெரிந்திருக்க வேண்டும்.

உலகில் 2,700 மொழிகளும், 7,000 வட்டார வழக்குகளும் இருக்கின்றன. வட்டார வழக்கு என்பது குறிப்பிட்ட பகுதியில் பேசப்படும் ஒரு மொழியின் துணைப் பிரிவு என்று சொல்லலாம். அந்தப் பகுதிக்கெனத் தனிச் சொற்கள், உச்சரிப்புடன் அது அமைந்து இருக்[...] (உதாரணத்துக்குச் சென்னை, நெல்லை, கோவையில் பேசும் வேறுபட்ட தமிழைப் போல) உலகின் முதல் எழுத்து மொழி கி.மு. 4500 இல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

உலகில் 12.44 சதவீதம் பேருக்கு சீனாவின் மாண்டரின் மொழியே தாய் மொழி. சீன மக்கள்தொகை அதிகம் என்பதும் இதற்கு ஒரு காரணம். ஆபிரிக்கக் கண்டத்தில் மட்டும் ஆயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. தென்னாபிரிக்காவின் ஆட்சி மொழிகள் 11. உலகில் அதிக அதிகாரபூர்வ மொழிகள் உள்ள நாடு இது.

001.pdf 1 3/3/2015 4:05:34 PM

# விலங்குகளின் விநோதப்பழக்கங்கள்

## சாணி வண்டு



சாணி வண்டுகள் விலங்குகளின் சாணத்தை உண்டு வாழும். இனப் பெருக்கக் காலத்தில் பெண் வண்டு, முன்னங்கால்களைத் தரையில் ஊன்றி, பின்னங் கால்களால் சாணியை உருண்டையாக்கி உருட்டிச் செல்லும். வண்டின் எடையை விட, சாணியின் எடை அதிகமாக இருக்கும். ஈரமான இடத்தில் ஒரு குழி தோண்டி, சாணி உருண்டையைத் தள்ளிவிடும். பிறகு சாணிக்குள்ளே முட்டைகளை இட்டு, மண்ணால் மூடிவிட்டுக் கிளம்பி விடும். முட்டையில் இருந்து வரும் குஞ்சுகள் சாணியை உண்டு வளர்கின்றன. சாணி தீர்ந்த பிறகு வெளியே வந்து வசிக்கின்றன.

## யானைகளின் துக்கம்



மனிதர்களைப் போலவே யானை இறந்தால் ஏனைய யானை கள் கவலைப்படும். இறந்த யானையின் உடலை அவை மறைத்து வைக்கின்றன. காட்டில் ஏதாவது எலும்பு களைக் கண்டால் அவை தமது தும்பிக்கை யாலும் கால்களாலும் எலும்புகளை ஆராய்ச்சி செய்கின்றன. அது பல ஆண்டுகளுக்கு முன்பு இறந்த யானையின் எலும்பாக இருந்தாலும் அதை ஆராய்ந்து தெரிந்துகொள்கின்றன. இறந்த யானையைக் கண்டால், உடனே மரக்கிளை கள், இலைகளைப் போட்டு மூடவும் செய்யும். குறைந்தது இரண்டு நாள்களுக்காவது இறந்த யானைக்கு அருகி லேயே அவை நின்றுகொள்கின்றன. உணவு, தண்ணீருக்காகக் கிளம்பிச் சென்றாலும் மீண்டும் திரும்பி வந்துவிடுகின்றன.

## அடை காக்காத பறவை



குயில் சொந்தமாகக் கூடு கட்டுவதில்லை; அதனால் முட்டை இட்டு அடை காப்பதும் இல்லை. குயில்களுக்குக் கூடு கட்டத் தெரியாது. பெண் குயில், காக்கைக் கூட்டில் முட்டையை இட்டு விடும். தன்னுடைய முட்டைகளையும் குயிலின் முட்டையையும் சேர்த்துக் காகம் அடைகாக்கும். குயில்க் குஞ்சு காகத்தின் குஞ்சு போலவே இருப்பதால், காகம் உணவூட்டும். சற்று வளர்ந்த பிறகு, குயில்க் குஞ்சு பறந்துவிடும். காகத்தின் கூடு கிடைக்காவிட்டால், ஏதாவது ஒரு பறவையின் கூட்டில் குயில் முட்டையிட்டுவிடும்.

## இரத்தம் பாய்ச்சும் பல்லி



கொம்புப் பல்லி எதிரிகளிடமிருந்து தப்பிக்கத் தனது கண்களில் இருந்து இரத்தத்தைப் பீய்ச்சியடிக்கும் பழக்கம் கொண்டது. எதிரி குழப்ப ம் அடையும்போது, வேகமாகத் தப்பிச் சென்றுவிடும். இ ரத்தத்தில் வேதிப் பொருள் இருப்பதால் நாய், ஓநாய் போன்ற விலங்குகள் பாதிப்புக்கு உள்ளாகி விடுகின்றது.


# முன் கோபம்



ஒரு முன்கோபக்காரச் சிறுவன் இருந்தான். எடுத்ததற்கெல்லாம் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்தபடி, வயது வரம்பில்லாமல் எல்லோரையும் ஏசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான். இதனால் நாளடைவில் அவனை சுற்று வட்டா ரத்தில் பலருக்குப் பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். சிறுவனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரிய வில்லை. அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார். ஒவ்வொரு முறை ஆத்திரப் படும் போதும் சம்பந்தப் பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு, வீட்டுக்குப் பின்னால் உள்ள மர வேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும்படி பணித்தார். முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாள்கள் செல்லச் செல்ல அவன் தனக்குக் கோபமூட்டுபவர்களை வன்மை யாக ஏசுவதைக் கட்டுப் படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால், தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே. நாள டைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோப வெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாள்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை. அப்பாவிடம் போய் விவரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணி களை ஒவ்வொன்றா கப் பிடுங்கச் சொன் னார். அனைத்தையும் பிடுங்கி எடுக்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது. எல்லா ஆணிகளையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மக னும் வேலியைப் பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி ‘கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப்பிடுங்குவதுபோல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல்தைத்த இடத்தில் உள்ள வடு, இந்த ஆணிகள் ஏற்படுத் திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்’ என்று அவனுக்கு எடுத்துக் கூறினார். மகனும் அந்தக் கருத்திலுள்ள உண்மையை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.



# தெரிந்து கொள்வோம்





- நன்றிக்கு வால், கோபத்துக்கு வாய், அது என்ன?
  நாய்
- உயரத்தில் இருப்பிடம்.தாகம் தீர்ப்பதில் தனியிடம். அது என்ன?
  இளநீர்
- தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம். அது என்ன?
  அன்னாசிப்பழம்
- எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு. அது என்ன?
  நண்டு
- படபடக்கும்,பளபளக்கும், மனதுக்குள் இடம் பிடிக்கும், அது என்ன?
  பட்டாசு
- சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம். அது என்ன?
  நுளம்பு
- கந்தல் துணிக்காறி, முத்துப் பிள்ளைகள் பெற்றாள். அவள் யார்?
  சோளப் ப யிர்
- மரத்துக்கு மேலே பழம், பழத்திற்கு மேலே மரம் அது என்ன?
  அன்னாசிப்பழம்
- ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர். அது என்ன?
  தேங்காய்
- நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல்லாது அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம். அது என்ன?
  நத்தை

## அலங்கரிக்கும் பறவை



தோட்டப் பறவை எனப்படும் ‘பவர் பேர்ட்’ தன்னுடைய கூட்டை மிக அழகாக அலங்காரம் செய்யக்கூடியது. ஆண்தான் கூட்டைக் கட்டும். கண்கவர் பூக்கள், இறகுகள், அழகான கற்கள், உடைந்த பீங்கான்கள், பிளாஸ்டிக் பொருள்களைக் கொண்டு அலங்காரம் செய்யும். அலங்காரப் பொருள் அனைத்தும் ஒரே வண்ணத்தில் இருப்பது போலப் பார்த்துப் பார்த்து அழகாக அலங்கரிக்கும். இதற்காக நீண்ட தூரம் பறந்து செல்லும். பல மணி நேரம் செலவிட்டுக் கூட்டை அலங்கரித்தவுடன், பெண் பறவையைக் கூட்டுக்கு அழைத்து வரும். அலங்காரத்தால் சந்தோஷமடையும் பெண் பறவை, ஆண் பறவையுடன் சேர்ந்து குடும்பம் நடத்தும்.







# தெல்லிப்பழை தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ் விழா



தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தின் தமிழ் விழா ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் தெல்லிப்பழை அரிமாக் கழக மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.சிவானந்தராசா தலைமையில் இடம் பெற்றது.

தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து சங்குதப்பட்டை போகை, மேள வாத்தியம் முழங்கக் கொடி ஆலவட்டம் தாங்கி தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகளான கரகாட்டம், குதிரையாட்டம் மற்றும் வீர விளையாட்டுக்களில் ஒன்றான கம்படி, சிலம்புகள் சுற்றி வர விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து சங்கத்தின் கொடியை தலைவர் ஏற்றி வைக்க விருந்தினர்கள் மங்கள விளக் கேற்றி நிகழ்வுகள் ஆரம்பமாகின.






சைவ, கிறிஸ்தவ வழிபாடுகளைத் தொடாந்து தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு சங்கத்தின் செயலாளர் திருமதி கணேசதுரை பகீரதியினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்ஞநேயர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள் மற்றும் தென்னிந்திய திருச்சபையின் போதகர் அருட்திரு இராஜ்குமார், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை எ.ஜே.ஜேசுதாசன் அடிகளார் ஆகியோரது ஆசியுரைகள் இடம் பெற்றன.

வாழ்த்துரைகளை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய தேவஸ்தானத் தலைவர் கலா[illegible] செஞ்சொற் செல்வர் ஆறு.திரு முருகன் வழங்கியதைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியரும் ஆராய்ச்சியாளருமான எஸ்.சிவலிங்கராசா பிரதம விருந்தினர் உரையையும், அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் கம்பவாருதி இ.ஜெயராஜ் சிறப்புரையை நிகழ்த்தினார்கள். மூத்த கலைஞர்கள் மூவர் கௌரவிக்கப்பட்டார்கள். மல்லாகம் அபிநயா நாட்டிய மன்றத்தின் பணிப்பாளர் திருமதி சுகிர்தன் ஜெயந்தியின் மாணவிகளின் நடன நிகழ்வுகள் மற்றும் நாடகம் என்பனவும் இடம் பெற்றன. (வ–86)



## வெளிவந்தன திருமதி மைதிலி தயாபரனின் நூல்கள்



யாழ்.இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் திருமதி மைதிலி தயாபரனின் சொந்தங்களை வாழ்த்தி (நாவல்), வாழும்காலம் யாவிலும்(நாவல்), விஞ்சிடுமோ விஞ்ஞானம் (கவிதை) ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிறன்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியற் கல்லூரியில் யாழ் இலக்கியக் குவியத்தின் தலைவர் வேலணையூர் தாஸ் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

ஜெ.வினோத்தினுடைய வரவேற்புரையுடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில் நூலின் வாழ்த்துரையை கவிஞர் சத்தியபாலன் வழங் கினார். தொடர்ந்து நூலுக்குரிய அறிமுகத்தை சிறீகுமரன் நிகழ்த்தினார். தொடர்ச்சியாக நூல்களுக்குரிய ஆய்வுரைகளை ரமேஸ், குகபரன் ஆகியோர் வழங்கினர். அடுத்ததாக நூலாசிரியர் திருமதி மைதிலி தயாபரன் ஏற்புரையை வழங்கினார். இ[illegible] சத்தி யனின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறை[illegible]



# உங்களை வெற்றியாளராக உருவாக்குங்கள்



■ மது

சாதனை படைத்தவர்களின் கதைகளைப் படிக்கும்போது, அவர்களது வாழ்க்கையில் ஆபத்து என்ற ஓர் அம்சம் கட்டாயம் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். வெற்றிக்கான வழி என்பது யாரேனும் ஒரு சிலருக்கு சுலபமாக இருந்திருக்கலாம். ஆனால், பொதுவாக அந்த வழி பல்வேறு தடைகளும், கரடுமுரடான அம்சங்களும்–இடைஞ்சல்களும்–அபாயங்களும் கொண்டது. எனவே, அந்த வழியில் பயணிப்போர், கட்டாயம் ஏதேனும் ஒரு மாற்றுத் தீர்மானத்தை எடுத்தாக வேண்டியுள்ளது.

**புதிய செயல்முறைகள்**

உங்களது செயற்பாட்டில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் அணுகுமுறைகளையே பின்பற்ற நீங்கள் விரும்பலாம். அந்தவகையில், நீங்கள் அதைப் பாதுகாப்பாகவும் உணரலாம். எதற்காக, தேவையின்றி அணுகுமுறைகளை மாற்றி ஆபத்து எடுக்க வேண்டும் என்ற நினைப்பு வருவது சாதாரணம் தான். ஆனால், வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்று நினைக்கும் ஒருவர், சில புதிய வழிமுறைகளைப் பற்றி யோசிக்க வேண்டும். பலரும் பின்பற்றி, பழக்கப்பட்டு, அதனாலேயே எதையும் புதிதாக சாதிக்க முடியாமற்போன பழையவற்றை விடுத்து, புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் துணிய வேண்டும். அதற்காக, எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எதிலும் இறங்கி விடக்கூடாது. உங்களின் புதிய அணுகுமுறையைப் பற்றி ஒன்றுக்குப் பலமுறை நன்கு யோசித்து, திட்டமிட்டு, பின்னர் களமிறங்க வேண்டும். அப்போது தான் வெற்றிக்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகும்.

> **ஒருவர், தனது பணியில் முன்னேறிச் செல்ல, வேறு சில விடயங்களையும் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப முடிவெடுக்க வேண்டும். ஒருவர் ஒரு பணியில் நல்ல ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் எதிர்பார்த்ததைப் போன்று அவரின் பணி அமையாமல் போகலாம்.**

**எல்லையை விட்டு வெளியேறுதல்**

ஒரு நிறுவனத்தில் பணி புரிகையில், உங்களுக்கான பணியைப் பற்றி நன்கு அறிந்து வைத்து, அதில் சிறப்பாகச் செயற்படுவது முக்கியமான அடிப்படை. ஆனால், நீங்கள் பெரியளவில் பதவி உயர்வையும், சிறந்த பொறுப்புக்களையும் எதிர்பார்க்கும்போது, உங்களது பணியில் மட்டுமே கவனம் செலுத்தி, அதை மட்டுமே தெரிந்து வைத்துக்கொண்டு, உங்களைச் சுற்றி நிறுவனத்தில் நடக்கும் வேறு விடயங்களைப் பற்றி எதுவும் தெரியாமல் இருந்தால், உங்களுக்கான வருங்கால வாய்ப்புக்கள் சுருக்கமாகத்தான் இருக்கும். எனவே, நிறுவனத்திலுள்ள வேறு துறைகளின் பணிகளைப் பற்றியும் தேவையான அளவுக்கு அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான், பதவி உயர்வு என்று வருகையில், உங்களுக்கான வாய்ப்புக்களை பிரகாசப்படுத்திக் கொள்ளலாம்.

**முன்முயற்சி**

வெற்றி பெற்ற மனிதர்களுக்கு கட்டாயம் தலைமைத்துவப் பண்பு இருக்கும். ஒரு தலைவனாக இருப்பதற்கு மிக முக்கியமான மற்றும் தலையாய பண்பு என்னவெனில் முன்முயற்சி என்ற ஒன்று தான். எனவே, உங்களின் கோட்டைத் தாண்டி முதலில் வெளியே வர வேண்டும். ஒரு செயலில் தயக்கத்தை விடுத்து, முன்முயற்சியை மேற்கொள்ள வேண்டும். சூழலுக்கு ஏற்ற சிந்தனைகளை உருவாக்கி, அவைகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி உங்களின் செயற்பாட்டுத் திறனை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம், பிறரைவிட, உங்களது வெற்றிப் பயணம் வேகம்பெற்று, இலக்கை விரைவாக அடைந்து, சிறப்பான வெற்றியைப் பெறலாம்.

**தயக்கம் வேண்டாம்**

உங்களது சிந்தனைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாகத் தெளிவாக இருங்கள். நிறுவனத்தில், உங்களது மேலதிகாரி அல்லது நிர்வாக இயக்குநர், உங்களது செயற்றிட்டம் பற்றி கேட்கும் போது, அதைச் சிறப்பான முறையில் வெளிப்படுத்தத் தயங்க வேண்டாம். அது ஏற்கப்படுமா? அல்லது நிராகரிக்கப்படுமா? அல்லது குறுக்குக் கேள்வி கேட்கப்படுமா? என்பன போன்ற சந்தேகங்கள் உங்களுக்கு வேண்டாம். சாதனையாளர்களின் வெற்றிக்கு மிக முக்கிய காரணங்களுள் ஒன்று, அவர்கள், தங்களது எண்ணங்களை நம்பிக்கையுடன், தயக்கமின்றி மற்றும் தெளிவாக வெளிப்படுத்தியதே ஆகும். இந்தப் பண்பின் மூலம் எமது கருத்து, ஒருவேளை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும் கூட, எம்மீது நேர்மறையான அபிப்பிராயம் கட்டாயம் ஏற்படும். நாம், வேறு ஏதேனும் ஒரு சூழலில், எமது கருத்துக்களை தெரிவிக்க மீண்டும் அழைக்கப்படுவோம்.

**தோல்வி தான் வெற்றியின் அடிப்படை**

ஒருவர், ஒரு புதிய முன்முயற்சியை மேற்கொண்டு, மாற்று வழியில் பயணிக்கிறார் என்றாலும் கூட, அவருக்கு எல்லா நேரங்களிலும் உடனடியாக வெற்றி கிடைத்து விடுவதில்லை. தோல்விகளையும் சந்திக்க வேண்டியிருக்கும். ஆனால், அதற்காகச் சோர்ந்து விட்டால் அவ்வளவுதான். தோல்வியில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு, தவறுகளைத் திருத்தி, மீண்டும் முயற்சி செய்யும்போது, கட்டாயம் வெற்றிக் கனியைச் சுவைக்கலாம். மேற்கண்ட அம்சங்களைத் தவிர ஒருவர், தனது பணியில் முன்னேறிச் செல்ல, வேறு சில விடயங்களையும் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப முடிவெடுக்க வேண்டும். ஒருவர் ஒரு பணியில் நல்ல ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் எதிர்பார்த்ததைப் போன்று அவரது பணி அமையாமல் போகலாம். மேலும், அவர் பணிபுரியும் நிறுவனத்தின் எதிர்காலமும், தொழில்துறையைப் பொறுத்தவரை, நீண்டகால அளவில் நிச்சயமற்று இருக்கலாம். எனவே, இதுபோன்ற சூழலில், நீங்கள் நல்ல ஊதியம் பெற்று பாதுகாப்பாக இருந்தாலும் கூட, பணிமாறுகின்ற மாற்றுத் தீர்மானமொன்றை எடுக்கலாம். உங்களது ஆபத்து உங்களுக்குச் சாதகமாக அமையும்போது, நன்மைகளையும் அதுவே பாதகமாக அமைந்தால், அனுபவங்களையும் பெறலாம். அதேசமயம், அனுபவம் என்பதும் ஒரு வயது வரைதான்.

எல்லாக் காலங்களிலும் அபாயகரமான ஆபத்து எடுத்துக் கொண்டிருக்கவும் முடியாது. ஒரு குறிப்பிட்ட வயதை அடைவதற்குள், வாழ்க்கையில், தொழில்ரீதியாகவும், வருமான ரீதியாகவும் ஒரு அளவுக்கு கால்பதித்துவிட வேண்டும். அவ்விதம் இருப்பை உறுதிசெய்துகொண்ட பின்னர் எடுக்கும் தற்துணிவுத் தீர்மானம் வேறு மாதிரியானது. எனவே, வாழ்க்கையில் வெற்றி என்பது, பெரும்பாலானோருக்கு எளிதாக கிடைத்து விடுவதில்லை. அப்படி சில பேருக்கு எளிதாகக் கிடைத்து விட்டாலும், அதை தொடர்ந்து தக்க வைக்க, அவர் கடும் முயற்சி செய்ய வேண்டும். எனவே, தேவையான இடங்களில் தேவைகக்கேற்றவாறு தற்துணிவுடன் செயற்பட்டு, கடுமையாக உழைத்து, இலக்கை அடைய முடியும்.





# தன்னை உணர்தலே தரணியை வெல்ல வழி!

வெங்கடேசன்

என்னை ஆயிரம் பேர் நம்பலாம்; அது எனக்குப் பலமல்ல. ஆனால், என்னை நானே நம்புவது தான் எனக்குப் பலம்.

தாயின் கருவறையும் பூமித்தாயின் படுக்கை அறையுமே, ஒரு மனிதனின் வாழ்க்கைக் காலம் ஆகும். அதாவது தாயின் கருவறையிலிருந்து வெளிவந்து, வாழத் தொடங்கும் மனிதன், பூமித்தாயைச் சென்றடையும் வரை உள்ள காலமே அவனது வாழ்க்கைக் காலம்.

இந்த காலத்துக்கு இத்தனை ஆண்டுகள்தான் வரம்பு என்பது கிடையாது. இந்தக் காலம் நொடிப் பொழுதாகவும் இருக்கலாம். நாடி தளர்ந்து நடைப்பிணமாகி நிற்கும் காலமாகவும் இருக்கலாம்! அதாவது, மிக மிகக் குறுகிய மிக மிக நீண்டும் இருக்கும் தன்மை உடையதே வாழ்க்கைக் காலம் ஆகும்.

நிர்ணயிக்கப்படாத இந்தக் கால வரம்பில் தான் ஒவ்வொரு வரும் வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். அந்த வாழ்க்கையில் எல்லோருக்குமே ஆசைகளும், எதிர்பார்ப்புகளும் ஏராளம். கனவுகளும், கற்பனைகளும் கைகோர்த்து நிற்கும். மனிதர்களாகப் பிறந்துவிட்ட ஒவ்வொருவரும் வாழ்க்கை என்னும் நாடகத்தில் பயணம் செய்தே ஆக வேண்டும். இதில், எவரும் விதி விலக்குப் பெற்றுவிட முடியாது. ஆனால், வாழ்க்கைப் பயணம் மிகவும் சிரமமானது; சிக்கலானது. அதே சமயம் செழுமையையும், சிறப்பையும் தரக்கூடியது. வாழ்க்கையில் அளப்பரிய அனுபவங்களைப் பெறுகிறோம். பலரிடம் பேசிப் பழகுவதன் மூலம் அவர்களது குணநலன்கள், ஆற்றல், திறமை போன்றவற்றை எம்மால் நன்கு தெரிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய அனுபவம் எமக்குத் தேவைதான். இதனால் எமக்குப் பயனும் கிட்டும். ஆனால், பிறரது திறமையின் மீதும், ஆளுமையின் மீதும் நாம் நம்பிக்கை வைக்க வைக்க நாளாக, நாளாக எமக்குள் இருப்பதை மறந்து விடுகிறோம். எதற்கெடுத்தாலும் அவரிடம் ஒரு வார்த்தை கேட்கலாமே; இவரிடம் ஒரு வார்த்தை கேட்கலாமே என்ற நிலைமைக்கு மனத்தளவில் தள்ளப்பட்டு விடுகிறோம். இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன?

எம்முடைய சுயேச்சையான எண்ணம், சிந்தனை, செயல் ஆகிய எல்லாமே தடைப்பட்டுப் போகின்றன. ஒரு சின்னஞ்சிறு காரியத் தைச் செய்வது என்றால் கூட அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று எம்மால் சிந்திக்க முடியாமல் போகிறது. தயக்கம் மனதில் தோன்றி எம்மைத் தடுத்துக் குழப்பி விடுகிறது. எதிர்ப்பார்ப்பும் காத்திருப்பதுமே எமது வேலையாகி விடுகிறது. இதனால் எடுத்த காரியத்தை முடிக்க முடியாமல் எடுப்பார் கைப்பிள்ளையாகி மாறிவிடுகிறோம்.

இவையெல்லாம் எதனால் நிகழ்கின்றன? எமக்குள்ளேயே கேள்விகளை நாமே எழுப்ப வேண்டும். அந்தக்கேள்விகளுக்கு விடையும் காண வேண்டும். அதாவது, நான் யார்? எனக்குள் உள்ள திறமைகள் என்ன? எதையும் சமாளிக்கும் திறன் என்னிடம் உள்ளதா? என்று ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேள்விகளை எழுப்பினால் போதும். எமது மனதில் உறுதி பிறந்து எம்மை உற்சாகப்படுத்தி விடும். இதைத்தான் இரண்டாயிரம் வருடங் களுக்கு முன்பு கிரேக்க நாட்டு தத்துவஞானி சோக்ரட்டீஸ், "இளைஞனே! உனக்கு தரணியை வெற்றி கொள்ள ஆசை தான். அது தவறில்லை. ஆனால், தரணியை எப்படி வெற்றி கொள்வது என்று அறிந்துகொள்வதற்கு முன், உன்னையே நீ அறிந்து கொள். தன்னை உணர்தலே தரணியை வெல்ல வழி" என்று கூறிச் சென்றுள்ளார்.

ஆனால், இன்று எம்மில் எத்தனை பேர் சோக்ரட்டீசின் கருத் துக்களை ஏற்று, அதன்படி செயற்படுகிறோம்? என்று கேள்வியை எழுப்பினால் அதற்கான பதில் கேள்விக்குறியாகத் தான் இருக்கும். அதாவது, இன்று பலரும் தங்களை அறிந்து கொள்வதைவிட, தங்களை மறந்து கொள்வதிலேயே அதிக அக்கறை காட்டுகிறார்கள். பிறரைப்பற்றிப் பேசிக் கொள்வோரும் உண்டு.

**எப்படி என்று பார்ப்போம்..!**

ஒரு நாள், நான்கு பேர் அழகான சோலை ஒன்றில் கூடினர். அவர்கள் தங்களது எதிர் காலம் குறித் துப் பேசினார் களா, என்றால் அதுதான்



இல்லை.ஆனால், அவர் கள் அங்கு இல் லாத ஒரு நபரைப் பற்றி இட்டுக் கட்டி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சில நிமிடங்கள் கழிந்தன. அந்த நால்வரில் ஒருவன் தனக்கு வேலை இருப்பதாகக் கூறி விட்டு அவ் விடத்தை விட்டு புறப்பட்டு விட்டான். நால்வரில் ஒருவன் போன பின்னர் அங்கிருந்த [illegible]வரும் தங்களைப் பற்றிப் பேசினார்களா என்றால் அதுதான் இல்லை. பின்னர் யாரைப் பற்றிப் பேசினார்கள் அவர்கள்? சிறிது நேரத்துக்கு முன்பு அவர்களிடமிருந்து விடை பெற்றுச் சென்றானே நாலாமவன், அவ னைப் பற்றியே அம்மூவரும் தங் களுக்கிடையே காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது பேச்சில் அவனது நடத்தை முக்கிய இடம்பெற்றது. இன்னும் சில நிமிடங்கள் கழிந்தன. அங்கிருந்த மூவரில் மற்றொருவனும் சென்றுவிட்டான். அப்போது அங்கு இரண்டு பேரே இருந்தனர். அந்த இரண்டு பேரும் சற்று முன்னர் போனவனைப் பற்றிப் புழுதிவாரித் தூற்ற ஆரம்பித்தனர்.

**அடுத்த சில நிமிடங்களில்.[illegible]**

அங்கிருந்த இரண்டு பேரில் ஒருவன் எழுந்து சென்று விட்டான். இனி, அங்கிருந்தவன் ஒருவன் தான். அவன் யாரைப் பற்றிப் பேச முடியும். பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லையே... அங்கிருந்த போன மூன்று பேரைப் பற்றியும் தனக்குத்தானே உளறிக் கொண்டிருந்தான். தன்னந்தனியே அமர்ந்து தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தவனைப் பார்த்த சிலர், அவனை ஒரு மன நோயாளி என்று முடிவு கட்டி அவனிடம் பேசாமல் ஒதுங்கியே சென்றனர்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வதென்னை? தன்னைப் பற்றி எதுவும் சிந்திக்காமல் பிறரது திறமையையும், ஆற்றலையும் பற்றிக் கேலியும் கிண்டலும் செய்யக் கூடியவர்கள் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களேயாவர்.

இப்படிப்பட்ட இளைஞர்களைத் தமது காலத்தில் பார்த்த கிரேக்கத் தத்துவ ஞானி சோக்ரட்டீஸ், இளம் பிஞ்சுகளே! உங்களையே நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் என்று ஞானவேள்வி செய்தார். எனவே, எம்முடைய திறமையையும், ஆற்றலையும் நாம் தெரிந்தும் அறிந்தும் கொள்ள வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் வெற்றியை எளிதாக எட்ட முடியும்.

முயற்சித்துதான் பாருங்களேன்!

# வவுனியா பிரதேச செயலகத்தால் வெளியிட்டப்பட்ட 3 குறும்படங்கள்





வவுனியா மாவட்டத்தில் குறும்படத்துறையின் வளர்ச்சிப் போக்கைக் காட்டக்கூடிய வகையில் சி. சுபாஸ்சிங்கத்தின் தயாரிப்பு இயக் கத்தில் உருவான 'போதைப்பொருள்', சு.வரதகுமாரின் தயாரிப்பிலும் த.பிரியந்தனின் இயக்கத்திலும் உருவான 'வள்ளுவன்' சு.வரதகுமாரின் தயாரிப்பு இயக்கத்தில் உருவான 'பரிதவிப்பு' ஆகிய மூன்று குறும்படங்கள் வவுனியா பிரதேசசெயலாளர் கா.உதயராசா தலைமையில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

குறும்படங்களை கா.உதயராசா வெளியிட்டு வைத்து முதற்பிரதியை வவுனியா பிரதேச செயலக ஆவணகாப்பகத்துக்காகப் பெற்றுகொண்டார்.

குறும்படங்கள் கலாசார விழிப்புணர்வைச் சித்திரிக்கும் வகையில் வெவ்வேறு கலாசார விழிப்புணர்வுக் கருக்களைக் கொண்டமைந்திருந்தன. போதைப்பொருள் குறும்படம், போதைப்பொருளால் ஏற்படும் தீங்கைப் பற்றிச் சொல்கிறது. வள்ளுவன், தமிழ் மொழிப் பற்றைப் பற்றிச் சொல்கிறது. பரிதவிப்பு, தனிமையால் வாடும் வயோதிபரின் அவலத்தைச் சொல்கிறது. இந்த மூன்று கருக்களும் இன்றையயதார்த்தத்தைசுட்டிக்காட்டுகின்றன.

போதைப் பொருள் குறும்படம் போதை பற்றிய நினைப்பு இல்லாத ஓர் இளைஞன் இன்னோர் இளைஞனால் போதைப் பொருள் பாவனைக்கு தூண்டப்படுவதாகவும், அவன் போதை ஊட்டப்பட்ட பின் அங்கும் இங்குமாக அலைந்து திரிவதாகவும், படப்பிடிப்பு காட்சிகள் சொல்கின்றன. அதனை மருத்துவர் ஒருவர் கேட்கிறார். அவன் வார்த்தையால் சொல்ல காட்சி படப்பிடிப்பில் காட்டப்படுகிறது. காட்சிகளே கதை சொல்லும்; உரை எதற்கு என்ற கேள்வி பார்வையாளர் மத்தியில் எழுந்தது. படப்பிடிப்பில் கருவில் முன்னேற்றம் இருப்பினும், படத்தொகுப்பு நடிப்பில் இன்னொரு படிநிலையை எட்டவேண்டும் என்பதும், சொல்லவந்ததைச் சொல்ல வலிமையான காட்சிகளே போதுமானது.



கருவிலும் கதை அமைப்பிலும் சமூகத்துக்குச் சொல்லவேண்டிய குறுகிய நேரத்தில் குறும் படம் ஊடாக இயக்குநர் சி.சுபாஸ்சிங்கம் சொல்கிறார். அவருக்கு வாழ்த்துக்களும் பராட்டுக்களும் உரித் தாகட்டும்.

வள்ளுவன் குறும்படம் வெளிநாட்டு மோகத்தால் வெளிநாடொன்றுக்குச் செல்லும் ஒருவர் அங்கு தனது தாய் மொழியை மறக்க முற்படுகின்றார். சந்தர்ப்பம், சூழ்நிலை அவரை மாற்றுகிறது.

உனது அம்மாவை மறக்கவில்லை; உனது அப்பாவை மறக்கவில்லை; உன்னை நீ மறக்கவில்லை; ஏன் உனது தாய் மொழியை நீ மறந்தாய்? வள்ளுவன் கேட்கின்றான், அடிக்கின்றான். படம் முடிகிறது. கதையமைப்பு, படப்பிடிப்பு, படத்தொகுப்பு இவற்றில் முன்னேற்ற மான நிலையில் உள்ள இந்தப்பட மொழி எமது பேச்சுப் பாணியில் அமைய வேண்டும். சினிமாப்பேச்சாக அமையாது எமது பேச்சு மொழியாக எமது பண்பாட்டு மொழியாக அமைய வேண்டும் என்ற விளக்கம் பார்வையாளரால் சொல்லப்பட்டது.

வெளிநாட்டில் நம்மவர் நிற்கும் காட்சி படத்தொகுப்பின் வளர்ச்சியைக் காட்டுகிறது. இயக்குநர் த.பிரியந்தனுக்கும் குறும்படத்தில் பங்கு பற்றியவர்கள் எல்லோருக்கும் பாராட்டுக்கள்.

பரிதவிப்பு குறும் படத்தில் நடிப்பு படத்தொகுப்பு படப்பிடிப்பு சிறப்பாக இருந்ததாக பார்[illegible] யாளர் தரப்பில் சொல்லப்பட்டது. மன[illegible] உருக வைக்கும் உணர்ச்சி, செழிமை இருப்பதாகவும் சற்று செந்தமிழை தவிர்த்திருப்பின் நல்லது என்றும் சிறு அங்க அசைவில் குறைபாடுள்ளதாகவும் அமைந்த குறும்படத்தின் இறுதியில் வயோதிப நடிகரின் நடிப்பு உச்சம் கண்ணீர் மல்க வைக்கிறது. தனது பிள்ளைகளின் இழப்பை நினைத்து வருந்துகிறார். "எல்லாரும் என்னை விட்டுட்டு போட்டியளே.." உருக்கமான வசனம் எழுத்துருவின் வளர்ச்சியைச் சொல்வதாகவும் இருந்தது.

மூன்று குறும்படங்களுமே கலாசார விழிப்புடன் நல்ல கருத்துக் களைச் சொல்கின்றன. சகல குடும்பங்களும் பார்க்க வேணடும் என்று பார்வையாளர் தரப்பில் இருந்து விமர்சனம் கிடைக்கப் பெற்றது.

வடமாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டு, துறை அமைச்சின் கீழ் உள்ள பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிப்பங்[illegible]புடன் வவுனியா பிரதேச செயலாள[illegible] கா.உதயராசா, வவுனியா பிரதேச கலாசா[illegible]த்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகி[illegible]ார் மற்றும் வவுனியா பிரதேச கலாசார உ[illegible]தியோகத்தர்கள், குறும்படத்தில் பங்கே[illegible] கலைஞர்கள், குறும்படவெளியீட்டில் கலந்[illegible] கொண்ட தமிழ்மணி அகளங்கன், ஆய்வாள[illegible]ரும் ஊடகத்துறை சார்ந்தவருமாகிய அருணா செல்லத்துரை, சமூக ஆர்வலர்கள் பலருக்கும் இயக்குநர்கள் நன்றி தெரிவித்ததுடன் தம்முடைய படைப்புக்களுக்கு போதிய நிதி வசதிகளை செய்வதற்கு அரசுமுன்வரவேண்டும் என்ற கோரிக்கை முன்வைப்புடன் இவ்விழா இனிது நிறைவுற்றது. (வ=402)